இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 15 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 07 – வியாழக்கிழமை 24 ஆகஸ்ட் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 15 : Thiruvalluvar Year - 2054 - Aavani 07- Thursday 24 August 2023 - Madurai 16 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு! அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளி;

# மாணவர்களே, நல்லிணக்கத்தின் பண்பை எடுத்துச் செல்க!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

**சென்னை, ஆக. 24 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில், "தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு! அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளி நல்லிணக்கத்தின் பண்பை எடுத்துச் செல்லுங்கள்" என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.08.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

நேரத்தின் அருமையை கருதி இங்கே குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம்தான் நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள இருக்கக்கூடிய போட்டியில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளுக்கு பின்னால் நம்முடைய அமைச்சர் அவர்களும் மற்றும் நிர்வாகிகளும் இங்கே வழங்கவிருக்கிறார்கள். ஆகவே, தயவுகூர்ந்து எல்லாம் பொறுத்தருளுமாறு உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**என்னை சுறுசுறுப்பாக இயக்குபவர்கள் மாணவர்களும், இளைஞர்களும்தான்!**

எப்போதும் என்னை சுறுசுறுப்பாக வைத்திருக்கக்கூடிய, ஊக்கம் தரக்கூடிய வகையில் என்னை இயக்கிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் என்று கேட்டால், மாணவர்களும், இளைஞர்களும்தான். எனவே, அப்படிப்பட்ட மாணவ - மாணவியர்கள் நிரம்பியிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில், உங்களிடையே இருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"தலை நிமிரும் தமிழகம்" என்ற என்னுடைய தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கத்தை, கல்லூரி மாணவர்களிடம் கொண்டு போய் சேர்க்கவேண்டும். அந்த அடிப்படையில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தைச் சார்ந்த சகோதரர்கள், நிர்வாகிகள் இந்தப் பேச்சுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி, அதில் மாநில அளவில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கியிருக்கிறோம்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். செஞ்சி மஸ்தான், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. பீட்டா ஹரிஷ் தக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால், என்னைக் கேட்டால், இந்த பேச்சுப் போட்டிகளின் மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ள இளம் பேச்சாளர்களைத்தான், தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் கிடைத்த பெரும் பரிசு என்றுதான் நான் சொல்லுவேன்!

### கழகத்தின் கூட்டங்களை மாலை நேரக் கல்லூரி என்பார்கள்!

**பேச்சுக் கலை எல்லோருக்கும் எளிதில் வந்து விடாது!**

ஏனென்றால், பேச்சுக்கலை என்பது எல்லோருக்கும் எளிய வகையில் வந்துவிட முடியாது. மேடைகளில் பேசுபவர்கள் தங்களுக்கெனத் தனி பாணியை உருவாக்கிக் கொண்டு, அதற்கென ரசிகர்களை ஈர்த்தவர்கள் எத்தனையோ பேர், நம் தமிழ் மண்ணில் இருந்தார்கள்; இன்றைக்கும் இருக்கிறார்கள்.

பேச்சாற்றலால் நம் தமிழ் நிலம் பண்படுத்தப்பட்ட வரலாற்றை நீங்கள் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அதனை எல்லோர்க்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். டி.எம்.நாயர் அவர்களின் 'ஸ்பர்டாங்க்' உரைபோல், உங்களது உரைகள் வருங் காலங்களில் பலருக்கும் கையேடாக இருந்துவிட வேண்டும்.

**எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம் தி.மு.கழகம்!**

திராவிட இயக்கம் என்பதே பேசிப் பேசி வளர்ந்த இயக்கம்; திராவிட இயக்கம் என்பதே எழுதி எழுதி வளர்ந்திருக்கக்கூடிய இயக்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டங்களை 'மாலை நேரக் கல்லூரிகள்' என்று அழைப்பதுண்டு. அந்தளவிற்கு அறிவாற்றல், சொல்லாற்றல் அதில் அடங்கியிருக்கும்.

பகுத்தறிவுக் கருத்துகளை பட்டெனச் சொல்லும் நம்முடைய ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், அவர் இந்த சமுதாயத்திற்காக என்னென்ன கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்பது இதன் மூலமாக நாம் அறிந்து கொண்டாகவேண்டும். அதேபோல், உலக அரசியலையெல்லாம் தன் மயக்கும் மொழியாலேயே சொல்லி அறிவூட்டியவர் யார் என்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அடுக்கு மொழியிலும் கனல் தெறிக்கக்கூடிய வசனங்கள் பேசி தமிழர்களுக்கு உணர்ச்சியை ஊட்டியவர் யார் என்றால், இன்றைக்கு நூற்றாண்டு விழா காணக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி அவர்களை எல்லாம் வழிகாட்டிகளாகக் கொண்டு நம்முடைய ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

"அஞ்சாநெஞ்சன்" பட்டுக்கோட்டை அழகிரி - "டார்ப்பீடோ" ஏ.பி.ஜனார்த்தனம் - "சிந்தனைச் சிற்பி" சி.பி.சிற்றரசு - "நடமாடும் பல்கலைக்கழகம்" நாவலர் நெடுஞ்செழியன் - "சொல்லின் செல்வர்" ஈ.வெ.கி. சம்பத் - நம்முடைய இனமான பேராசிரியர் அன்பழகன் அவர்கள். இவர்களெல்லாம் இனமான உணர்வூட்டிய பேச்சாளர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்கள். அது நீளமாக இருந்து கொண்டே இருக்கும்.

**அமைச்சர் செஞ்சி மஸ்தான் போட்டியை சிறப்பாக நடத்தி காட்டியவர்!**

இப்படி வரலாறு போற்றும் பேச்சாளர்களை உருவாக்கித் தரும் களமாக, இந்த போட்டியைச் மிகச் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள். அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்கள், அந்தப் பணியை சிறப்போடு செய்து காட்டியிருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய மதிப்பிற்குரிய தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் என்னுடைய பெருமதிப்பிற்குரிய பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து, ஊக்குவிக்கும் அந்தப் பணியை நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் செய்திருக்கிறார்கள். நான் நினைத்துப் பார்க்கிறேன், இப்போது மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து இந்தக் காட்சியை பார்த்திருந்தால் அவரைவிட மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது. நாமெல்லாம், ஆற்றலோடு அல்ல, ஏதோ ஓரளவுக்கு பேசக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கெல்லாம் காரணம் எத்தனையோ பேர் இருக்கலாம் அதில் முக்கிய காரணமாக இருந்தவர் யார் என்று கேட்டால், நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் தான். சட்டமன்றத்தில், அதே போல மக்கள் மன்றத்தில் பேசக்கூடிய பேச்சுக்களை எல்லாம் நான் கேட்பதுண்டு. அவரே பலமுறை என்னிடத்தில் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்.

**எனக்கு பல ஆலோசனைகளை வழங்கியவர் பீட்டர் அல்போன்ஸ்!**

அமைதியாக உட்கார்ந்துகொண்டு

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# டெல்டா மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்கு நாட்கள் பயணம்!

## பல நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

**தஞ்சை, ஆக. 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நான்கு நாட்கள் பயணமாக காவிரி டெல்டா மாவட்டங்களுக்குச் சென்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி அதிகாரிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கிறார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட கழகத்தினர் தீவிர ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.**

*இதுபற்றிய விவரம் வருமாறு:-*

*முதல் நாள் நிகழ்ச்சியாக இன்று முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி கலையரங்கம் திறப்புவிழா, பவளவிழா மலர் வெளியீட்டுவிழா, திருக்குறள் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரையாற்ற உள்ளார்கள். இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.*

**திருக்குவளையில் காலை உணவுத் திட்டம்!**

*நாளை (25ந்தேதி) திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் படித்த பள்ளியில் தமிழக அரசின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.*

*அதன் பின்னர் பிற்பகல் நாகை மாவட்டத்திற்குப் புறப்பட்டு செல்கிறார்.*

**வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு!**

*அங்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சி திட்டப் பணிகளை துறைவாரியாக ஆய்வு செய்கி றார்.*

*26ந்தேதி காலையில் நாகை மாவட்ட கல்வி அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்துகிறார்.*

*பின்னர் 27ந்தேதி நாகை எம்.பி.செல்வராஜ் இல்ல திருமண நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் இன்று திருச்சி சர்வதேச விமான நிலையம் வந்தடைகிறார்.*

*முதலமைச்சர் வருகையை முன்னிட்டு மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் விழாக்கோலம் பூண்டு வருகிறது. காவிரி டெல்டா மாவட்டக் கழகத்தினர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றிட தயாராகி வருகின்றனர்.*


## மேட்டூர் அணைக்கு

# நீர்வரத்து 14,159 கனஅடியாக அதிகரிப்பு!

மேட்டூர், ஆக. 24 –

கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகள், கேரள மாநிலம் வயநாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இதையடுத்து பாதுகாப்பு கருதி, காவிரியில் உபரிநீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 2வது நாளாக நேற்று முன்தினமும் 16 ஆயிரம் கனஅடியாக நீடிக்கிறது. நீர்வரத்து அதிகரிப்பால், ஒகேனக்கல் காவிரி



யில் பரிசல் இயக்குவதற்கு 7வது நாளாக தடை நீடிக்கிறது.

இதேபோல், மேட்டூர் அணைக்கான நீர்வரத்தும் அதிகரித்து வருகிறது. 13,638 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 14,159 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு, விநாடிக்கு 10ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

திறப்பை காட்டிலும், வரத்து அதிகமாக இருப்பதால், நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. 55.14 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று முன்தினம் காலை 55.64 அடியானது. நீர் இருப்பு 21.54 டி.எம்.சி. யாக உள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 24-08-2023

# பா.ஜ.க. ஊழல் முகம்!

ஆயுஷ்மான் பாரத் - திட்டத்தில் நடந்த முறைகேடு வெளிச்சத்துக்கு வந்ததன் மூலம் பா.ஜ.க. எத்தகைய ஊழல் கட்சி என்பது அம்பலமாகி உள்ளது.

ஒரே போலி எண்ணில் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டு ஊழல் புரியப்பட்டுள்ளது. இறந்துபோன 88 ஆயிரம் பேரின் வங்கிக்கணக்கில் காப்பீட்டுத் தொகை வரவு வைக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. பா.ஜ.க.வின் ஊழல் முகம் கிழிந்தது தெரிகிறது.

**“கரையான்களைப் போல ஊழல் நாட்டின் அமைப்புகளை அரிக்கிறது” என்று டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றியிருந்தார் பிரதமர் மோடி. ஆனால், நரேந்திர மோடி ஆட்சியில் பல்வேறு திட்டங்களில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம், துவாரகா விரைவு சாலைத் திட்டம் உள்ளிட்ட 7 திட்டங்களில் பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்யப்பட்டிருப்பதை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, 2018-ஆம் ஆண்டு ஆயுஷ்மான் பாரத் என்ற மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இந்தத் திட்டத்தின்கீழ், ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் மொத்தம் 7 கோடியே 87 லட்சம் பேர் பயன்பெற்று வருகின்றனர் என்று ஒன்றிய அரசு கூறியது.

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்தில் மிகப்பெரிய அளவில் முறைகேடு நடந்திருப்பதாக, தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலகமான சி.ஏ.ஜி. அறிக்கை மூலம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

★ **ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற நோயாளிகளில் 88 ஆயிரத்து 760 பேர் இறந்துவிட்டனர். ஆனால், அவர்கள் இறந்த பின்னரும், சிகிச்சை அளிக்கப்படுவதாகக் கூறி 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.**

★ **பா.ஜ.க. ஆளும் மத்தியப்பிரதேசத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், சிகிச்சை பெற்ற பின் இறந்ததாக அறிவிக்கப்பட்ட 403 நோயாளிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதே காலகட்டத்தில், மத்தியப் பிரதேசத்தில் உள்ள பல மருத்துவமனைகளில் 8 ஆயிரம் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டதாக கணக்கில் கூறப்பட்டுள்ளது. சிகிச்சை பெற்று வந்த நோயாளி உயிரிழந்த பிறகும், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக கணக்குக் காட்டி காப்பீடுத் தொகை பெறப்பட்டுள்ளது.**

★ தகுதியில்லாத குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டு, சுமார் 22 கோடியே 44 லட்சம் ரூபாய் வரை பயன்பெற்றுள்ளதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கை கூறியுள்ளது.

★ ஒரே நேரத்தில் ஒரு நோயாளி பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கணக்குக் காட்டி காப்பீட்டுத் தொகை பெறப்பட்டு மிகப்பெரிய முறைகேடு நடந்திருப்பதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

★ ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில், சுமார் ஏழரை லட்சம் பயனாளிகளின் ஆதார் எண், ஒரே செல்போன் எண்ணுடன் இணைக்கப்பட்டிருப்பதையும் சி.ஏ.ஜி அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

★ வெறும் ஏழு ஆதாருடன் 4 ஆயிரத்து 761 பதிவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

★ 9 லட்சத்து 85 ஆயிரம் பேர் தங்களது தொலைபேசி எண் 3 என பதிவு செய்துள்ளனர்.

★ 7 லட்சத்து 49 ஆயிரத்து 820 பயனாளிகள் 9999999999 என்ற ஒரே தொடர்பு எண்ணை அளித்துள்ளனர்.

★ இந்த ஏழரை லட்சம் பயனாளிகள் கொடுத்த ஒரே தொடர்பு எண்ணும் போலியானது.

★ 8888888888 என்ற ஒரே தொடர்பு எண் ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 300 பயனாளிகள் கொடுத்துள்ளனர்.

★ 9000000000 என்ற ஒரே எண்ணை 96 ஆயிரத்து 46 பேர் தொடர்பு எண்ணாக அளித்து மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

★ 9 லட்சம் பேர் தொடர்பு எண் எதுவும் கொடுக்காமலும் ஒன்றிய அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

**- இப்படி பிரதமர் மோடியால் அறிமுகப்படுத்தப்பட்ட, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில், நிதியை தவறாகப் பயன்படுத்துதல், போலிக் கணக்குகள், முறையான ஆதாரங்கள் இல்லாமல் நிதியை விடுவித்தல் என பல ஓட்டைகளும், முறைகேடுகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆயுஷ்மான் பாரத் திட்டம், மோடி அரசின் வரலாற்று பெருமைமிக்க திட்டம் என பா.ஜ.க.வினர் தங்களுக்குத் தாங்களே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நிலையில், இந்த திட்டத்தில் மிகப்பெரிய ஊழலும் முறைகேடும் நடந்திருப்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

‘எங்களது ஆட்சியில் ஊழல் நடந்தது இல்லை’ என்று இதுவரை சொல்லி வந்த பி.ஜே.பி.யினர், இப்போது சி.ஏ.ஜி. அறிக்கையைப் பார்த்து வாயடைத்து நிற்கிறார்கள்.

பிரான்ஸ் நாட்டின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடம் இருந்து 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு பா.ஜ.க. அரசு ஒப்பந்தம் போட்டது. இதன் மொத்த மதிப்பு 59 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டது. “எங்களது ஆட்சிக் காலத்தில் ஒரு விமானத்தை 526 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்குத்தான் ஒப்பந்தம் போட்டோம். ஆனால் பா.ஜ.க. ஆட்சி ஒரு விமானத்தை 1670 கோடி ரூபாய்க்கு வாங்கப் போவதாக ஒப்பந்தம் போட்டுள்ளது. இதனால் பலனடைந்தவர்கள் யார்?” என்று காங்கிரசு கட்சி கேள்வி எழுப்பியது. இதுதான் பா.ஜ.க.வின் ஊழல் முகம் ஆகும்.

“அமெரிக்காவிடம் இருந்து ரூ.25,000 கோடி மதிப்பில் இந்தியா வாங்கும் 31 பிரிடேட்டர் டிரோன்கள் பேரத்தில் முறைகேடு நடந்திருப்பதாகவும், மற்ற நாடுகளை விட இந்தியா 4 மடங்கு அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும்” ஊடகங்கள் எழுதத் தொடங்கி இருக்கின்றன. ஸ்தம், கதக் ரக டிரோன்களை உருவாக்க டி.ஆர்.டி.ஓ.வுக்கு ரூ.1786 கோடியை ஒதுக்கிவிட்டு, அமெரிக்காவிடம் ரூ.25,000 கோடி கொடுத்து டிரோன்களை வாங்குவது ஏன்? இதுதான் பா.ஜ.க.வின் ஊழல் முகம் ஆகும்.

**கடந்த ஆண்டு மட்டும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் இருந்து பா.ஜ.க. பெற்ற நன்கொடை 614 கோடி ரூபாய் என்று சொல்கிறது இந்திய தேர்தல் ஆணையத்தின் புள்ளிவிபரம். 2016-17 ஆம் ஆண்டில் இருந்துதான் இந்த நன்கொடைகள் அதிகம் ஆனது. அந்த ஆண்டு பா.ஜ.க. ரூ.532 கோடி நன்கொடை பெற்றது. அதற்கு முந்தைய ஆண்டு பா.ஜ.க. பெற்ற நன்கொடை என்பது ரூ.76.85 கோடிதான். அதாவது ஒரே ஆண்டில் ஏழு மடங்கு அதிகமாக ஆகிவிட்டது. ஆட்சிக்கு வந்த இரண்டாவது ஆண்டில் நன்கொடைகள் அதிகம் ஆனது. இதுதான் பா.ஜ.க.வின் நிஜ முகம் ஆகும். இதனை மறைக்கவே மதவாதத்தை கையில் எடுத்துக் கொள்கிறார்கள். இதுதான் பா.ஜ.க.வின் உண்மையான முகம் ஆகும்.**

ஊழல் ஒழிப்பு என பிரதமர் சொல்லி வருவது தனது ஆட்சியில் ஊழல் அதிகமாகி வருவதைத்தான்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாநில அளவில் வெற்றி பெற்ற 5 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டி அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கிராமப்புற மாணவர்களும் கை நிறைய சம்பளம் பெற முடியும்!

# வேலை வாய்ப்புகளை அள்ளிக் குவிக்கும் ‘நான் முதல்வன்’ திட்டம்!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு

**சென்னை, ஆக.24-**

**வேலை வாய்ப்புகளை அள்ளிக் குவிக்கும் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் கிராமப்புற மாணவர்களும் கை நிறைய சம்பளம் பெற முடியும் என்று ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து நேற்றைய தினத் தந்தி தலையங்கம் வருமாறு:-

சில ஆண்டுகளுக்கு முன்னால், புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் ஒருவர், தமிழ்நாட்டு இளைஞர்களிடம் வேலைகளுக்கான தகுதி இல்லை, உரிய திறன் இல்லை, ஆங்கிலத்தில் புலமை இல்லை என்றார். முதல்அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதும், புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க பல சலுகைகளை அளித்தார். இதன் பயனாக பல உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வம் காட்டின. அவர்கள் முதல் அமைச்சரை சந்தித்து பேசும்போது, “நாங்கள் புதிய கம்பெனிகளை தொடங்கினாலும், அதில் வேலை செய்வதற்கு திறமையான இளைஞர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது” என்று தெரிவித்தார்கள்.




ஒரு பக்கம் வேலை இல்லாமல் திண்டாடும் இளைஞர்கள். மறுபக்கம் வேலைவாய்ப்புகள் இருந்தாலும், அதற்கு தேவையான திறமையுள்ள இளைஞர்கள் இல்லாத நிலை. இந்த இரு மலைகளையும் இணைக்கும் பாலம்தான் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிந்தையில் உதித்த ‘நான் முதல்வன்’ திட்டம். தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைத்து திறன்களையும் பெற்று, எல்லா திறன்களிலும் ‘நான் முதல்வன்’ என்ற நிலையை எய்தவேண்டும் என்ற குறிக்கோளில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் 1ந்தேதி, அவருடைய பிறந்த நாளன்று ‘நான் முதல்வன்’ திட்டத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களுக்கு, அவர்கள் படிக்கும் காலத்திலேயே அனைத்து திறன்களிலும் பயிற்சி அளித்து, எந்த வேலைக்கும் தகுதியுள்ளவர்கள் என்று ஆக்கும் வகையில், அனைத்து என்ஜினீயரிங் கல்லூரிகள், கலைக் கல்லூரிகளிலும் பல்வேறு திறன்களுக்கான, குறிப்பாக நவீனதகவல்தொழில்நுட்பங்களுக்கான பாடப்பயிற்சி செயல்முறை விளக்கங்களோடு வழங்கப்பட்டது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குனர் இன்னசென்ட் திவ்யா மற்றும் அதிகாரிகள், இந்த திட்டத்தை மிகவும் வெற்றிகரமான திட்டமாக்கவேண்டும் என்று தீவிர முயற்சிகளை எடுத்தனர். முதல்அமைச்சரும் அடிக்கடி இது குறித்து ஆய்வுகளை நடத்தி, ஒரு உந்து சக்தியாக விளங்கினார்.

கடந்த ஒரு ஆண்டில், இந்த ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் 10 லட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சி என்ற இலக்குக்கு மேலாக, 13 லட்சத்து 14 ஆயிரத்து 519 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 445 என்ஜினீயரிங் கல்லூரிகளில் வழங்கப்பட்ட திறன் பயிற்சிகள் மூலமாக 65 ஆயிரத்து 34 மாணவர்களும், இறுதி ஆண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பினை முடித்த 83 ஆயிரத்து 223 மாணவர்களும் பணி நியமன ஆணையைப் பெற்றுள்ளனர். இது மட்டுமல்லாமல், 25 ஆயிரத்து 926 இளைஞர்கள் வேலைவாய்ப்புகளும் பெற்றுள்ளனர். ஆக, மொத்தம் இந்த ஒரு ஆண்டிலேயே ‘நான் முதல்வன்’ திட்டம், ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 183 பேர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுத் தந்து, அவர்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்திருக்கிறது.

தலைநகரத்தில் இருக்கிற தலைசிறந்த கல்லூரிகளில் படித்தால் தான் சிறந்த வேலைவாய்ப்பும், எதிர்காலமும் இருக்கும் என்ற மாயை இப்போது தகர்த்தெறியப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள எந்த மூலை முடுக்கில் உள்ள கல்லூரி என்றாலும் சரி, அங்கு ‘நான் முதல்வன்’ திட்டத்தில் வழங்கப்படும் திறன் பயிற்சிகள் மூலம், கிராமப்புற மாணவர்களும் கை நிறைய சம்பளத்துடன் வேலைவாய்ப்பு பெற முடியும் என்ற நிலையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கையால் பணி நியமன ஆணையைப் பெற்ற மாணவர்கள் நிரூபித்து விட்டார்கள்.

இவ்வாறு ‘தினத்தந்தி’ நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### என்.எல்.சி. ஒப்பந்தத் தொழிலாளர்களின் கோரிக்கையை

# ஒன்றிய அரசு 8 வாரங்களில் பரிசீலிக்க வேண்டும்!

## உயர் நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, ஆக.24-*

*என்.எல்.சி. ஒப்பந்த தொழிலாளர்களின் கோரிக்கை மீது 8 வாரங்களில் முடிவெடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து என்.எல்.சி. ஜீவா ஒப்பந்த தொழிலாளர்கள் போராட்டத்திற்கு தடை விதிக்ககோரி என்எல்சி நிறுவனம் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது ஒப்பந்த தொழிலாளர்கள் மற்றும் என்.எல்.சி. நிர்வாகத்துக்கு இடையிலான பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்த உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிப்பது குறித்து பதிலளிக்கும்படி என்எல்சி மற்றும் ஒன்றிய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.*

*இந்த வழக்கு நீதிபதி தண்டபாணி முன்பு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஒப்பந்த தொழிலாளர்கள் தரப்பில் நீதிமன்ற நிவாரணத்தை எதிர்பார்த்து போராட்டத்தை திரும்பப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, ‘ஒப்பந்த தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை இரண்டு வாரங்களில் ஒன்றிய அரசுக்கு தெரிவிக்க வேண்டும். அந்த கோரிக்கையை பெற்று 8 வாரங்களில் அதன் மீது சட்டப்படி உரிய முடிவெடுத்து ஒன்றிய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்கள் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் வரை எந்த ஒரு போராட்டத்திலும் தொழிலாளர்கள் ஈடுபடக் கூடாது.*

*அதுவரை போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையும் என்.எல்.சி. நிர்வாகம் எடுக்க கூடாது என்று உத்தரவிட்டார். விசாரணையின் போது அணுமின் நிலையங்களும் அனல் மின் நிலையங்களும் மூடப்படும் நாளை இயற்கை ஆர்வலர்களும் இந்த நீதிமன்றமும் எதிர்பார்த்திருக்கிறது. அணுமின் நிலையம் அனல் மின் நிலையங்களுக்கு மாற்றாக சூரிய மின்சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி முறைகளை கையாள வேண்டும். காவிரி நதி மீது சூரிய மின்சக்தி ஆலைகளை அமைத்தால் என்.எல்.சி.யில் இருந்து கிடைக்கும் அளவுக்கு மின்சாரம் கிடைக்கும் என்று நீதிபதி குறிப்பிட்டார்.*



தூத்துக்குடியில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலக கட்டிடத்தை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர்ஜெனிட்டா செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, ஆக. 24 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப்போட்டி பரிசளிப்பு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2023) சென்னை, கோயம்பேடு, தூய தாமஸ் கல்லூரி அரங்கத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் “தலை நிமிரும் தமிழகம்” என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தை கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவ, மாணவியருக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப்போட்டிகளை நடத்தியது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும், உணர்ந்தும், தெளிய வேண்டிய உன்னத விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாகவும், தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்பேச்சுப் போட்டிகளில் 4,000 மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு தலா ரூ.20,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 ஆகிய பரிசுகளும், மாநில அளவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தனியாக பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ, மாணவியருக்கு தலா ரூ.1,00,000, ரூ,50,000 மற்றும் ரூ.25,000 ஆகிய பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ, மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ, மாணவியர்களும் இப்பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தூய தாமஸ் கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில், முதலமைச்சர் அவர்கள் மாநில அளவில் வெற்றி பெற்ற 6 மாணவ, மாணவியருக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். செஞ்சி மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், உறுப்பினர் செயலர் வா. சம்பத், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் முனைவர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. அழகிரிசாமி, பேராசிரியர் முனைவர் ஜெ. ஹாஜாகனி, எஸ்.டி. நெடுஞ்செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** **ஏண்ணே!** ஒன்றியப் புலனாய்வு அமைப்பின் (CBI ) அதிகாரிகள் மீதும் கூட ஊழல் தொடர்பான வழக்குகள் உள்ளனவாமே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **சிபிஐ அமைப்பின் முதல் பிரிவு (A பிரிவு) அதிகாரிகள் மீது 52 ஊழல் வழக்குகளும்,இரண்டாவது பிரிவு (B பிரிவு) அதிகாரிகள் மீது 19 ஊழல் வழக்குகளும் நிலுவையில் உள்ளதாக, ஒன்றிய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (Central Vigilance Commission) தகவல் வெளியிட்டுள்ளது.**

**மேலும், நாட்டின் தலைமைப் புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் மீது ஊழல் வழக்குகள் நிலுவையில் இருப்பது, அந்த அமைப்பின் பிம்பத்தையே சிதைத்துவிடும் என்றும் ஒன்றிய ஊழல் கண்காணிப்பு ஆணையம் கவலை தெரிவித்துள்ளது.**

**சீசரின் மனைவி, சிறிதளவு சந்தேகத்திற்கும் இடம் கொடுத்து விடாமல் இருத்தல் வேண்டும் என்பது வெறும் சொற்கோவை அல்ல!**

# சிறுபான்மையினர் நலன் காக்க கழக அரசு நிறைவேற்றிவரும் ஏராளமானத் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இருக்கக்கூடாது. எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் சரி, ஆளும்கட்சியாக இருக்கும்போதும் சரி, சட்டமன்றத்தில் அப்போதைக்கப்போது எழுந்து சில கேள்வியை கேட்க வேண்டும். எனக்கு இப்படிப்பட்ட பல அறிவுரைகளை ஆலோசனைகளை எல்லாம் வழங்கியவர் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். அதையெல்லாம் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

எனவே தலைவர் கலைஞருடைய இதயத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றவராக விளங்கியவர் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். அதே அன்போடும், அதே நட்புணர்வோடு இன்றைக்கு அவருடைய மகனாக இருக்கக்கூடிய இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினிடத்திலும் அந்த அன்பை பெற்று வைத்திருக்கிறார் என்பதை எண்ணிப்பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல, செஞ்சி மஸ்தான் அவர்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சராக அவர் ஆற்றி வரும் பணிகளையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் ஆட்சிப் பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் சிறுபான்மையினர் நலனுக்காக போராடக்கூடிய, வாதாடக்கூடிய, சாதனைகளை தீட்டக்கூடிய பல்வேறு பணிகளை நிறைவேற்றி தந்திருக்கிறது என்பதெல்லாம் ஒரு மிகப் பெரிய வரலாறு.

**சிறுபான்மையினர் - வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் காக்கும் கழக அரசு!**

2007ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்றிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

“உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்” 2009ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த நல வாரியத்தில் இதுவரை 15 ஆயிரத்து 327 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதிகள் தி.மு.க. ஆட்சிக்காலத்தில்தான் முதல்முறையாக துவங்கப்பட்டது.

இந்த வரலாற்றின் நீட்சியாக நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, செய்து வரும் சில திட்டங்களை மட்டும் இங்கே நான் ஒன்றிரண்டு மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறுபான்மையினர் விடுதி மாணவ - மாணவியருக்கு, புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு சிறப்பு உணவு வழங்க ஆணையிட்டுள்ளோம்.

14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில், 14 இலட்சம் ரூபாய் செலவில் “செம்மொழி நூலகங்கள்” ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, 5 லட்சத்து 90 ஆயிரம் செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்க ஆணையிடப்பட்டு கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2021-2022ஆம் ஆண்டு முதல் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில, 3 முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு 3 கோடியே 59 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2023ஆம் ஆண்டிற்கான ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட 3987 பயனாளிகளுக்கு 10 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் மண்ணின் உணர்வை அனைவரும் பெற வேண்டும்!**

இப்படி சிறுபான்மையினர் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசின் மூலமாக நாம் தொடர்ந்து செய்து வருகிறோம். சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்க மக்கள் மன்றத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செயலாற்றிடும் என்ற உறுதியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதேநேரத்தில் மாணவர்களிடம் நான் வேண்டுகோளாக வைப்பதெல்லாம், நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று தனி குணம் உண்டு. சமத்துவம் - சகோதரத்துவம் - சமூகநீதி - சுயமரியாதை - பகுத்தறிவு என்று பண்பட்ட பண்பாட்டைக் கொண்ட நம் தமிழ் மண்ணின் உணர்வை நீங்கள் அனைவரும் பெற வேண்டும். ஒற்றுமையோடு வேற்றுமை இல்லாத தமிழ்நாட்டை நோக்கி நமது சமூகத்தை வழிநடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மனிதநேயத்தைப் போற்றுங்கள். உங்கள் எண்ணங்களை அழுக்காக்கும் கருத்தியல்களைப் புறந்தள்ளுங்கள். நல்லிணக்கத்தின் பண்பை மாணவர்களாகிய நீங்கள் தொடர்ந்து எடுத்துச் செல்லுங்கள் என்று இந்த நேரத்தில் உங்கள் அனைவரையும் கேட்டு, இந்த சிறப்பான வாய்ப்பைப் பெற்று உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல சூழல் ஏற்படுத்தித் தந்த நம்முடைய அன்பிற்குரிய அமைச்சர்

செஞ்சி மஸ்தான் அவர்களுக்கும், ஆணையத்தினுடைய தலைவர் என்னுடைய அன்பிற்கினிய பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் மற்றும் நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை தெரிவித்து பரிசு பெற்றிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை மனமார வாழ்த்தி, பாராட்டி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பகுத்தறிவுக் கருத்துகளை பட்டெனச் சொல்லும் நம்முடைய ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், அவர் இந்த சமுதாயத்திற்காக என்னென்ன கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்பது இதன் மூலமாக நாம் அறிந்து கொண்டாக வேண்டும். அதேபோல், உலக அரசியலையெல்லாம் தன் மயக்கும் மொழியாலேயே சொல்லி அறிவூட்டியவர் யார் என்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அடுக்குமொழியிலும் கனல் தெறிக்கக்கூடிய வசனங்கள் பேசி தமிழர்களுக்கு உணர்ச்சியை ஊட்டியவர் யார் என்றால், இன்றைக்கு நூற்றாண்டு விழா காணக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி அவர்களை எல்லாம் வழிகாட்டிகளாகக் கொண்டு நம்முடைய ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.**



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (22.8.2023) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு மற்றும் சென்னை, ஜெருசலம் கல்லூரி இணைந்து நடத்திய “ஒன்றிணைவோம் சமத்துவம் காண்போம்” என்ற விழிப்புணர்வு பேரணியை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்து விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல்துறை தலைவர் ரூபேஷ்குமார் மீனா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, ஜெருசலம் கல்வி அறக்கட்டளை தலைவர் முனைவர் எம்.மாலா, ஜெருசலம் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ரமேஷ் செங்குட்டுவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துக்களுடன், வளவனூர் பேரூராட்சி, வள்ளலார் நகரில் புதிதாக கட்டப்பட்ட பூங்காவினை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சி.பழனி சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, மாநில பொதுக் குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், அவைத் தலைவர் சரபோஜி, மாவட்ட பிரதிநிதிகள் அ.கோ.இராஜி, ஜி.பழனி, பொருளாளர் ரகுமான், துணை செயலாளர் விஜயா பெரியசாமி, கந்தசாமி மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் உடனிருந்தனர்.



மதுரை மாநகர் மத்திய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77வது வார்டு சுப்ரமணியபுரம் சுண்ணாம்பு காளவாசல் பகுதியில் 27 லட்சம் மதிப்பீட்டில் 17வது திட்டப்பணியாக பேவர் பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளதை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த போது எடுத்தபடம். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், ஆணையாளர் பிரவீன் குமார், மாமன்ற உறுப்பினர்கள் பாண்டிச் செல்வி, ராஜ பிரதாபன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான் மணிமண்டபம் அமையும் இடம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - மு.பெ.சாமிநாதன் - சிவ.வீ.மெய்யநாதன் - மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆய்வு!

புதுக்கோட்டை ஆக.24

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ள இடத்தினையும், புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தின் செயல்பாடுகளையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 16.08.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா ஆகியோர் உடனிருந்தார்கள்.

புதுக்கோட்டையில் 1861 ஆம் ஆண்டு முதல் அரசு பொது அலுவலக வளாகத்தில், செயல்பட்டு வரும் அரசு கிளை அச்சகத்தின் மூலம் புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரசிதழ்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. மேலும் நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் பல்கலைக்கழக விடைதாள்கள், தேர்வுத்துறை மற்றும் தேர்தல் துறை படிவங்கள், மருத்துவத்துறை, காவல் துறை, நிதிவிதித்தொகுப்பு மற்றும் கருவூலத்துறை ஆகிய துறைகளுக்குரிய படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இந்த அச்சகத்தின் மூலம் அச்சடிக்க ப்பட்டு வருகின்றன. அதன்படி அமைச்சர் பெருமக்களால் புதுக்கோட்டை கிளை அச்சகத்தின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் இங்கு நிறுவப்பட்டுள்ள புதிய அச்சு இயந்திரங்கள் குறித்தும், அச்சடிக்கப்பட்டுவரும் படிவங்கள், பதிவேடுகள் குறித்தும், இந்த அச்சகத்திற்கு அதிவிரைவாக அச்சிட தேவையான அதிநவீன அச்சு இயந்திரங்கள் குறித்தும், கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் குறித்தும், கட்டுமானப் பணி முன்னேற்றம் குறித்தும், அமைச்சர் பெருமக்களால் அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

மேலும், தமிழகத்தில் 300 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட புதுக்கோட்டை சமஸ்தானத்தின் 9வது மன்னரான ராஜா ராஜகோபால தொண்டைமான் அவர்கள் தனது பதவிக் காலத்தில் புதுக்கோட்டை மக்களின் நலனிற்காக கல்வி, போக்குவரத்து, விவசாயம், நீர்பாசனம். உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி தந்த பெருமைக்குரியவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் எளிமையையும், மக்களுக்கு ஆற்றியுள்ள அரும் பணிகளையும் நினைவு கூரும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் புதுக்கோட்டையில் மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்பதற்காக, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை, அமைச்சர்கள் எஸ். ரகுபதி , மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மேலும் மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபம் கட்டுமானப் பணிகளை மிகவும் கலைநேர்த்தியுடன், சிறப்பான முறையில் மேற்கொள்ளவும், பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் வகையில் மன்னரின் வாழ்க்கை வரலாற்றை இக்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் மன்னரால் பயன்படுத்தப்பட்ட பொருட்களை கொண்டும், போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை கொண்டும் காண்போரை கவரும் வகையில் பணிகளை மிக நேர்த்தியாக மேற்கொள்ள பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அமைச்சர் பெருமக்களால் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்தியாவின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர், இந்திய பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்த்திருத்த பெண்மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 10.05.2023 அன்று காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர்களால் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மருத்தவக்கல்லூரி முதல்வர் (பொ) மரு. ராஜ்மோகன், மாவட்ட கால்பந்து கழக துணைத் தலைவர் / முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகர், நகர்மன்ற துணைத்தலைவர் லியாகத்அலி, உதவி செயற்பொறியாளர் (பொ.ப.து.) சிந்தனை செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.பிரேமலதா, உதவி பொறியாளர் பாஸ்கர், அரசு கிளை அச்சகத்தின் துணை பணி மேலாளர் ராஜ்குமார், வட்டாட்சியர் விஜயலட்சுமி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) அ.பாரதி, க.மதியழகன், ஆ.செந்தில், சு.சண்முகம், என்.சாத்தையா, மு.க.ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், என்.சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், எம்.எம்.பாலு, மகேஸ்வரி சண்முகநாதன், கே.சி. சிவக்குமார், கே.எம். சுப்பிரமணியன், க.நைனா முகம்மது, வே.ராஜேஸ், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வடவாளம் க.செ.மணிமாறன், வெற்றிச்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மிசோரத்தில் ரெயில்வே பாலம் இடிந்து 17 பேர் பலி!

சாய்ராங், ஆக. 24 -

மிசோரம் மாநிலம் சாய்ராங் பகுதியில் ஐஸ்வாலில் இருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் நேற்று காலை 10 மணியளவில் 3540 தொழிலாளர்கள் ரெயில்வே பாலம் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது பாலத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இதில் 17 பேர் பலியானார்கள். 17 உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், பலரை காணவில்லை. எனவே, பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....; மதுரை அ.தி.மு.க. மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போலீஸ் பாதுகாப்பில் குளறுபடி என்று புகார் கூறப்பட்டுள்ளதே?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; அ.தி.மு.க. மாநாடு அசம்பாவிதம் இன்றி நடைபெற்றுள்ளது. போலீஸ் பாதுகாப்பில் குறைபாடு இருந்திருந்தால், இவ்விதம் அசம்பாவிதம் இன்றி நடந்தது சாத்தியம் ஆகுமா?**

**குளறுபடி எல்லாம் எடப்பாடி உள்ளிட்டோரின் பேச்சுகளிலும், நிகழ்ச்சிகளிலும்தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.**

**அத்தகைய குளறுபடிக்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல, வேகாத அரிசி, உப்பு சப்பு இல்லாத ஊசிப்போன புளியோதரை, கெட்டுப்போன சாம்பார் சாதம் டன் கணக்கில் உணவு வீண், குப்பையில் மலையெனக் குவியல் குவியலாக வீச்சு!**

**பல்லாயிரம் பேரின் பசி போக்கும் உணவுப் பொருள்கள் வீணாக்கப்பட்டதை, நேரிலும், ஊடகங்களிலும் பார்த்து கண்ணீர் வடிக்கும் விவசாயிகள், பொதுமக்கள் - சமூக ஆர்வலர்கள் கண்டனம், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு எனக் குற்றச்சாட்டு.**

**அ.தி.மு.க.வினரின் குழப்பமான திட்டமிடலினாலும், செயல் திறனற்ற ஏனோ தானோ போக்கினாலும் ஏற்பட்ட குளறுபடிகளிலிருந்து, கவனத்தையும்கண்டனத்தையும்திசைதிருப்பிவிடலாம் என்ற நப்பாசையில் புகார் அளித்திருக்கிறார்கள்!**

### அனைத்து திருக்கோயில்களிலும் அர்ச்சகர் நியமன

# நடவடிக்கைகளை தொடர்ந்து அர்ச்சகர் நியமனம் செய்யலாம்!

## மாண்பமை உச்சநீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஆக.24-

சேலம், சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் அர்ச்சகர் நியமனம் குறித்த வழக்கில் நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இதில் இடைக்கால தடையுத்தரவு வழங்கப்படாததால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்தனர்.

மேற்படி மனு நேற்று முன்தினம் (22.08.2023) உச்சநீதிமன்றத்தில் நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வரபெற்றது. இதில் அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் ஜெய்தீப்குப்தா, அரசு வழக்கறிஞர்கள் டி.குமணன் மற்றும் என்.ஆர். ஆர்.அருண் நடராஜன் ஆகியோர் ஆஜராகினர்.

விசாரணை முடிவில், அனைத்து திருக்கோயில்களிலும் அர்ச்சகர் நியமன நடவடிக்கைகளை தொடர்ந்து அர்ச்சகர் நியமனம் செய்யலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது. சுகவனேஸ் வரர் திருக்கோயிலில் அர்ச்சகர் நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை முடித்து உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறை யீட்டு மனுவில் தீர்ப்பிற்கு உட்பட்டு மேற்கொள்ளலாம் எனவும் உத்தரவிட்டு வழக்கினை முடித்து வைக்கப்பட்டது.


# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
## ஆகஸ்ட் 24 (2016)



இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணி புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான ‘முரசொலி’யில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


# மோகனூரில் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல உதவிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், ஆக. 24 -

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் தங்கபாண்டியன் அவர்களின் மகன் செல்வன் பரதன் மற்றும் மகள் செல்வி தீபா ஆகியோர் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட தங்கபாண்டியன் மகன் செல்வன் பரதன் மற்றும் மகள் செல்வி தீபா ஆகியோரது இல்லத்திற்குச் சென்று நலம் விசாரித்து, அவர்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி, தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மேற்கண்டுள்ள நபர்களுக்கு இயன்முறை சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதை மருத்துவர்களிடம் கேட்டறிந்து, தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்கிட வேண்டும் என மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் அவர்களுக்கு மோகனூர் வட்டம், பேட்டபாளையத்தில் இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும், தனது சொந்த நிதியிலிருந்து பராமரிப்பு தொகையாக ரூ.10,000/, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். மேலும், மாதந்தோறும் 25 கிலோ அரிசி, உளுந்து, துவரை பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட வீட்டு மளிகை பொருட்கள் வழங்குவதாகவும் அவர்களுக்கு உறுதியளித்தார். மேலும், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.78,000/ மதிப்பிலான படுக்கைகள் மற்றும் சக்கர நாற்காலிகளில் இருந்து மாற்றுவதற்கான இயந்திரத்தினை வழங்கினார்.

தொடர்ந்து,. மேலும், வீட்டுமனை பட்டா வழங்கப்பட்ட இடத்தில் வீடு கட்டத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மோகனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்வில், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் சந்திரமோகன், மோகனூர் வட்டாட்சியர் மணிகண்டன், மோகனூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், அட்மாக் குழு தலைவருமான பெ.நவலடி, மோகனூர் பேரூராட்சி தலைவர் வனிதா மோகன், செயல் அலுவலர் கோமதி, முன்னாள் மாவட்ட வகை தலைவர் இளைஞர் அணி மோகன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.சுகுமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், காளியம்மன் கோவில் தெருவில் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வரும் பரதன் மற்றும் செல்வி தீபா ஆகியோருக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும், தனது சொந்த நிதியிலிருந்து பராமரிப்பு தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர் பெ.நவலடி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நகர்ப்புறப் பகுதிகள் - ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'

# எம்.எல்.ஏ. - எம்.பி.க்கள் தங்கள் தொகுதியில் - சீர்மிகு இத்திட்டத்தை தொடங்கி வைத்துச் சிறப்பித்திடுவீர்!

## திட்டம் விரிவுபடுத்தப்பட்டதையடுத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக.24-**

**"தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' விரிவுபடுத்தப்படவுள்ள நிலையில், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரவர் தொகுதியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளி ஒன்றில் சீர்மிகு இந்தத் திட்டத்தினைத் தொடங்கி வைத்துச் சிறப்பித்திடுவீர்!" என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்;

பயிற்றிப் பல கல்வி தந்து, இந்தப்பாரை உயர்த்திட வேண்டும்" -

என்று பாடினார் மகாகவி பாரதியார்.

மகாகவியின் கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில், தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினரும் போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", தொடங்கப்பட்ட நாள்முதல், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, நல்ல பயன் அளித்து வருகிறது.

சிறப்பு வாய்ந்த, "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" தமிழ்நாட்டு மக்களிடையே மட்டுமின்றி, பிற மாநில மக்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

முதற்கட்டமாக 1,545 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தக் காலை உணவுத் திட்டம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் விரிவுபடுத்தப்படவிருக்கிறது.

இதனை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், வருகிற 2582023 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள்.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தினை நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் உள்ள ஏதேனும் ஒரு அரசு தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு கேட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (22-8-2023) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில்,

அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்து, அதற்கான அரசாணை கடந்த 27-7-2022 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி, முதற்கட்டமாக 1,545 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, தற்போது பயனடைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், நாட்டிற்கே முன்னோடியாய், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 31,008 அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 15.75 இலட்சம் தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டில் விரிவுபடுத்தி கடந்த 76 2023 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது" என்றும், "முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பள்ளிகளில் காணப்பட்ட மிகச் சிறந்த பலன்களைக் கருத்தில் கொண்டு இந்தச் சீரிய முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றும் முதலமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் பொன்னேட்டில் பதிக்கப்பட இருக்கும் இத்திட்டத்தினை வருகிற 25.8.2023 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில், தான் தொடங்கி வைக்க உள்ளதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் இந்தத் திட்டத்தினைத் தொடங்கி வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரவர் தொகுதியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளி ஒன்றில் இந்தச் சீர்மிகு திட்டத்தினைத் தொடங்கி வைத்து சிறப்பித்திட தி.மு.க., அ.இ. அ.தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

---

என்.கௌதமன் தலைமை! நாகையில் நீட்டை ரத்து செய்யக் கோரி

# ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரை கண்டித்து உண்ணாவிரத அறப்போராட்டம்!

## கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் - த.சோழராஜன் - உ.மதிவாணன் பங்கேற்பு !

*நாகை, ஆக. 24 -*

*நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து உண்ணாவிரத அறப்போராட்டம் நாகை புதிய பேருந்து நிலையம் அருகே அவுரித்திடலில் நடைபெற்றது. உண்ணாவிரதப்போராட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கி பேசினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என், கார்த்தி வரவேற்றார்.*

*உண்ணாவிரத போராட்டத்தில் கழக செய்தித்தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் த.சோழராஜன் ஆகியோர் கண்டனஉரையாற்றினார்கள். உண்ணாவிரதப்போராட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கழக விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.இரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம்நீலமேகம், பொருளாளர் மு.லோகநாதன், கூட்டணிகட்சியை சேர்ந்த கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் அமிர்தராஜா, திராவிட கழக குபே ஸ் குப்தா, நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார்,ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சுப்பிரமணியன், முகமது சுல்தான், பொதுக் குழு உறுப் பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், உமா செந்தாமரை, எஸ்.பன்னீர்செல்வம், இல.பழனிய ப்பன், கோசி.குமார், கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், ஆர்.சுரேந்தர், மு.தினேஷ், எஸ்.கே.ஜி. ஏ.சேகர், அ.பாரிபாலன், க.சத்திய மூர்த்தி, வி.கமல், எஸ்.வெற்றிச்செல்வம், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.வி.டி.அருள், இளம்சுந்தர், த.தமயந்தி, ஆர்.துரைராஜ், கே.எஸ்.சாகுல்ஹமீதுராஜா, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.புவனேஸ்வரி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், டி.அசோக், கோ.தாமோதரன், ஜெ.ஆர்.கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எலக்டிகல் ஆர்பாலா, ஆர்.ஆர்.பாரி, வி.வி.செந்தாமரைசெல்வம், டி,உதயா,ப.மணிகண்டன், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பால்ராஜ், சி.ரவீந்திரன், க.அறிவழகன், எ.சதீஷ்பாபு, ஜி.பிரின்யா, வி.விக்னேஷ்,பி.மணிகண்டன், எம்.கனியா, டி.சுகிலன், ஜி.ராஜேஷ், ஒன்றியக் குழு தலைவர்கள் ஆர்.ஜி.தமிழரசன், வாசுகிநாகராஜன், செல்வராணிஞானசேகரன், பேரூராட்சி தலைவர்கள் இந்திராகாந்திசேகர், டயானாஷர்மிலா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக் குமார் நன்றி கூறினார்.*




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 22.08.2023 – செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நாஞ்சில் சம்பத், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஜெ.ஹெலன்டேவிட்சன் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் ஆலயங்களில் அர்ச்சகராகலாம் – என்று இந்தியாவின் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறதே?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; ஆலயங்களில் அர்ச்சகராக நியமனம் பெற சாதி தடையில்லை என்று சென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு தற்போது உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.**

**உச்சநீதிமன்றம் தமது தீர்ப்பில், ஆகம விதிகளின்படி தேர்ச்சி பெற்றவர்களாக, முறையான பயிற்சி - பூஜை செய்வதற்கான தகுதி பெற்றவர்கள் யாரை வேண்டுமானாலும், எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமனம் செய்யலாம் எனத் தெளிவு படுத்தியுள்ளது.**

**இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தீர்க்க தரிசனத்தை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. அய்ந்தாவது முறை முதலமைச்சராக அரியணை ஏறிய கலைஞர், முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே, தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்றிடும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் அரசாணை வெளியிட்டார்; அமைச்சரவைத் தீர்மானத்தை தமது கைப்படவே மணிமணியாக எழுதி வழங்கினார்; என்பவை எக்காலத்திலும் அழியாத கல்வெட்டுச் சரித்திரம் !**

---

# திருவாரூர் வருகைதரும் முதல்வருக்கு மாபெரும் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அறிக்கை!



*திருவாரூர், ஆக. 24 -*

*திருவாரூர் மாவட்டத்திற்கு வருகைதரும் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படவுள்ளதை முன்னிட்டு கழகத்தினருக்கு அழைப்பு விடுத்து மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*பூண்டி .கே.கலைவாணன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,*

*இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகவும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையிலும் தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சிநடத்தி , தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக உயர்த்தி, கடந்த பத்து ஆண்டுகளாக ஆண்ட அ.தி.மு.க. அரசின் திறனற்ற நிர்வாகத்தால் இருண்டு கிடந்த தமிழ்நாட்டில் , நம்பிக்கை ஒளி ஏற்றி மக்களின் நெஞ்சமெலாம் நிறைந்திருக்கும் தமிழ்நாடு முதல்வரும் கழகத்தலைவருமான தளபதி அவர்கள் திருவாரூர் மாவட்டம் வருகைதருவது நமக்கெல்லாம் மகிழ்வைத் தருகிறது.*

*தமிழ்நாட்டின் வேளாண்மை மீது அக்கறைகொண்டு இந்த ஆண்டும் ஜூன்12 அன்று மேட்டூர் அணையை திறந்து வைத்து விவசாயிகளையும் விவசாய தொழிலாளர்களையும் மகிழ்வித்திருக்கும் நமது முதல்வர் அவர்கள் ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு, புதிய பல சிறப்புமிக்க திட்டங்களை அறிவித்து செயல்படுத்திக்கொண்டிருக்கும் முதல்வர் தளபதி அவர்கள் "பெண்களுக்கு இலவச பேருந்து", கல்லூரியில் படிக்கும் "மாணவிகளுக்கு மாதம்தோறும் உதவித் தொகை", "பெண்களுக்கான உரிமைத்தொகை", "இல்லம்தேடி கல்வி", "மக்களைத்தேடி மருத்துவம்" போன்ற உன்னத திட்டங்களை தந்து மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று இருக்கிறார்.*

*திராவிட இனத்தின் விடியலுக்காக பாடுபட்ட தலைவர்களின் வரிசையில் திராவிட இனத்தை காக்கும் தலைவர் தளபதி அவர்கள் எதிர்கால தமிழினம் தலைமிர்ந்து நிற்க கல்வி தான் அவசியம் என்கிற தொலைநோக்கு சிந்தனையோடு கொண்டுவரும் "காலை உணவுத்திட்டம்" என்கிற வரலாற்றின் பக்கங்களில் இடம்பிடிக்கப் போகும் பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தை மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அவதரித்த திருக்குவளையில் 25.08.2023 அன்று தொடங்கிவைத்து , தமிழினத்தின் விடியலுக்காக வாழ்நாளெல்லாம் போராடிய அந்த மகத்தான தலைவருக்கு மேலும் பெருமை சேர்க்கவிருக்கிறார்.*

*அதன் தொடர்ச்சியாக "கழகத்தலைநகராக" நமது திருவாரூர் மாவட்டத்தை அறிவித்து நமக்கும் பெருமை சேர்த்த கழகத்தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் திருவாரூருக்கு வருகை தரவிருக்கிறார்கள். மக்களின் நலனில் அக்கறை கொண்டு நல்லாட்சி தரும் அந்த மா மனிதருக்கு நமது மாவட்ட கழகத்தின் சார்பில் மகத்தான வரவேற்பளிக்க மாவட்ட எல்லையில் கழகத்தினர் பெருந்திரளாக வருகை தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.,தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்*

---

அமைப்புசாரா 'கிக்' தொழிலாளர் நலனுக்கு தனி வாரியம்:

# முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில் - உழைப்போரை உயர்த்தும் அறிவிப்பு! நான் பெற்ற பேறு!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக. 24-

அமைப்புசாராத 'கிக்' தொழிலாளர்களின் நலனுக்கு தனி நலவாரியம் அமைக்கப்படும் எனும் அறிவிப்புக்குப் பெருகிடும் வரவேற்பு - நன்றியறிவிப்பால் நெகிழ்ந்து, நேற்று முன்தினம் வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இத்தகைய அறிவிப்பு வெளியிடும் வாய்ப்பு; நான் பெற்ற பேறு!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

**அமைப்புசாராத 'கிக்' (Gig) தொழிலாளர்களின் நலன் காக்கத் தனி நல வாரியம் அமைக்கப்படும் என விடுதலை நாள் உரையில் அறிவித்தமைக்குப் பல தரப்பினரும் உளமாரப் பாராட்டி நவிலும் நன்றியால் நெகிழ்கிறேன்.**

**கைரிக்ஷா தொழிலாளர்கள், குடிசைவாழ் மக்கள் எனக் கோட்டையில் இருந்தாலும் எளிய மக்களின் நலனையே எண்ணித் திட்டங்கள் தீட்டிய கலைஞரின் நூற்றாண்டில் இத்தகைய அறிவிப்பை வெளியிடும் வாய்ப்பு கிட்டியது நான் பெற்ற பேறு!**

**உழைப்போரை உயர்த்துவோம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகியவற்றில் பணிபுரிந்து பணிக் காலத்தில் உயிரிழந்த 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி கண்ணபிரான் கோவில் தெருவில் வசிக்கும் கழகத்தின் மூத்த முன்னோடி கே.எஸ்.ரவியின் இல்லத் திருமணத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும் சி.எம்.டி.ஏ. அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன், 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், மாவட்ட வர்த்தகர் அணி தலைவர், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், பகுதி பிரதிநிதி லோ, ந.மதி, சூர்யா மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

‘சென்னை நாளில்’ – மூன்று சிறப்பான நூல்கள் வெளியீடு!

# ‘தி இந்து’ குழுமத்துக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

## திராவிட மைய நிலத்தின் மரபைக் கொண்டாடும் முயற்சிக்கு நன்றி!

**சென்னை, ஆக.24–**

**‘சென்னை நாளில்’ – அதன் சிறப்பை எடுத்து விளக்கும் வகையில் மூன்று சிறப்பான நூல்கள் வெளியிட்ட ‘தி இந்து’ குழுமத்தைப் பாராட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :

சென்னை நாளில் ‘தி இந்து’ குழுமத்தின் மூன்று சிறப்பான நூல்களை வெளியிட்டதில் பெருமையடைகிறேன்.

‘Epic Saga of the Cholas’ நூல் சோழப் பேரரசின் பிரம்மாண்டத்தையும், ‘Tamil Nadu In Focus’ தொகுப்பானது தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு குறித்த பல நூறாண்டு கால ஆர்வமூட்டும் பார்வைகளையும் வழங்குகிறது.

‘Pioneers – Stars in the Madras Galaxy’ நூல் நமது மண்ணைச் சேர்ந்த தளர்வுறாத சாதனையாளர்களைப் பெருமைப்படுத்துகிறது.

திராவிட மையநிலத்தின் மரபையும் நாயகர்களையும் கொண்டாடும் இம்முயற்சிக்காக என்.ராம், என். ரவி, என்.முரளி உள்ளிட்ட ‘தி இந்து’ குழுமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றிய போது இறந்த - குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த

# தமிழர்கள் குடும்பத்து வாரிசுகளுக்கு - திருமண, கல்வி உதவித் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.24-

வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றி பணியின்போது இறந்த குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் குடும்பத்திலுள்ள அவர்தம் மகன், மகளுக்கு திருமண உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் மற்றும் கல்வி உதவித் தொகையாக 12 ஆயிரம் ரூபாயும் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு :

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய் வீடு. அவர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்ல, அரவணைப்பதும், பாதுகாப்பதும் தாய்த் தமிழ்நாட்டின் கடமையாகும்.

இப்படி பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், உதவிகளைச் செய்யவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் வெளிநாட்டிற்குச் சென்று பணியாற்றி பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திலுள்ள அவர்தம் மகன், மகளுக்கு திருமண உதவித் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் சார்பில் அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று அங்கு பணியின்போது இறந்த குறைந்த வருவாய்ப் பிரிவைச் சேர்ந்த தமிழர்களின் குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிடும் வகையிலும், திருமணத்தின் பொருட்டு ஏற்படும் எதிர்பாராத கூடுதல் செலவினத்தால் அக்குடும்பத்தினர் கடனில் சிக்கித் தவிப்பதைத் தடுக்கும் பொருட்டும் அக்குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு திருமண உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும்; அவர்தம் குடும்பத்திலுள்ள மகன், மகளுக்கு கல்வியில் சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிடும் வகையிலும், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அவர்களின் விகிதத்தை அதிகரிப்பதற்கும், கல்வியில் அவர்களின் ஆர்வத்தினை அதிகரிப்பதற்கும் அவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக 12 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட திருமண உதவித் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை பெற அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

திருமண உதவித் தொகை பெற, திருமணத்தின் போது மணமகனுக்கு 21வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும்.

பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும், பழங்குடியினர் 5ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் இரண்டு நபர்களுக்கு மட்டும் திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

கல்வி உதவித் தொகை பெற தமிழ்நாடு அரசின் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று அல்லது அயல்நாடுகளின் அதற்கு இணையான படிப்புகளில் தேர்ச்சி பெற்று 11ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு சேர்க்கை பெற்ற மாணவர்கள், மருத்துவக் கல்லூரிப் படிப்பு, பொறியியல் படிப்பு, வேளாண்மை பொறியியல் (Agri. / Engg.) மற்றும் டிப்ளமோ படிப்பு, அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் மூலம் தொழிற்கல்வி படிப்புகள், பாலிடெக்னிக்குகள் (Polytechnic)/தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை (Admission) பெற்ற மாணவர்கள் மட்டுமே இக்கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

ஒரு குடும்பத்தில் இரண்டு மாணவர்களுக்கு மேல் உதவித் தொகை வழங்கப்பட மாட்டாது. மேற்படி உதவித் தொகைகள் வழங்குவது தொடர்பான விரிவான நடைமுறை அயலகத் தமிழர் நல வாரியத்தால் வகுக்கப்படும்.

இவ்வாறு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், நேற்று முன்தினம் (22.08.2023) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொது சுகாதார ஆராய்ச்சி புதிய முயற்சிகள் மற்றும் சிந்தனைகள் (Shifting Landscapes / Innovations in Public Health Research Dissemination Workshop) கருத்தரங்கில், தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறைக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மரு.அஸ்வத் நாராயணன், பொது சுகாதாரத் துறை அலுவலர்கள், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

குமரி மாவட்டத்தில்

# ரூ.11.10 கோடி மதிப்பில் பேரூராட்சி பகுதிகளில் வளர்ச்சித் திட்ட பணிகள்!

## அமைச்சர் த.மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்!

*கன்னியாகுமரி ஆக. 24-*

*குமரி மாவட்டம், தேரூர், மயிலாடி, கொட்டாரம், கன்னியாகுமரி, அகஸ்தீஸ்வரம், தெற்கு தாமரைகுளம் ஆகிய பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய சாலை மேம்பாட்டு பணி மற்றும் குடிநீர் திட்ட பணிகளை பால்வளத்துறை துறை அமைச்சர்த.மனோ தங்கராஜ் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் துவக்கி வைத்தார்.*

*இது குறித்து அவர் தெரிவிக்கையில்:*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

*அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட பேரூராட்சிகளின் சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்(2023-2024) ரூ.23 இலட்சம் மதிப்பில் தேரூர் இரண்டாம்நிலை பேரூராட்சிக்குட்பட்ட குலசேகரம்புதூர் 2வது வார்டு மெயின் ரோடு முதல் நியாய விலைக்கடை கிழக்குப் பக்கம் வரை, நியாய விலைக்கடை முதல் யாதவர் அம்மன் கோவில் வரை, யாதவர் அம்மன் கோவில் முதல் காலபெருமாள் கோவில் வரை அலங்கார ஓடு அமைக்கும் பணி, மாநில நிதிக்குழு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.42 இலட்சம் மதிப்பில் மயிலாடி பேரூராட்சிக்குட்பட்ட தாமு கிருஷ்ணா நகர் மெயின் ரோடு முதல் தெரு மற்றும் இரண்டாவது தெரு, காமராஜர் நகர் முதல் குறுக்கு மேற்கு தெரு மற்றும் ஜோசப் புரம் முதல் அவரிவிளை தெருக்களில் பவர் பிளாக் கட்டைகளால் தளம் அமைக்கும் பணி, கொட்டாரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.8.1 கோடி மதிப்பில் குடிநீர்திட்டப்பணிகளும்துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*

*மேலும் கன்னியாகுமரி பேரூராட்சிக்குட்பட்ட அஞ்சு கூட்டு விளை சாலை ரூ.38 லட்சம் மதிப்பிலும், ரூ.34 லட்சம் மதிப்பில் பயோ மைனிங் முதல் கோவளம் வரை தார்ச் சாலை அமைக்கும் பணி, ரூ.20.70 லட்சம் மதிப்பில் சின்ன முட்டம் போட் யார்ட் தார் சாலை அமைக்கும் பணி, ரூ.20.70 இலட்சம் மதிப்பில் வடக்கு குண்டல் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி, ரூ.14.50 லட்சம் மதிப்பில் ஒற்றையால் விளை கீழத்தெரு முதல் இராஜ சங்கீத தெரு, பாலசுப்பிரமணியம் தெரு பகுதியில் அலங்கார தரை ஓடு அமைத்தல் பணி, அகஸ்தீஸ்வரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 28 லட்சம் மதிப்பில் வெள்ளையன் தோப்பு ஸ்ரீமன் நாராயண சாமி திருக்கோவில் முன்பு அய்யா கோவில் சாலை மற்றும் நாச்சியார் அம்மன் கோவில் முதல் கவற்குளம் கிராமம் செல்லும் சாலை அலங்கார தரை கற்கள் தளம் அமைக்கும் பணி, தென்தாமரைகுளம் பேரூராட்சிக்குட்பட்ட குமார பெருமாள் விளை பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 79.50 இலட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணி என மொத்தம் சுமார் ரூ.11.10 கோடி மதிப்பில் சாலை பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தையும் விரைந்து முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் .த.மனோ தங்கராஜ் தெரிவித்தார்கள்.*

*நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிய செயலாளர்கள் பாபு .மதியழகன், தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வேளாண் விளை பொருள் கூட்டுறவு சங்க இயக்குநர் பூதலிங்கம், வட்டார வேளாண்மை ஆலோசனைக்குழு தலைவர். தாமரை பாரதி,பேரூராட்சி தலைவர்கள் குமரி ஸ்டீபன் (கன்னியாகுமரி), அன்பரசி (அகஸ்தீஸ்வரம்), .அமுதாராணி (தேரூர்), விஜயலெட்சுமி (மயிலாடி), செல்வகனி (கொட்டாரம்), ஊராட்சி இராஜக்காமங்கலம் ஒன்றியக்குழு துணைத்தலைவர் .சரவணன், பேரூராட்சி உறுப்பினர்கள் ராஜன், புவியூர் காமராஜ், எட்வின் ராஜ், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், பொறியாளர் லெட்சுமிகாந்தன் மற்றும் தேரூர் முன்னாள் பஞ் தலைவர் முத்து குலசை முருகன் தேரூர் அய்யப்பன் மைலாடி சுதாகர் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.*

நாகை மாவட்டம் வருகை தரும்

# முதலமைச்சருக்கு மாவட்ட எல்லை வாஞ்சூரில் மாபெரும் வரவேற்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

*நாகை. ஆக.24-*

*நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*1.50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய, பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் திட்டத்தை கொண்டு வந்த, கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1,000 உதவித் தொகை வழங்கிட்ட, குடும்ப தலைவிக்கு மாதம் ரூ.1,000 திட்டத்தை வரும் செப்டம்பர் மாம் 15ம் தேதி தொடங்கி வைக்க ரூ. 7,000 கோடி நிதி ஒதுக்கிடு செய்தும், 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தொடங்கி வைத்து திராவிட மாடல் ஆட்சி செய்து வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் திருக்குவளையில் கலைஞர் படித்த பள்ளியில் அனைத்து பள்ளி 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை தொடங்கிவைக்க நாகை மாவட்டத்திற்கு இன்று 24ம் வருகை தர உள்ளார்கள். நாகை மாவட்டத்திற்கு வருகை தர உள்ள கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சருக்கு இன்று (24ம் தேதி-வியாழன்) இரவு 7 மணிக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகூர் வாஞ்சூர்ரவுண்டானா அருகே மாபெரும் வரவேற்பு வழங்க உள்ளது. அதேப்போல் 7.30 மணி அளவில் வேளாங் கண்ணி ஆர்ச் அருகே மாபெரும் வரவேற்பு வழங்கப் பட உள்ளது. மேலும் 25ம் தேதி காலை வேளாங் கண்ணியில் இருந்து திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லம் மற்றும் கலைஞர் படித்த பள்ளியில் காலை*



*சிற்றுண்டி உணவு திட்டத்தை தொடங்கி வைக்க செல்லும் போது வேளாங்கண்ணி முதல் திருக்குவளை வரை வழி நெடுங்கிலும் கழகத் தலைவர் தளபதிக்கு சிறப்பான வரவேற்பு வழங்கிட வேண்டும். அதைத் தொடர்ந்து 25ம் தேதி மாலை மற்றும் 26ம் தேதி காலை ஆகிய இரண்டு நாட்கள் வேளாங் கண்ணியில் இருந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும் கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு வழி நெடுஞ்கிலும் மாபெரும் வரவேற்பு வழங்கிட வேண்டும். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும். மேலும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வரவேற்பு வழங்கும் நிகழ்ச்சிகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.*

# சென்னையில் அன்னை தெரசா பிறந்தநாள் விழா!

*சென்னை, ஆக.24-*

*சென்னை கிழக்கு மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் எல்.எட்வின் தலைமையில் அன்னை தெரசா அவர்களின் 113 வது பிறந்தநாள் விழா 26.8.2023 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் பிஷப் ஆலன் குழந்தைகள் இல்லம், புதுப்பேட்டையில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் அன்னை தெரசா பேரவை நிறுவனத் தலைவர் டாக்டர் ஜி.கே. தாஸ், டாக்டர் மரியம் பாக்கியம், அருட்தந்தை ஏ.தாமஸ், டாக்டர் சி.விஜயகுமார், எ.சேவியர், ஜான் மோரிஸ், டாக்டர் எஸ். தேவராஜ், மேத்யூ,டாக்டர் சேவியர், டாக்டர் ரேவதி ராபர்ட், டாக்டர் பாஸ்கர் ஜெயபாலன் ஆகியோர் நல உதவிகளை வழங்குகின்றனர்.*

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக பிரதிநிதிகள் கூட்டம் இன்று (24.8.2023- வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு, கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகின்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் ஜி. செல்வராஜ், தலைமை வகிக்கிறார். எஸ்.ஆர். ஆனந்த சேகரன், ஜெகன் பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஜி.வி. மார்க்கண்டேயன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள்அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

1. அண்மையில் கழக தலைவர் தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து.
2. கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர்பி. கீதா ஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி மாவட்ட தி.மு.க.


100
1924 - 2023
24.08.2023
மயிலாடுதுறை மாவட்டத்திற்கு
வருகை தரும்
இந்திய விடியலின் வழிகாட்டி
மாண்புமிகு
கழகத்தலைவர்
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை வருக ! வருக !!
என வரவேற்கிறோம்...
சிவ.வீ.மெய்யநாதன் MCA.,
தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலைமாற்றத்துறை அமைச்சர்,
நிவேதா எம்.முருகன் MLA.,
மாவட்ட கழக செயலாளர்,
சட்டமன்ற உறுப்பினர் - பூம்புகார் தொகுதி
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க
Sun Shine









அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின்

நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

100 ஊராட்சி, வார்டுகளில்

# தெருமுனை பிரச்சார கூட்டங்கள்

| வ எண் | தலைமை கழக பேச்சாளர்கள் | தேதி | ஒன்றியம்/நகரம்/பேரூர் | ஊராட்சி, வார்டு | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பவானி கண்ணன் | 24.08.2023 | செந்துறை தெற்கு | நாகல்குழி | வீராக்கன் | கீழமாளிகை |
| 2 | திப்பம்பட்டி ஆறுச்சாமி | 25.08.2023 | அரியலூர் தெற்கு | மேலக்கருப்பூர் | சிறுவளூர் | புதுப்பாளையம் |
| 3 | பவானி கண்ணன் | 25.08.2023 | ஆண்டிமடம் தெற்கு | அணிக்குதிச்சான் | கூவத்தூர் | காட்டாத்தூர் |
| 4 | சேலம் சுஜாதா | 25.08.2023 | செந்துறை வடக்கு | பொன்பரப்பி | மணப்பத்தூர் | குழுமூர் |
| 5 | ஈரோடு இறைவன் | 25.08.2023 | ஜெயங்கொண்டம் நகரம் | செங்குந்தபுரம் | சின்னவளையம் | டாக்டர் சின்னசாமி இல்லம் அருகில் |
| 6 | சேலம் சுஜாதா | 26.08.2023 | செந்துறை வடக்கு | ஆர்.எஸ்மாத்தூர் | மணக்குடையான் | முள்ளுக்குறிச்சி |
| 7 | தமிழ் சாதிக் | 26.08.2023 | அரியலூர் நகரம் | இருசுக்குட்டை | சுப்பிரமணியர் கோவில் | சந்தனமாதாகோவில் தெரு |
| 8 | ஈரோடு இறைவன் | 26.08.2023 | ஜெயங்கொண்டம் நகரம் | மலங்கான் குடியிருப்பு | காந்தி பூங்கா | மாரியம்மன் கோவில் தெரு |
| 9 | தூத்துக்குடி சரத்பாலா | 27.08.2023 | திருமானூர் கிழக்கு | மஞ்சமேடு | வடுகபாளையம் | செங்கராயன்கட்டளை |
| 10 | கரூர் முரளி | 27.08.2023 | தா.பழூர் கிழக்கு | சிலால் | உதயநத்தம் | கோடாலி கருப்பூர் |
| 11 | தமிழ் சாதிக் | 27.08.2023 | அரியலூர் நகரம் | பேருந்து நிலையம் | வ.உ.சி. தெரு | பெரிய தெரு |
| 12 | சேலம் சுஜாதா | 27.08.2023 | ஆண்டிமடம் தெற்கு | இடையக்குறிச்சி | கு.வல்லம் | ஜெ.மேலூர் |
| 13 | காவேரிப்பட்டிணம் இளையராஜா | 28.08.2023 | அரியலூர் வடக்கு | கயர்லாபாத், வாலாஜாநகரம் | அஸ்தினாபுரம் | பெரியநாகலூர் |
| 14 | தூத்துக்குடி சரத்பாலா | 28.03.2023 | திருமானூர் கிழக்கு | தூத்தூர் | குருவாடி | காமரசவல்லி |
| 15 | காவேரிப்பட்டிணம் இளையராஜா | 29.08.2023 | அரியலூர் வடக்கு | வெள்ளூர் | பொய்யாதநல்லூர் | கூத்தூர் |
| 16 | கந்திலி கரிகாலன் | 29.08.2023 | ஜெயங்கொண்டம் வடக்கு | காங்கேயன்குறிச்சி | சூசையப்பர் பட்டிணம் | கச்சிபெருமாள் |
| 17 | ஆலந்தூர் ஓப்பிலாமணி | 29.08.2023 | ஜெயங்கொண்டம் தெற்கு | மேலணிக்குழி | மீன்சுருட்டி | உட்கோட்டை |
| 18 | முரசொலி மூர்த்தி | 29.08.2023 | தா.பழூர் மேற்கு | வெண்மான்கொண்டான் | சுத்தமல்லி | பருக்கல் |
| 19 | மலர்மன்னன் | 29.08.2023 | உடையார்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் | மேலத்தெரு | அரண்மனை கோயில் தெரு |
| 20 | கந்திலி கரிகாலன் | 30.08.2023 | ஜெயங்கொண்டம் வடக்கு | இரவங்குடி | வெட்டியார்வெட்டி காலனி | விழப்பள்ளம் |
| 21 | ஆலந்தூர் ஓப்பிலாமணி | 30.08.2023 | ஜெயங்கொண்டம் தெற்கு | தழுதாழைமேடு | கங்கைகொண்டசோழபுரம் | தத்தனூர் |
| 22 | மலர்மன்னன் | 31.08.2023 | உடையார்பாளையம் பேரூர் | தெற்கு தெரு | பெருமாள் கோவில் தெரு | வடக்கு தெரு |
| 23 | முரசொலி மூர்த்தி | 01.09.2023 | தா.பழூர் மேற்கு | ஸ்ரீபுரந்தான் | குணமங்கலம் | விக்கிரமங்கலம் |
| 24 | வரகூர் காமராஜ் | 01.09.2023 | வரதராஜன்பேட்டை பேரூர் | பேருந்து நிலையம் | தென்னூர் | கீழவெளி |
| 25 | ஈரோடு இளையகோபால் | 02.09.2023 | திருமானூர் மேற்கு | பளிங்காநத்தம் | சன்னாவூர் | விளாகம் |
| 26 | வரகூர் காமராஜ் | 02.09.2023 | வரதராஜன்பேட்டை பேரூர் | மேட்டுக்குப்பம் | வடக்கு தெரு | செங்கமேடு |
| 27 | ஈரோடு இளைய கோபால் | 03.09.2023 | திருமானூர் மேற்கு | கண்டிராதித்தம் | கீழக்காவட்டாங்குறிச்சி | எரக்குடி |
| 28 | திப்பம்பட்டி ஆறுச்சாமி | 04.09.2023 | அரியலூர் தெற்கு | விளாங்குடி | தேளூர் | ரெட்டிப்பாளையம் |
| 29 | கரூர் முரளி | 04.09.2023 | தா.பழூர் கிழக்கு | நாயகனைப்பிரியாள் | காடுவெட்டான்குறிச்சி | கோட்டியால் - பாண்டிபஜார் |
| 30 | வண்ணை அரங்கநாதன் | 04.09.2023 | ஆண்டிமடம் வடக்கு | கோவில் வாழ்க்கை | திருக்களப்பூர் | பெரியகிருஷ்ணாபுரம்-ரெட்டிதத்தூர் |
| 31 | சைதை சாதிக் | 05.09.2023 | ஆண்டிமடம் தெற்கு | வாரியங்காவல் | தேவனூர் | குளத்தூர் |
| 32 | சைதை சாதிக் | 06.09.2023 | செந்துறை தெற்கு | கிளிமங்கலம் | பாளையக்குடி | சிறுகடம்பூர் |
| 33 | வண்ணை அரங்கநாதன் | 07.09.2023 | ஆண்டிமடம் வடக்கு | விழுதுடையான் | பெரியகருக்கை | நாகம்பந்தல் |

அரியலூர் மாவட்ட தி.மு.க.


24.08.2023
மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கல்லூரி
விழாவிற்கு வருகைதரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே
வருக! வருக!!
சிவ.வீ.மெய்யநாதன்
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்
நிவேதா எம்.முருகன் M.L.A.,
மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர்
செ.இராமலிங்கம்
மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்
வரவில் மகிழும்....
மு.பன்னீர்செல்வம், எம்.ஏ., பி.எல்.,
தலைமை செயற்குழு உறுப்பினர்,
சீர்காழி சட்டமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை மாவட்டம்
GS Designs
98432 19951


24.08.2023
காலை உணவுத்திட்டம்
கலைஞர் மண்ணில் தொடக்கம்...
வருக! வெல்க!
நன்றியுடன்...
ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர், கழக விவசாய அணி
GS Designs


சென்னை வடகிழக்கு மாவட்டம் சார்பில்
முத்தமிழ் அறிஞர், டாக்டர்
கலைஞர்
அவர்களின்
நூற்றாண்டு விழா
மாபெரும் சிறப்பு பட்டிமன்றம்.
தலைமை
மாதவரம்.எஸ்.சுதர்சனம் M.A.,B.L.,MLA
சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், CMDA உறுப்பினர், நூலக குழு தலைவர்
தலைப்பு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம்
முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின்
ஆட்சிப் பணியா...? இயக்க பணியா...?
நடுவர்
மாண்புமிகு முனைவர். கோவி.செழியன் M.A.,B.Ed.,P.hD.,
தமிழ்நாடு அரசு தலைமை கொறடா
ஆட்சிப் பணியா..?
திரு.கரூர் முரளி
கழக கொள்கை பரப்பு துணைச்செயலாளர்
திரு.தூத்துக்குடி சரத் பாலா
தலைமை கழகச் சொற்பொழிவாளர்
இயக்கப் பணியா..?
திரு.நெல்லிக்குப்பம் புகழேந்தி
கழக கொள்கை பரப்பு இணைச்செயலாளர், தோல் உற்பத்தி தொழிலாளர்கள் நல வாரிய தலைவர்
திரு.சைதை சாதிக்
தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்
நாள் :
24-08-2023
வியாழக்கிழமை
மாலை 5.00 மணி
இடம் :
இராம லட்சுமி பேரடைஸ்,
திருமண மண்டபம்.
மாதவரம்,
ரெளண்டானா அருகில்
சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக



கோனூர் ஊராட்சியில் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளிடம் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறைகளை கேட்டறிந்தார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முயற்சியால் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு 10 கோடி பணிநாட்கள் கூடுதலாக கிடைக்கிறது என்று ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.



சென்னை கிண்டியில், நடைபெற்ற வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதி மேம்பாட்டிற்கான மாநில அளவிலான ஒருநாள் கருத்தரங்கினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி. சமயமூர்த்தி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை செயலாளர் / தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் வி. அருண்ராய், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச. நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி மற்றும் அரசு உயர்அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு

# ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கல்!

## மாவட்ட ஆட்சியர்களுடன் தலைமைச் செயலாளர் ஆலோசனை

சென்னை, ஆக.24-

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆய்வு செய்து அடிப்படை வசதிகள் உள்ளதா என்றும், பொது மக்களுக்கு தேவைப்படும் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்து உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, கடிதம் வாயிலாக அறிவுறுத்தினார்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதில் முதுகெலும்பாக திகழ்கின்றது. இச்சேவையை தடையில்லாது வழங்கவும், நல்ல தரமான மருத்துவ சேவை வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடர் ஆய்வு மேற்கொள்வது முக்கிய கடமையாகும். இந்த ஆய்வுகளினால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களுக்கு தரமான மருத்துவ சேவை கிடைத்திடவும், இந்நிலையங்களில் நவீன மருத்துவ உபகரணங்கள் மூலம் சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தங்கள் ஆய்வின்போது கீழ்காணும் பணிகளில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பணியாளர்களின் இருப்பு**

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் செவிலியர்கள், மருந்தாளுனர்கள், துணை செவிலியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடு அரசு**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிப்புற நோயாளிகள் பதிவேட்டை ஆய்வு செய்தல், இம்மருத்துவ நிலையங்களில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்படும் கர்ப்பிணிப் பெண்களுக்கு தரப்படும் மருத்துவ சேவை, பிரசவங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கண்காணித்தல், கருத்தடை திட்டங்கள் மற்றும் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விவரத்தை ஆய்வு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மருத்துவ சேவைகள்**

குழந்தைகளுக்கு தடுப்பூசி முறையாக போடப்படுகிறதா என்பதை உறுதி செய்தல், தாய்சேய் நலத்திற்கான விரிவாக்கப்பட்ட சிறப்புத் திட்டத்தை (ESP) வழங்கப்படுவதை ஆய்வு செய்தல், தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்திற்கு சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை உறுதி செய்தல், தொற்றா நோய்களான கர்ப்பபை வாய் பரிசோதனை, உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரழிவு மேலாண்மை உள்ளிட்ட திட்டங்களின் நிலையை அறிதல், மாவட்ட மனநல திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை கண்காணித்தல், தரவு மேலாண்மை மற்றும் அறிக்கை தயாரித்தல், தாய் சேய் ஆரோக்கியத்தின் நிகழ்நேரக் கண்காணிப்புக்கான (PICME) உள்ளீடுகளை ஆய்வு செய்தல், நகரும் சுகாதார அமைப்புகள் செயல்படும் விதம் மற்றும் பள்ளி சிறார் திட்டத்தினை (RBSK) மதிப்பாய்வு ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள்**

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள், கட்டடத்தின் நிலை மற்றும் தூய்மை உள்ளிட்ட ஒட்டுமொத்த உள் கட்டமைப்பை ஆய்வு செய்தல். கழிப்பறைகள் நீர் வசதியுடன் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் உள்ளதா என்பதை உறுதி செய்தல் வேண்டும். மருத்துவ உபகரணங்களின் பராமாரிப்பு மற்றும் அவற்றின் செயல் திறனை உறுதி செய்தல், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அவற்றின் இருப்பு ஆகிய பணிகளை உறுதி செய்ய வேண்டும்.

தங்களுடைய தொடர் ஆய்வுகளினால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மக்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்குவதை உறுதி செய்து தேவைப்படும் மருத்துவ வசதிகளை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்க ஏதுவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் மருத்துவ சேவைகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் தொடர்புடைய உயர் அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு, இந் நடவடிக்கை தொடர்பான அறிக்கையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களுக்கு அடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் சமர்ப்பித்து அரசினுடைய மேலான கவனத்திற்கு தெரிவிக்க வேண்டும் என தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ,.ஆ.ப., அவர்கள் கடிதம் வாயிலாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 7 நாட்கள் மிதமான மழை

சென்னை, ஆக.24-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, 23.08.2023 முதல் 29.08.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக் கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோனூர் ஊராட்சியில் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகள்

## ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறைகளை கேட்டறிந்தார்!

ஆத்தூர், ஆக.24-

கோனூர் ஊராட்சியில் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளிடம் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குறைகளை கேட்டறிந்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முயற்சியால் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு 10 கோடி பணி நாட்கள் கூடுதலாக கிடைக்கிறது என்று ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்திற்கு உட்பட்ட கோனூர் ஊராட்சியில் நலத்திட்ட பணிகளை துவக்கி வைக்க வந்த தி.மு.க. மாநில துணை பொது செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கோனூர் ஊராட்சியை சேர்ந்த உள்ள 100 நாள் வேலைதிட்டபயனாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது பயனாளிகள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் மறைந்த கலைஞர் அவர்களால் தமிழகத்தில் 100 நாள் வேலைதிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை கிராம மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தை முடக்கும் வகையில் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாக கட்டிடங்கள், மற்றும் வடிகால்களுக்கு பயன்படுத்துகிறது. இதனால் தமிழகத்தில் 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு முறையாக 100 நாள் பணிகள் கிடைக்காமல் அவதிப்பட்டனர். தமிழகத்தை ஆண்ட அ.தி.மு.க. அரசும் கிராமப்புற மக்களின் நலன் காக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் ஆட்சி மலர்ந்தவுடன் முதற்கட்ட நடவடிக்கையாக 100 நாள் வேலைதிட்டத்தை பலப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு நான் (ஐ.பெரியசாமி) ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு இத்திட்டத்தை பலப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழக முதல்வரின் ஆலோசனைப்படி கொண்டுவந்ததால்; இன்று 100 நாள் வேலை திட்ட பயனாளிகளுக்கு ஊதியம் அதிகமாக வழங்கி வருவதோடு தற்போது ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 100 நாட்கள் வேலை முறையாக கிடைக்கிறது என்றார். தற்போது தமிழக முதல்வரின் ஆலோசனைப்படி தமிழகத்தில் உள்ள 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளுக்கு 10 கோடி நாட்கள் கூடுதலாக கிடைக்கிறது என்றார். இது தவிர 100 நாள் பயனாளிகளுக்கு பணியின் போது பாதுகாப்பாக பணி செய்ய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது விரைவில் அதற்கான அறிவிப்பை தமிழக முதல்வர் வெளியிடுவார் என்றார். நிகழ்ச்சியின் போது ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, கோனூர் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளைத்தாய் தங்கபாண்டியன், கன்னிவாடி பேரூர்கழக முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய உதவி பொறியாளர் மகேந்திரன், ராஜேஸ்கண்ணா, ஊராட்சிமன்ற தலைவர்கள் கசவனம்பட்டி சக்தி, கரிசல் பட்டி பால்ராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தங்கபாண்டியயன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேல் அம்மாள், நாகலெட்சுமி ரமேஷ், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினர் சுப்பு லெட்சுமி வள்ளுவன், வருவாய் ஆய்வாளர் ரித்திகா, கிராம நிர்வாக அலுவலர் சந்திரசேகர், ஆயகட்டு தலை வர்கள், வெல்லம்பட்டி ஊர் கவுன்டர், வார்டு உறுப்பினர் வெல்லம்பட்டி மணி, டாஸ்மாக் வடிவேல், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், ஆவாரம் பட்டி தாஸ், மற்றும் கோனூர் ஊராட்சியை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலாளர் காளிமுத்து நன்றி கூறினார்.

### மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் அறிக்கை

நாகை. ஆக.24-

முதலமைச்சர் தளபதி அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி கலையரங்கம் திறப்புவிழா, பவளவிழா மலர் வெளியீட்டுவிழா, திருக்குறள் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரை யாற்ற உள்ளார்கள். இந்த விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் 24.8.2023 அன்று மாலை 4.00 மணிக்கு மாவட்ட எல்லையான திருவாளங்காடு சோதனை சாவடி அருகே மாபெரும் வரவேற்ப்பு வழங்கப்பட உள்ளது. இந்த வரவேற்பில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பின ர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத்தை உள்ளாட்சி



அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு எழுச்சி வரவேற்ப்பு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திமிரி நா. சீனிவாசன்**
**ஆகஸ்ட் 24 (2018)**



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### புதுடெல்லியில் அதிகாரிகளின் துரித நடவடிக்கையால்

# விமான விபத்து தவிர்ப்பு!

புதுடெல்லி, ஆக.24-

டெல்லி விமான நிலையத்தில் பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு கோப்புப்படம் தினத்தந்தி ஆகஸ்ட் 23, 2:50 PM TEXT SIZE இரண்டு விமானங்கள் ஒரே நேரத்தில் புறப்படுவதற்கும், தரையிறங்குவதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. டெல்லியில் இருந்து மேற்கு வங்காளத்தின் பாக்டோக்ரா நகருக்கு செல்லும் யு.கே.725 விமானம் நேற்று முன்தினம் காலை டெல்லி விமான நிலையத்தில் இருந்து புறப்படதயாராகிக்கொண்டு இருந்தது. அதே சமயம் அகமபாதாபாத் நகரில் இருந்து டெல்லிக்கு வந்த 'விஸ்தாரா' விமானம், டெல்லி விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்த இரு விமானங்களுக்கும் ஒரே நேரத்தில் புறப்படுவதற்கும், தரையிறங்குவதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. இதை கவனித்த விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர், பாக்டோக்ரா நகருக்கு புறப்பட இருந்த விமானத்தை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவு கொடுத்துள்ளார்.

இதையடுத்து டெல்லி பாக்டோக்ரா விமானம் பிரதான ஓடுபாதையில் இருந்து திருப்பப்பட்டு, வேறொரு ஓடுபாதைக்கு மாற்றப்பட்டது. இதனால் மற்றொரு விமானம் பத்திரமாக தரையிறங்கியது. சரியான நேரத்தில் கட்டுபாட்டு அறை அதிகாரிகள் உரிய உத்தரவை பிறப்பித்ததால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# கம்மாபுரம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்- பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்டம், கம்மாபுரம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சா. முருகன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கம்மாபுரம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பொறுப்பாளர் : என். ஆசைத்தம்பி**, முடப்பள்ளி கிராமம், விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

**பொறுப்புக்குழு உறுப்பினர்கள்** : 1. ஆர். மகாலிங்கம், வெளிக்கூனங்குறிச்சி, அம்மேரி. 2. எஸ்.ஆர். அரங்கநாதன், பெரியகாப்பாங்குளம். 3. மு. வெங்கடேசன், இருப்பு. 4. ஆர். கோவிந்தராசு, கிழக்கிருப்பு. 5. டி. சக்திவேல், வடக்கிருப்பு. 6. ஆர். பூமணி, தெற்கிருப்பு. 7. அன்பழகன், மேலக்குப்பம், அம்மேரி. 8. ஆர். தட்சிணாமூர்த்தி, மணக்கொல்லை. 9. கலையரசி சீனிவாசன், கைக்கனங்குப்பம். 10. பழனிசாமி, முடப்பள்ளி ஊராட்சி. 11. கணபதி, மேலக்குப்பம். 12. குமார் (எ) சேதுராமன், பெரியகாப்பான்குளம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.8.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரில்முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினைஅரசு மேல்நிலைப்பள்ளியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பேரியகருப்பன் வழங்கினார். உடன் ஒன்றியக்குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேலு,திட்ட இயக்குனர் சிவராமன் உட்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

### இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்களால்

# தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம்!

**சென்னை, ஆக. 24 -**

**இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்களால் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு :

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை நாட்டினரால் தாக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22-8-2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை நாட்டினரின் தாக்குதல் அதிகரித்து வருவதையும், 2023 ஆகஸ்ட் 21 ஆம் தேதி மட்டும் ஒன்பது சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் கவலைபடத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் மீனவர்களுக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்துவதோடு, அவர்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாக பாதிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், உடல் ரீதியாக பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதோடு, மீனவர்களிடமிருந்த பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகக் குறிப் பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஆதரவற்ற நிலையில், மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்த மீனவர்கள், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது மீனவர்களின் மீதான தாக்குதலின் தீவிரத்தை உணர்த்திடும் வகையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் கடற்பகுதியைச் சார்ந்துள்ள நிலையில், இத்தகைய தொடர்ச்சியான வன்முறைச் செயல்கள், அவர்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்குவதுடன், அவர்களின் குடும்பங்களையும் சமூகங்களையும் பாதிக்கின்றன என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தச் சூழ்நிலையில், ஒன்றிய அரசு உடனடியாகத் தலையிட்டு, இத்தாக்குதல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து, சட்டத்தின்முன் நிறுத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், உரிய தூதரக வழிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு, மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.



அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றியம் கன்டியங்கொல்லை கிராமத்தில் செயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி க.சொ.கணேசன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மலர் வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரகழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

### இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட

# இமாச்சலப் பிரதேசத்திற்கு - தமிழ்நாடு அரசு ரூ.10 கோடி நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.24-

கடந்த சில நாட்களாக கடும் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் நிவாரண பணிகளுக்காக 10 கோடி ரூபாய் வழங்கி, அம்மாநில முதல்வர் சுக்விந்தர் சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

முன்னதாக, நேற்று முன்தினம் (22-8-2023) காலை இமாச்சலப் பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு, பேரிடரால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்த விவரங்களைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் நிகழ்ந்த இயற்கைப் பேரிடர் காரணமாக அம்மாநில மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் ஏற்பட்ட கடும் சேதங்கள் தன்னை மிகுந்த வருத்தத்திற்கும், வேதனைக்கும் ஆளாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மிகவும் நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை திறமையாக மேற்கொண்டு வருவதற்காக இமாச்சலப் பிரதேசத்தின் முதலமைச்சர் அவர்களை பாராட்டியுள்ளார்.

அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்காக தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக இமாச்சலப் பிரதேச அரசுக்கு ரூபாய் 10 கோடி வழங்குவதாகவும் முதலமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ள இமாச்சலப் பிரதேசத்திற்கு உதவுவதற்காக தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும் எப்போதும் தயாராக இருப்பதாகவும், ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தன்னைத் தொடர்பு கொள்ளத் தயங்க வேண்டாம் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### நிவேதா எம்.முருகன் தலைமை! மயிலாடுதுறையில் நீட்டை ரத்து செய்யக் கோரி

# ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரை கண்டித்து உண்ணாவிரத அறப்போராட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. கண்டன உரை! செ.இராமலிங்கம், குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை, ஆக. 24 -

மயிலாடுதுறை மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து மயிலாடுதுறை தலைமை தபால் அலுவலகம் முன் கிட்டப்பா அங்காடி அருகே உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் வி. முத்து, மருத்துவ அணியை சேர்ந்த எஸ்.பாலாஜி, அறிவழகன், மருதவாணன், ரெத்தினஅருண்குமார், அ.ஜெயபிர காஷ், எஸ். சதீஸ்குமார், எஸ்.அருண் பிரசாத், அபிஷேக், முகமதுஅலாவுதீன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ. ஜுபையர்அகமது, கோ.சி. மதி.திருமாவளவன், எம். எஸ்.விஜய், ஜே.கே. வினோத்பாண்டியன், என். ஆனந்தன், சௌ. சர்வோ தயன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வி.கேசவன், டி.சந்தோஷ், ஏ. இளைய ராஜா, பி.செந்தில் குமார், சுப.சிற்றரசன், ஜி. ஆர்.மோகன்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், மாநிலங்களவைக் குழு தலைவர் திருச்சி சிவா கண்டன உரையாற்றினார். உண்ணாவிரதப் போராட்டத்தில் , மயிலாடுதுறை நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.பன்னீர்செல்வம், ஏ.சி. என்.விஜயபாலன், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.இராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல.சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான.இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்குகு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர். ராஜா, சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி கிழக்கு பஞ்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், ஜெ.கபிலன், அ.காந்தி, சுபா நெடுஞ்செழியன், நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.சுவாமிநாதன், சிகினேச்சர் ஹர்சத், பி.சென்னடி, பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம்.சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இராம.சேயோன், இரா. மனோகரன், சை.சௌமியன், ஆர்.முருகன், லதா சுப்பிரமணியன், எம்.எஸ். சம்சுதீன், சாதிக், ராஜ்குமார், காழிகலைவாணன், பெரு.வீரமணி, ஆர்.செல்வராஜ், எம். எஸ்.முத்துகுபேரன், தீபாசத்தியேந்திரன், கே. தேசப்பன், ஆர். எஸ்.ஸ்ரீதர், கே.விக்னேஷ், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஷ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ்,கமல ஜோதிதேவேந்திரன், காமாட்சிமூர்த்தி, நந்தினி ஸ்ரீதர், கே.மகேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகர், பேரூராட்சி தலைவர்கள் சுகுணாசங்கரி, குமரவேல், பூங்கொடி அலெக்சாண்டர், சங்கீதாமாரியப்பன், கண்மணிஅறிவழகன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் ஆh.நடராஜன், ஆர்.கே.சங்கர், மலக்கோயில் பிரபாகர், எஸ்.சிவக்குமார், வை. தெய் வநாயகம், எம். குமார், மேனகாமாரியப்பன். அரசு வழக்கறிஞர்கள் அருள்தாஸ், தணிகை பழனி, மற்றும் ஒன்றிய, கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.எஸ்.என்.செந்தில் நன்றி கூறினார்.

### மீன்பிடி தடைக்கால நிதி ரூ.8000 மாக உயர்வு !

# மீனவர்களுக்கு 10 புதிய திட்டங்கள் அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## கழக மீனவர் அணித் தலைவர் மிசா.இரா.பெர்னார்டு அறிக்கை!

சென்னை, ஆக. 24 -

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் மீனவர்களுக்கு முத்தான 10 புதிய திட்டங்களை அறிவித்த மீனவர்களின் ஒரே பாதுகாப்பு அரண், தமிழக முதல்வர் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பிலும் ,மீனவ மக்களின் சார்பிலும் நன்றி தெரிவிப்பதாக கழக மீனவர் அணித் தலைவரும் சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினருமான மிசா.இரா.பெர்னார்டு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆட்சியில் இருந்தாலும், இல்லாத காலத்திலும் மீனவர்களின் நலன் காக்க ஓடி வரும் ஒப்பற்ற தலைவர் தான் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் மீனவ சமுதாய மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை, குறைகளை கேட்டறிந்து 10 புதிய திட்டங்களை அறிவித்து மீனவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ள நம் திராவிட மாடல் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கச்சத்தீவு மீட்பு**

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த காலங்களில் இராமேஸ்வரம்,நாகையிலும் இலங்கை அரசை கண்டித்து அறைகூவல் விடுத்த ஒரே மீனவர்களின் காவலர் கழகத் தலைவர் அவர்கள் தான் இன்று தமிழக முதல்வராக மீனவர் நல மாநாட்டில் தலைமையேற்று, பா.ஜ.க . ஆட்சியில் மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதை, தாக்கப்படுவதை வன்மையாக கண்டித்ததோடு,

கச்சத்தீவு மீட்பு தான் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை காத்திட ஒரே வழி என்பதை எடுத்துரைத்து ஒன்றிய அரசு மீட்டுத் தர வேண்டுமென வலியுறுத்தியதற்கு மீனவர் அணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று நம் முதல்வர் அவர்கள் வழி காட்டுதலில் ஒன்றிய அரசு அமைந்ததும் கச்சத்தீவு மீட்கப்படும் என்பது உறுதி.

**மீன்பிடி தடைக்கால நிதி உயர்வு!**

என்றும் மீனவர் நலனில் அக்கறை கொண்ட கழக அரசின் முதல்வர் அவர்கள் தான் மீனவர்களுக்காக தமிழக வரலாற்றிலேயே முதன் முதலாக அரசு சார்பில் மீனவர் நலன் மாநாடு நடத்தி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது தொடங்கி வைத்த மீன்பிடி தடைக்கால நிதி உதவி திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து நிதியை ரூ.5000 லிருந்து ரூ.8000 மாக வழங்கிட ஆணையிட்டுள்ளார் தாயுள்ளம் கொண்ட நம் முதல்வர் அவர்கள்.

**10 புதிய திட்டங்கள்**

அலைகடலென மீனவ மக்கள் திரண்டிருந்த மீனவர் நல மாநாட்டில் 5 ஆயிரத்து 35 மீனவ மக்கள் வீடுகளுக்கு பட்டா, 45 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தொழில் கடன் உதவி, 1லட்சத்து 79ஆயிரம் மீனவர்களுக்கு மீன்பிடி தடைக் கால நிதி ரூ.8 ஆயிரமாக உயர்வு, நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள், நாட்டுப் படகுகளுக்கு மானிய விலை மண்ணெண்ணெய் 3700 லிட்டராக உயர்வு, விசைப்படகுகளுக்கு மானிய விலையில் டீசல் 19,000 லிட்டராக உயர்வு, தங்கச்சி மடத்தில் மீன்பிடி துறைமுகம்,மீனவர் காப்புறுதி திட்டத்தில் 250 குடும்பத்திற்கு நிவாரணம், மீனவர் வீட்டு வசதி அலகுத் தொகையை ரூ.இரண்டு லட்சத்து நாற்பதாயிரமாக உயர்த்தியது, கடல் அரிப்பு ஏற்படும் மீனவ கிராமங்களில் சாத்திய கூறுகளை ஆராய்ந்து தூண்டில் வளைவு அமைத்திடவும் அறிவித்துள்ள மீனவர்களின் காவலர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்வதாக கழக மீனவர் அணித் தலைவர் இரா.பெர்னார்டு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தென்மேற்கு

# பருவமழை 8% குறைவு!

## வானிலை மையம் தகவல்!

சென்னை, ஆக.24-

தென்மேற்கு பருவமழை வழக்கத்தைவிட 8 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் கேரளம், தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் வழக்கத்தைவிட மழை குறைவாகவே காணப்பட்டது.

இதே காலகட்டத்தில் வழக்கமாக 182.2 மில்லி மீட்டர் மழை பெய்திருக்க வேண்டும் என்ற நிலையில், 8 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளது.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார் . உடன் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.



நீட் தேர்வை ரத்து செய்ய கோரி ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற உள்ள உண்ணாவிரத்தை முன்னீட்டு மதுரை மாநகர் இளைஞர் அணி சார்பில் துண்டு பிரச்சாரத்தை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி துவக்கி வைத்து மாணவர்களுக்கு வழங்கிய போது எடுத்த படம். உடன் இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன் துணைச் செயலாளர் மூவேந்திரன், இளைஞர் துணை அமைப்பாளர்கள் ராம் பிரசாத், தமிழ்செல்வன், ஐயப்பன், சுந்தர், தினேஷ் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், மாணவர்கள் உள்ளனர்.

## ‘நீட்’ தேர்வு தமிழ்நாட்டில் நுழைந்ததற்கு எடப்பாடி பழனிச் சாமியே காரணம்!

# ஆளுநரின் ஆணவத்துக்கு வெகு விரைவில் முடிவு காண்போம்!

## சென்னை - அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை,ஆக.24-

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் பேட்டியளித்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, “தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வு நுழைந்ததற்கு எடப்பாடி பழனிச்சாமியே காரணம்!” என்றும் “ஆளுநரின் ஆணவத்துக்கு வெகு விரைவில் முடிவு காண்போம்” என்றும் குறிப்பிட்டார்.**



சென்னை - அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியின்போது அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்ட தாவது : -

கடந்த கால கழக ஆட்சிக் காலங்களில் உயரிய பல அரசுப் பதவிகளில் பல்வேறு ஜாதிகளைச் சார்ந்தவர்களின் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல்தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் அதுவரையில் ஒரு பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் நீதிபதியாக வர இயலவில்லை என்கிற ஒரு ஆதங்கம் இருந்த நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறபோது ஒரு பட்டியல் இனத்தைச் சார்ந்தவர் நீதிபதியாக இருக்க வேண்டும் என்று, வரதராஜன் என்பவரை, அதாவது அவர் மாவட்ட நீதிபதிகள் வரிசையில் 12வது இடத்தில் இருந்தார். 11 பேர் அவரைவிட சீனியர்கள் இருந்தார்கள். அந்த சீனியாரிட்டி எல்லாம் சூப்பர்ஸ்க்ரிப்ட் செய்து, இப்போது இருக்கும் கொலீஜியம் எல்லாம், அப்போது உயர்நீதிமன்றத்திற்கு கிடையாது. அரசின் சார்பாக பரிந்துரைக்க வேண்டும். அந்தப் பரிந்துரையில் வரதராஜன் என்பவரை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு பரிந்துரை செய்து முதன்முறை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பட்டியல் இனத்தைச்சார்ந்த வரதராஜன் நியமிக்கப்பட்டார்.

அவரே பிற்காலத்தில் உச்சநீதிமன்ற முதல் பட்டியலினத்தைச் சார்ந்த நீதிபதியாகவும் உயர்வு பெற்றார் என்பது வரலாறு.

எப்படி தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட அல்லது இதுவரை பிரதிநிதித்துவம் இல்லாத சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு பதவிகள் வழங்க வேண்டும் என்று எண்ணினாரோ அதே நோக்கத்தோடுதான் இன்றைக்கு டி.என்.பி.எஸ்.சி. தலைவராக தமிழ்நாடு தேர்வாணையத்தின் தலைவராக இதுவரையில் எந்தச் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவில்லையோ அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை கலைஞருடைய வழியில் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள் நியமித்து ஆளுநருக்குப் பரிந்துரை செய்து அனுப்பி இருக்கிறார்.

1932இல் இருந்து தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் சேர்மனாக நியமிக்கப்பட்டவர்கள் பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. அப்படி நியமிக்கப்பட்டவர்களில் ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் விபரம் என்னிடம் இருக்கிறது.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட சமுதாயத்தில் தவிர எந்தச் சமுதாயத்தில் இருந்து இதுவரையில் ஒருவர் சேர்மனாக வரவில்லையோ, அந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை ஓய்வு பெற்ற டி.ஜி.பி.யை, அதாவது காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றி எந்தவிதமான சர்ச்சைகளுக்கும் ஆளாகாமல் தன்னுடைய பணியை ஆற்றிய, அனைத்துத் தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓய்வு பெற்ற டி.ஜி.பி. சைலேந்திரபாபு அவர்களை தமிழக அரசு பரிந்துரை செய்து ஆளுநருக்கு அனுப்பினால் அதை ஏற்றுக்கொள்ள ஆளுநர் மறுக்கிறார் என்றால் ஏதோ அரசியல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான்.

அது மட்டும் அல்ல, உங்களுக்கெல்லாம் தெரியும். தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வாணையத்தில் கடந்த காலத்தில் பல முறை கேடுகள் நடைபெற்றிருக்கிறது. உச்சநீதிமன்றம் வரை சென்று, அந்தத் தவறுகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இனி வருங்காலங்களில் அப்படி இருக்கக் கூடாது என்பதற்காக, காவல்துறையின் டி.ஜி.பி.யாக இருந்து ஓய்வு பெற்ற ஒருவரை தமிழக அரசு பெருந்தன்மையோடு நியமித்து அனுப்பி இருக்கிறது என்று சொன்னால் அதையும் கவர்னர் அவர்கள் புறக்கணித்து இருக்கிறார் என்பது உள்ளபடியே கண்டத்திற்குரியது.

சமூக நீதியின் அடிப்படையில் இதுவரையில் எந்த ஒரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நியமிக்கப்படவில்லையோ, அந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரை இன்றைக்கு தமிழக அரசு நியமித்திருக்கிறது. எனவே இதையெல்லாம் மனதில் கொண்டு ஆளுநர் மறுபரிசீலனை செய்து உடனடியாக அதை ‘க்ளியர்’ செய்ய வேண்டும்.

### ஆளுநரின் ‘மெட்ராஸ் டே’

இன்றைக்குக்கூட “சென்னை தினம்” உங்களுக்கு எல்லாம் தெரியும். எல்லாப் பத்திரிகைகளிலும், எல்லா ஊடகங்களிலும் “சென்னை தினம்” என்றுதான் இப்போது கொண்டாடப்படுகிறது. ஆனால் ஆளுநர், ஃபேஸ் புக்கில் “மெட்ராஸ் டே” என்று போடுகிறார். எனவே சென்னையின் மெட்ராஸ் என்ற பெயரை மாற்றி ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆகிறது. அதற்குப் பிறகும் இன்றைக்கு “மெட்ராஸ் டே” என்று ஆளுநர் போடுகிறார் என்றால், ஏதோ தமிழ்நாட்டு மக்களை சீண்டிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆளுநர் செயல்படுகிறார். தமிழ்நாடு என்று சொல்வதை மறுக்கிறார்.

சென்னை என்று பெயர் மாற்றத்தைச் சொல்ல மறுக்கிறார்.

அதோடு மட்டுமல்ல, தமிழக அரசு அறிவித்திருக்கும் பாட நூல்களை இனிமேல் பல்கலைக் கழகங்களில் படிக்கக் கூடாது என்ற உத்தரவையும் பிறப்பிக்கப்போவதாகச் சொல்லி இருக்கிறார். எனவே திட்டமிட்டு ஏதோ ஒரு சதியை, ஒரு குழப்பத்தை உருவாக்குவதற்காக ஆளுநர் செயல்படுகிறார். இந்த செய்கையை தமிழகத்து மக்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள், சகித்துக் கொள்ள மாட்டார்கள். அதற்கு உரிய விலையை நிச்சயமாக ஆளுநர் ரவி தர வேண்டியிருக்கும்.

**கேள்வி:** சைலேந்திரபாபு விஷயத்தில் நீங்கள் சொன்னதுபோன்று சாதிதான் பிரச்சினையா?

இல்லை. வயதை குறிப்பிட்டு காண்பிக்கிறாரா? இல்லை பத்து உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டிருக்கிறதா? அவர் அரசிடம் என்ன விளக்கம் கேட்டிருக்கிறார்?

**பதில்:** அந்த விளக்கத்துக்குரிய பதில் எல்லாமே அனுப்பி ஒரு மாதம் ஆகிவிட்டது. எனவே உங்கள் முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

சைலேந்திரபாபு ஒரு அரசியல்வாதி அல்ல. ஏற்கனவே ஜெயலலிதா இருந்தபோது அ.தி.மு.க.வினரை சேர்மனாக நியமித்தார்கள். எங்கள் கட்சியிலும் பல அனுபவசாலிகள் இருக்கிறார்கள். பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் தி.மு.க.வைச் சார்ந்த யாரும் நியமிக்கப்பட வில்லை. காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றி, ஒரு Non Controversial ஆஃபிசராக இருந்தார் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். அவரைத்தான் நியமித்திருக்கிறார். அவரும் ஒரு ஐ.பி.எஸ். ஆபீசர் தான். பல சிறப்பான வழக்குகளை எல்லாம் நடத்தி முடித்துக் கொடுத்திருக்கிறார்.

### ஆளுநரின் இணை அரசாங்கம்!

டி.என்.பி.எஸ்.சி.யில் ஊழல் நடந்தது என்பதை கடந்த காலத்தில் உச்சநீதிமன்றமும் சுட்டிக் காட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, பேப்பர் வெளியே போவது இது எல்லாம் இருந்திருக்கிறது. எனவே ஒரு போலீஸ் ஆபீசர் இந்த நேரத்தில், பணி ஓய்வு பெற்ற அனுபவ மிக்க போலீஸ் ஆபீசர் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் பரிந்துரை செய்திருக்கிறோம். ஆனால் அதைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை ஏதோ ஒரு உள்நோக்கம் ஆளுநருக்கு இருக்கிறது.

அதாவது அவர் ஒரு “இணை அரசாங்கம்” நடத்த முயற்சிக்கிறார்.

சைலேந்திரபாபு பிரச்சினை மட்டுமல்ல, இன்றைக்கு எல்லோருமே “சென்னை டே” என்றுதான் சொல்கிறோம். “மெட்ராஸ் டே” என்று போடுகிறார்.

தமிழ்நாடு என்று சொல்ல மறுக்கிறார். பாட நூல்களைப் பொறுத்தவரை தமிழக அரசின் கொள்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று ஒரு அரசாங்கத்திற்கு தலைமை தாங்குபவர் கூறுகிறார் என்றால், இதை வேடிக்கை பார்த்துக் கொண்டு மத்திய அரசு இருப்பது எந்த வகையில் நியாயம். இதற்கெல்லாம் மிக விரைவில் நிச்சயமாக நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்கனவே ஆளுநருடைய அதிகாரங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எனவே இதை நான் சொல்வதற்கு காரணம் ஜாதியைக் குறிப்பிடவில்லை. எந்த ஜாதி என்று நான் சொல்லவில்லை. இதுவரையில் இருந்தவர்கள் வேறு வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். இதுவரையில் எந்த ஒரு கம்யூனிட்டியைச் சார்ந்தவர் இல்லையோ, வெளிப்படையாகச் சொல்கிறேன் ஒரு நாடார் சமுதாயத்தைச் சார்ந்தவர் இதுவரையில் சர்வீஸ் கமிஷன் சேர்மனாக வரவில்லை. நீங்கள் கேட்டதனால் இதை நான் சொல்கிறேன். ஒரு நாடார் சமுதாயத்தைச் சார்ந்தவர் இதுவரையில் வரவில்லை. எனவே ஒரு நாடார் சமுதாயத்தைச் சார்ந்தவரை, எப்படி கலைஞர் அவர்கள் அன்றைக்குப் பதவி கிடைக்காதவர்களுக்கு எல்லாம் கொடுத்தாரோ, அதேபோல ஒருவரை அமர்த்த வேண்டும் என்ற சமூகநீதி நோக்கத்தோடு இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். இதை நாங்கள் ஜாதிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை.

ஆனால் இதுவரையில் பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு கம்யூனிட்டிக்கு கொடுத்திருக்கிறார். அதை அவர் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மாறாக இப்படி கவர்னர் செய்கிறார்.

அவர் நியமித்திருந்தால் இந்தப் பிரச்சினை வரப்போவதில்லை அல்லவா. அவர் மறுத்த காரணத்தினால் இதையெல்லாம் நாங்கள் மக்கள் மத்தியில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இப்போது கூட தமிழ்நாடு என்று சொல்வதற்கு மறுத்தால், நாங்கள் பழைய விஷயங்கள் எல்லாம் சொல்ல வேண்டி வரும்.

சங்கரலிங்க நாடார் ஏன் இறந்தார்? அண்ணா எப்படி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்? அதற்குப் பிறகு அண்ணா மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு அந்த தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்கு கலைவாணர் அங்கத்தில் கலந்துகொண்டு, “என் உயிர் போனாலும் பரவாயில்லை. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாவிட்டால் நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்“ என்று பேசியது எல்லாம் சொல்ல வேண்டி வரும்.

எனவே கவர்னர் இப்படிப் பேசுவது ஒரு வகையில் எங்களுக்கு பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்வதற்குத் தூண்டுகிறாரா என்று தோன்றுகிறது.

**கேள்வி:** சைலேந்திரபாபு அவர்கள் ஏற்கனவே சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி, அப்போலோ ஐ.ஏ.எஸ். அகாடமிகளில் எல்லாம் பயிற்சி ஆசிரியராக இருந்திருக்கிறார். இவர் தேர்வாணையத் தலைவராக நியமிக்கப்பட்டால் அந்தப் பயிற்சி நிறுவனங்களுக்குச் சாதகமாகச் செயல்படுதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால்தான் நிறுத்தி வைக்கப்பட்டதாக தகவல் ஒன்று கூறப்படுகிறதே?

**பதில்:** அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் டைரக்டாக ரெக்ரூட் செய்யும் பவர் கிடையாது. சர்வீஸ் கமிஷன் என்பது தேர்வு எழுதி பாஸ் செய்து அந்த மார்க்கின் அடிப்படையில்தான் போடுகிறார்கள். அந்த வெளிப்படைத் தன்மை இருக்கிறது. மார்க் குறைவாக வாங்கியவர்களுக்கு கொடுத்து விட்டார்கள் என்று சொல்லி சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் வந்திருக்கிறது. அதனால் ஒரு அகாடமியில் படித்தவர்களுக்கு கொடுக்கப்போகிறார் என்று சொல்ல முடியாது.

அப்படிப் பார்த்தால் இவர் கவர்னராக இருக்கிறார். இவர் பழைய ஐ.பி.எஸ். எனவே இவர் போலீஸ்காரர்களுக்கு நன்மை செய்வார் என்று சொன்னால் எங்களால் ஒப்புக் கொள்ள முடியுமா? எனவே அந்த தனி விவகாரங்கள் இதில் வராது. அப்படி பார்த்தால் பல ஐ.ஏ.எஸ்., பல ஓரியண்டேசன் வகுப்புகளுக்குச் செல்கிறார்கள். அது ஒரு காரணமாகச் சொல்வதற்கு வாய்ப்பே கிடையாது. காரணம் என்ன என்றால் சர்வீஸ் கமிஷனில் ஆளைப் பார்த்து தேர்ந்தெடுப்பது இல்லை. அவர் எழுதிய எழுத்தை வைத்து, எக்ஸாம் ரிசல்ட் வைத்துதான் தேர்ந்தெடுக்கிறார்கள்.

**கேள்வி:** உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை என்று சொல்கிறார்களே?

**பதில்:** எந்த வகையில் பின்பற்றப்பட்டிருக்கிறது அதற்குரிய பதில் சொல்லியாகிவிட்டது. பின்பற்றப்படவில்லை என்று வெளிப்படையாகச் சொல்லட்டும். உங்களையாவது அழைத்துச் சொல்லட்டும். எங்களிடம் சொல்ல வேண்டாம். எல்லாத்துக்கும் கூட்டம் போட்டுச் சொல்கிறார் அல்லவா...

நீட் எக்ஸாம் எழுதுகிறவர்களை வைத்து கூட்டம் போட்டு பேசி வாங்கி கட்டிக்கொண்டார் அல்லவா... அதே போல உங்களிடமாவது கேட்டு செய்யலாம் அல்லவா.

**கேள்வி:** புதியவர்களுக்கு வாய்ப்பு தராமல், ஓய்வு பெற்றவர்களுக்கு வாய்ப்பு தருகிறீர்களே?

**பதில்:** எக்ஸ்பீரியன்ஸ் கவுன்ட்ஸ். அதற்காகத்தான் புதியவர்கள் அல்ல, அந்த போஸ்ட்க்கு ஒரு எக்ஸ்பீரியன்ஸான ஆளை நியமிக்க வேண்டும் என்பதுதான். சுப்ரீம் கோர்ட் வழிகாட்டு நெறிமுறைகளில் அதுவும் ஒன்று.

### மாற்றத்திற்குரிய அறிகுறிகள்!

**கேள்வி:** - முதலில் நீட். இப்போது டி.என்.பி.எஸ்.சி. தொடர்ந்து இந்த மாதிரி நீங்கள் கோப்பு செய்வரை எல்லாம் அவர் ரிஜெக்ட் செய்து கொண்டே இருக்கிறார். நீங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தாலும், அவர் கண்டு கொண்டதாக இல்லை. அதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:** இன்னும் ஆறு மாதம் பொறுமையாக இருக்க வேண்டும். பார்லிமென்ட் எலக்சன் வரும். காஷ்மீரில்இருந்து கன்னியாகுமரி வரை ஆட்சி மாற்றம் வரும். வருகிறபோது இவர் ஆட்டோமேட்டிக்காக ஓடிவிடுவார். நிச்சயமாக 2024 இல் மாற்றம் வரப்போகிறது. ஒரு மாற்றத்திற்குரிய அறிகுறிகள்தான் இதெல்லாம். அப்படி வருகிறபோது நிச்சயமாக இந்த ஆளுநர் எல்லாம் என்ன நிலைக்கு ஆளாவார்கள் என்பதைப் பார்ப்போம்.

எங்கள் தலைவர் அனுமதித்தால் பழைய தி.மு.க.வாக மாறுவோம். மாறக் கூடியவர்கள் தி.மு.க.வில் இருக்கிறார்கள். எங்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். எப்போதுமே ஆளும் கட்சியாக இருந்தால் அந்த தலைவரும் கட்டுப்படுத்தினார். அப்படித்தான் கலைஞர் முதல் முதலாக சி.எம்.ஆக வரும்போது அவரை எல்லோருமே ஒரு மாதிரி சொன்னார்கள். அவர் சி.எம்.ஆன பிறகு அப்படியே மாறிவிட்டார். அதே போல எங்களுக்கு என்று ஒரு வழிமுறை இருக்கிறது. ஆனால் கிண்டிப் பார்த்தால், தூண்டிப் பார்த்தால் நிச்சயமாக பழைய தி.மு.க. பழைய உருவம் எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு வரும். வருகிறபோது அவரே சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுவார்.

**கேள்வி:** மதுரை அ.தி.மு.க. மாநாட்டிற்கு போதிய காவல்துறை பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள். தி.மு.க. அரசு அதை எவ்வாறு பார்க்கிறது?

**பதில்:** எந்த விதமான அசம்பாவிதமும் இல்லாமல் மாநாடு நடந்திருக்கிறது. என்று சொன்னால் தி.மு.க. காவல்துறை எந்த அளவிற்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. இவர்கள்தான் பொறுப்பில்லாமல் சமைத்த உணவு எல்லாம் கொட்டுகிறார்கள் என்று நீங்கள்தான் காட்டி இருக்கிறீர்கள். காவல்துறை இந்த இடத்தில் ட்ராபிக் ஜாம் செய்தது. போகிற இடத்தில் வண்டி நிறுத்துகிறது என்று வரவில்லை. முன்னாடி எல்லாம் என்ன செய்வார்கள் என்றால், நாங்கள் எல்லாம் மாநாடு நடத்தும்போது ஆர்.டி.ஓ. ஆஃபிசிலேயே பெர்மிஸன் தர மாட்டார்கள். அந்தந்த இடத்தில் போலீஸ்காரர்கள் நிறுத்தி விடுவார்கள். அங்கு எந்த ஒரு பஸ்சும் இப்படி நிறுத்தியதாக எங்களுக்கு தகவல் வரவில்லை, எல்லாவிதமான பாதுகாப்புகளோடும்தான் நடந்தது. அவர்களே, அதை சொல்ல முடியாது. காரணம் என்ன என்றால், நீங்களே பார்த்தீர்கள். மீடியா முன்பு மாதிரி கிடையாது. எதையும் மறைக்க முடியாது. சாப்பிட்டு குப்பையில் கொட்டியதையே நீங்கள் ஊர் முழுவதும் காண்பித்து விட்டீர்கள். முன்பு எல்லாம் அப்படி நடந்திருக்க முடியாது. இப்போது குப்பையாக சாப்பாடு கொட்டியதை காட்டி இருக்கிறீர்கள். எனவே அப்படி எதாவது நடந்திருந்தால் நீங்களே சுட்டிக் காட்டியிருப்பீர்கள் அல்லவா...

### பா.ஜ.க.விற்கு அ.தி.மு.க.வின் மறைமுக மிரட்டல்!

**கேள்வி:** அ.தி.மு.க.வின் முன்னாள் முதலமைச்சர் சொல்லி இருக்கிறார், அ.தி.மு.க.வை ஒழிக்க முடியாது, அது எந்தக் கொம்பனாலும் முடியாது என்று சொல்லி இருக்கிறார். அது மறைமுகமாக தி.மு.க.விற்கான மிரட்டலா?

**பதில்:** அது பி.ஜே.பி.க்காக இருக்கும், அண்ணாமலைக்காக இருக்கும். எங்களுக்கு இல்லை. நாங்கள் அவர்களை அழிக்க வேண்டும் என்று நினைத்ததே இல்லையே. நான் பல முறை சொல்லிவிட்டேன், எங்கள் பங்காளி என்று தானே சொல்கிறேன். பகையாளி பி.ஜே.பி.தான். நான் பல கூட்டங்களில், பலமுறை சொல்லி விட்டேன். அ.தி.மு.க. என்பது எங்கள் பங்காளி. அதனால் நாங்கள் அவர்களை அழிக்க விரும்பவில்லை. அவர்கள் எங்களோடு வரப் போகிறவர்கள்தானே. பிற்காலத்தில் வரப்போகிறவர்கள்தான். நாங்கள் எல்லாம் ஒரே பிராண்ட் தானே.

**கேள்வி:** நீட் தேர்வு ரத்து செய்வதற்காக தி.மு.க. நடத்திய போராட்டம் நாடகம் என்று எடப்பாடி குற்றம் சாட்டுகிறார். தி.மு.க. கூட்டணிதான் கொண்டு வந்தது என்று ஒரு பேப்பரை தூக்கி காட்டுகிறார்.

**பதில்:** அவருக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியவில்லை. 2011 பிப்ரவரி மாதம் கலைஞர் முதலமைச்சராக இருந்த வரையிலும், நீட் நடந்ததா? அதற்கு அடுத்து ஜெயலலிதா அவர்கள் இருந்தார்கள். அந்த அம்மா இருந்தபோதுகூட நீட் நடைபெறவில்லை. எடப்பாடி வந்த பிறகுதான் நீட். எனவே நீட் வந்ததற்கு முழு காரணம் எடப்பாடிதான். இதே சட்டம் வந்தபோது கலைஞர் அவர்கள் 2011 வரையிலும் எக்ஸெப்ஷன் வாங்கி நீட் நடைபெறவில்லை. அதேபோல் ஜெயலலிதா எக்ஸெப்ஷன் வாங்கினார். எடப்பாடி என்ற அடிமை வந்த பிறகுதான் தைரியமாக நீட் வைத்தார்கள். நீட் எக்ஸாம் நடத்துவதற்கு சோல் ரெஸ்பான்சிபிலிடி இஸ் டேகன் பை எடப்பாடி.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

---

## தி.மு.க. மருத்துவ அணி

# மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மருத்துவ அணியின் மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருவாரூர் மாவட்டம்

தலைவர் - வி.ஜே.. சரவணன், எம்பிபிஎஸ்., டிஏ.,டிஎச்ஏ., எம்டி., நெ 1,கந்தன் குடில் கொத்தமங்கலம் மெயின் ரோடு மடப்புரம், திருத்துறைப்பூண்டி.

துணை தலைவர்கள் - சு வெங்கட்ரமணன், பி.டி.எஸ்., நெ 3/44,கீழ அக்ரஹாரம், மணவாளநல்லூர் குடவாசல், திருவாரூர் என் பாலசுந்தரம், பி.எஸ்சி நெ2/301,மேற்கு தெரு, அம்மையப்பன், திருவாரூர். ஆர்.எஸ்.மலர்கொடி, எம்.ஏ நெ 1, மாஸ் கம்ப்ளக்ஸ், கொல்லு மாங்குடி நன்னிலம்

அமைப்பாளர் - **சு.திவாகரன்,** எம்பிபிஎஸ்., சிசிஇபிடிஎம்., நெ 22/00 மில் தெரு, திருவீழிமிழலை, குடவாசல் ஒன்றியம் திருவாரூர்.

துணை அமைப்பாளர்கள் - ஜி.ஷர்மிளா பானு, எம்பிபிஎஸ்., நெ 162 ஏ ஆர் ரோடு, கூத்தாநல்லூர், திருவாரூர் பா சக்தி அபர்ணா, பி.டி.எஸ்., நெ 232, திருவாரூர் ரோடு திருத்துறைப்பூண்டி டி. திருப்புகழ்ச்செல்வன், எம்பிபிஎஸ்., நெ 21/90 மேல சேத்தி, குன்னலூர் போஸ்ட் திருத்துறைப்பூண்டி.

### திருவாரூர் தொகுதி

துணை அமைப்பாளர்கள் - கே.பி.ரமேஷ் குமார், பி.பார்ம் நெ 35 டி,சூரியன் குளம் தென்கரை, திருவாரூர். என்.பி..சரவணா, பி.பார்ம் நெ 3293 சூர்யா நகர், சுந்தர வளாகம், திருவாரூர்.

### நன்னிலம் தொகுதி

துணை அமைப்பாளர் - அரவிந்தன், பி.பார்ம் நெ17/2, செங்குந்தர் முதலியார் தெரு குடவாசல்.

### திருத்துறைப்பூண்டிதொகுதி

அமைப்பாளர் - **எம்.ஆர்.வீரராகுல், பி.டி.எஸ்.,** நெ3/95, ஆசாரி தெரு, கட்டிமேடு திருத்துறைப்பூண்டி.

துணை அமைப்பாளர் - எம்.தீபன், பி.பார்ம் நெ 3/248, மாதாகோவில் தெரு, கடியாச்சேரி அஞ்சல் திருத்துறைப்பூண்டி

### மன்னார்குடி தொகுதி

அமைப்பாளர் - கி.அரவிந்தன், பி.டி.எஸ்., எம்.டி.எஸ் ., நெ 3 தாலுகா ஆபிஸ் ரோடு மன்னார்குடி

### கடலூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - பி.ராமசந்திரன், எம்பிபிஎஸ்., எம்டி நெ 21, இரட்டை தெரு, உடையார் குடி காட்டுமன்னார்கோவில் வட்டம், கடலூர்

துணை தலைவர்கள் - டி.எம்.செல்வம், எம்டி கிழக்கு காஞ்சகொள்ளை அஞ்சல் காட்டுமன்னார்கோவில், கடலூர். எஸ். சுரேஷ்பாபு, எம்.பி.பி.எஸ்., டி.டி.வி.எல் நெ 44/37,2 வது வலது தவுலத் நகர், கே.என்.சி எதிரில், செம்மண்டலம் கடலூர். சு. வடிவேலன், பி.பீ.டி., நெ 3/5, சங்கரன நாயுடு தெரு திருப்பாப்புலியூர், கடலூர். கு. சசிகுமார், பிபீடி., சி.எம்.எஸ்., நெ 64, கிழக்குத் தெரு, தர்மநல்லூர்,கடலூர்.

அமைப்பாளர் - **பா.கமலக்கண்ணன்,** எம்டி., நெ 45,பாஷ்யம் தெரு, மஞ்சக்குப்பம்,கடலூர்.

துணை அமைப்பாளர்கள் - சி.அவினாஸ் குமார், எம்,பி,பி.எஸ்., நெ 7A,ஜோதி நகர், வடலூர்,கடலூர் மாவட்டம் ம. சித்தார், எம்,பி,பி.எஸ்., முட்டம், காட்டுமன்னார்கோவில் கடலூர் ச.சங்கவி, எம்,பி,பி.எஸ்., நெ 18, ராஜேந்திரா கார்டன், உசுப்பூர் அண்ணாமலை நகர் அஞ்சல் சிதம்பரம், கடலூர் கோ. அருண்குமார், எம்,பி,பி.எஸ்., டிஎச் நெ47, வி.ஒ.சி நகர்,இம்பீரியல் ரோடு, கடலூர் துறைமுகம், கடலூர். ஆர்.கிருஷ்ணராஜ், பி.டி.எஸ்., எம்.டி.எஸ்., நெ 7வது குறுக்கு தெரு, கனகசபை நகர்,சிதம்பரம்.

### கடலூர் தொகுதி

அமைப்பாளர் - **பா.கலைக்கோவன், எம்,பி,பி.எஸ்.,** டீ.டி.சி.டி நெ 209,ஏ .நேதாஜி ரோடு, மஞ்சகுப்பம், கடலூர்

துணை அமைப்பாளர்கள் - டி.ஆர்.டி.முகுந்தன், எம்.பி.பி.எஸ்., டிஎன்பிமாரியம்மன் கோவில் தெரு, திருப்பாப்புலியூர், கடலூர் ச. சரவணா சுப்பு, டிப்ளமோ இன் ரேடியாலஜி நெ5,கே எம் ஆர் காம்ப்ளக்ஸ் தண்டபாணி நகர், செம்மண்டலம், கடலூர் ஜெ.விஜி, பி.பார்ம் நெ 12, காந்தி சிலை தெரு நத்தம் பட்டு, கடலூர் ஜெ. அறிவுக்கரசன், பி.பார்ம் நெ127,மாரியம்மன் கோவில் தெரு மலையப்ப பெருமாள் அகரம் மணல்மேடு, கடலூர். கோ. இளங்குமார், டி.எச்எம்.எஸ், டி.ஏ.சி.யூ எஸ்.எம்.பி நெ 13,ஏ ரயில்வேலேன், தங்கராஜ் நகர் திருப்பாப்புலியூர், கடலூர்.

### குறிஞ்சிப்பாடி தொகுதி

அமைப்பாளர் - **சி. சிவசெந்தில், பி.டி.எஸ்.,** எம்.டி.எஸ்., நெ 24, கிழக்குத் தெரு, எம் புதூர்,கடலூர்

துணை அமைப்பாளர்கள் - ச. தினேஷ்,எம்.பி.பி.எஸ் நெ17 ,வடக்கு தெரு தீர்த்தகிரி அஞ்சல், குறிஞ்சிப்பாடி, கடலூர் ரா. ராகுல், எம்.பி.பி.எஸ் நெ 105/2, வெங்கடா மால்புரம் குள்ளஞ்சாவடி அஞ்சல் குறிஞ்சிப்பாடி, கடலூர். ரா. பாலமுருகன், பிபீடி., நெ 29/48,புது விநாயகர் கோவில் தெரு, குறிஞ்சிப்பாடி,கடலூர். ஜோ. சுரேந்தர், எம்.எஸ்.சி மைக்ரோ பயாலஜி நெ824,டி வள்ளலார் நகர் பெத்தநாயக்கன் குப்பம் குறிஞ்சிப்பாடி. ர. சக்கரவர்த்தி, எம்.எஸ்.சி பி.எஸ்சி நெ 13,விவேகானந்தர் நகர் பண்ருட்டி ரோடு, வடலூர். ரா.குணசேகரன், எம்.எஸ்.சி., பி.இ.டி நெ 3,கிழக்குத் தெரு, தொட்டி தோப்பு தொண்டைமாநத்தம், குறிஞ்சிப்பாடி,கடலூர்

### புவனகிரி தொகுதி

அமைப்பாளர் - **ரா.வசந்த், எம்.பி.பி.எஸ்** நெ623,தர்மலிங்கம் நகர் சேத்தியாத்தோப்பு அஞ்சல் புவனகிரி வட்டம், கடலூர்

துணை அமைப்பாளர்கள் - த.பிரபாகரன், எம்,பி,பி.எஸ்., ஏஎப்ஐஎச்., நெ 44/ 47, கோட்டைமேட்டு தெரு, மேல் புவனகிரி,கடலூர் த.சித்ரா, எம்,பி,பி.எஸ்., பாலாஜி நகர், நெய்வேலி, கங்கைகொண்டான், விருத்தாச்சலம், கடலூர். ஜெ.அபிநயா, எம்,பி,பி.எஸ்., நத்தமேடு அஞ்சல் புவனகிரி வட்டம், கடலூர். சே. மங்கனேஸ்வரன், பி.பி.டி, எப்.சி.பி நெ9,எப் முகமதியர் தெரு புவனகிரி, கடலூர். அருள்பிரகாஷ், பி.பி.டி.டி யோகா நெ4, மேற்கு தெரு, வீ. சத்தமங்கலம் அஞ்சல் விருதாச்சலம், கடலூர். அ.ஜெலின் மேகனா, பி.எஸ்எம்எஸ். நெ 22/07,கரம்புத் தெரு , இடையன்பால் சொரி, மதுராந்தக நல்லூர், கடலூர்.

### சிதம்பரம் தொகுதி

அமைப்பாளர் - **ரெ.கிருஷ்ணராஜ், பி.டி.எஸ் எம்.டி.எஸ்** நெ3/153, என்ஆர் இல்லம், பாரதிதாசன் சாலை, 7வது கிராஸ் கனகசபை நகர், சிதம்பரம், கடலூர்

துணை அமைப்பாளர்கள் - வ.வேல் குமார், எம்.பி.டி ஆர்த்தோ நெ292,முருகன் கோவில் தெரு, கோலம் பூண்டி, சிதம்பரம், கடலூர். எஸ்.ஆர்.ராஜ்குமார், பி.எஸ்எம்எஸ். நெ 26,3வது குறுக்கு கிழக்கு தெரு கே .ஆர். எம். நகர், அண்ணாமலை நகர் சிதம்பரம், கடலூர். இ.இளம்வழுதி, பி.பி.டி.எம் எஸ்.சி யோகா நெ 21,தில்லை விடயங்கள் நகர் சிதம்பரம், கடலூர். கே.பத்மநாபன், எம்எஸ்சி., எம்பில் பிஎச்டி நெ164,நடுமெயின்ரோடு, சின்ன குப்பம்,கொத்தமடை புவனகிரி, கடலூர் சு.ராஜகாந்தன், பி.எஸ்சி., டி.எம்.எல்.டி நெ 88/6,கிழக்குத் தெரு, மஞ்சக்குடி அஞ்சல்,புவனகிரி, சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

### காட்டுமன்னார்கோவில் தொகுதி

அமைப்பாளர் - **கோ.கார்த்திகேயன், எம்,பி,பி.எஸ்.,** சிவன் கோவில் தெரு,மேல நெடும்பூ, காட்டுமன்னார் கோவில், கடலூர்

துணை அமைப்பாளர்கள் - ந.ராஜலிங்கம், எம்,பி,பி.எஸ்., நெ 44, கானா கார தெரு காட்டுமன்னார்கோவில், கடலூர். சே. அக்ஷயா, பி.டி.எஸ் நெ 73, மாரியம்மன் கோவில் தெரு, அத்திப்பட்டு அஞ்சல் காட்டுமன்னார்கோவில் கடலூர். மா கார்த்திகேயன், பி.பார்ம் நெ 19,கோவிந்தசாமி நகர், அண்ணா நகர் காட்டுமன்னார்கோவில், கடலூர். சந்தானகிருஷ்ணன், பி.பார்ம் கருப்பூர், காட்டு மன்னார்கோவில் கடலூர். ரா. மணிகண்டன், எம்.எஸ்சி.,டி.எம்.எல்.டி டி.மடப்புரம், நாடார் மங்கலம், காட்டுமன்னார் கோவில் ,கடலூர் ரா.சதீஷ்குமார், எம்.எஸ்சி., பிஎச்.டி ., குப்பு பிள்ளை சாவடி, காட்டுமன்னார்கோவில் ,கடலூர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
### திருப்போரூர் தொகுதி

அமைப்பாளர் - **பி. அதித்தியன், பி.டி.எஸ்** நெ 12, பெரியார் நகர், கீரப்பாக்கம்.

### ஆலந்தூர் தொகுதி

அமைப்பாளர் - **கே. ஷர்மிளா, எம்.எஸ்.ஓ.ஜி**, நெ 12, வோல்டாஸ் காலனி, ஃபர்ஸ்ட் தெரு , சென்னை.

துணை அமைப்பாளர்கள் - வி. மதனகோபால், பி.எஸ்சி., எம்.எல்.டி நெ 21, மெயின் ரோடு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை. நா. குமார், டிப்ளமோ லேப் டெக்னீசியன் நெ 580, கிரவுண்ட் ப்ளோர், எம் கே என் ரோடு, ஆலந்தூர், சென்னை.

### பல்லாவரம் தொகுதி

அமைப்பாளர் - **என். கண்ணன், எம்பிபிஎஸ் எம்டி** நெ 17, 1 மெயின் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை.

துணை அமைப்பாளர்கள் - சையத் யாமின், பி.எஸ்சி., பிஜி நெ 9, வள்ளலார் தெரு, துர்கா நகர், சானிடோரியம், தாம்பரம், சென்னை. க. கோபிநாதன், எம்.எஸ்.சி பி.ஜி.டி.எச்எம் நெ எப்3, ஸ்ரீ சாய் பிளாட்ஸ், ஸ்ரீ சாய் அவென்யூ, நெமிலிச்சேரி மெயின் ரோடு, நெமிலிச்சேரி , குரோம்பேட்டை.

### தாம்பரம் தொகுதி

அமைப்பாளர் - **எம்.எஸ்.லலித் ராஜா தீபன், எம்பிபிஎஸ் எம்டி** நெ 924, இன் விகான் அபார்ட்மெண்ட்ஸ், முடிச்சூர் ரோடு, கிருஷ்ணா நகர், மேற்கு தாம்பரம்.

துணை அமைப்பாளர்கள் - எம்.பி. பார்த்திபன், எம்.பி.டி நெ 4எப், லட்சுமி என் க்ளேவ், காமாட்சி காலனி, முதல்தெரு, தாம்பரம், சானிடோரியம் ஆர்.சரவண பெருமாள், எம் டி நெ 4, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நகர், ராஜகீழ்ப்பாக்கம். ஆர். ராமகிருஷ்ணன், நர்சிங் நெ 9, ஜெருசலம் நகர், திருநீர்மலை ரோடு, கடப்பேரி, மேற்கு தாம்பரம். ஜெயந்தி ராமன், பி.எஸ்சி நர்சிங் நெ 37, பகத்சிங் தெரு, கஸ்தூரிபாய் நகர் , மேற்கு தாம்பரம்.

### செங்கல்பட்டு தொகுதி

அமைப்பாளர் - **எஸ். சுஹாஷினி கர்ணன், எம்பிபிஎஸ் டி. என்.பிஓ.ஜி** நெ 3வது தெரு, ஐயப்பா நகர் பம்மல்.

துணை அமைப்பாளர்கள் - மகாலட்சுமி குலசேகர், ஏ.எச்.எஸ் நெ 1, பெருமாள் கோவில் தெரு, கிளாம்பாக்கம், ஊரப்பாக்கம். பா. சரண்ராஜ், பி.எஸ்.எம். எஸ் செங்கல்பட்டு காஞ்சிபுரம் மெயின் ரோடு பாலூர் கிராமம்,எச்.பி.பெட்ரோல் பங்க் எதிரில்.

### மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் - வி.முத்து, எம்.பி.பி.எஸ்., ஆர்த்தோ முத்துராம் எலும்புமுறிவு சிகிச்சை மருத்துவமனை மகாதானத் தெரு, மயிலாடுதுறை

துணை தலைவர்கள் - எஸ்.ரெத்தின அருண்குமார், எம்.பி.பி.எஸ்., அருண்பிரியா மருத்துவமனை பட்ட மங்கல தெரு, மயிலாடுதுறை த.பூபேஷ் தர்மேந்திரா, எம்.பி.பி.எஸ்.,டிஓ குன்னம் கீழத்தெரு ,சீர்காழி, மயிலாடுதுறை. சதீஷ்குமார் (எ) சத்யா, பி.ஏ.எம்.எஸ்., எம்.டி, ஏ.எம்,பி.எச்டி நெ 172/1, வெங்கடேஸ்வரா நகர் மயிலாடுதுறை.

அமைப்பாளர் - **எஸ்.பாலாஜி, எம்.டி, (பிஏ ஈடி)** நெ 31,கஸ்தூரிபாய் தெரு, கூறைநாடு மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - ஷே.முகமத் அலாவுதீன், எம்.பி.பி.எஸ்., எம்எஸ்., எப்ஐஏஜிஇஎஸ் நெ 137/11,யாசர் அரபாத் தெரு, தரங்கம்பாடி தாலுகா, மயிலாடுதுறை நா. அரவிந்த் ராஜ், எம்.பி.பி.எஸ்., நெ 222,சிவன் கோவில் தெரு காவிநல்லூர் நல்ல விநாயகபுரம் சீர்காழி, மயிலாடுதுறை. அருண்பிரசாத், எம்.பி.பி.எஸ்., எம்டி நெ106,பாரதியார் தெரு, சீனிவாசபுரம், மயிலாடுதுறை. கோ.சி.மதி .திருமாவளவன், எம்.பி.பி.எஸ்., கோசி மதியழகன் நகர், மேக்கரிமங்கலம், குத்தாலம், மயிலாடுதுறை.

### சீர்காழி தொகுதி

அமைப்பாளர் - **வி.ஆர்.ஏ. அறிவழகன்,** எம்.பி.பி.எஸ், டிஆர்த்தோ தேர் தெற்கு தெரு, ஆபத்து காத்த விநாயகர் கோவில் எதிர்புறம் சீர்காழி, மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - கே. மருதவாணன், எம்.பி.பி.எஸ் டி.சி.எச் நெ8,வி.என்.பி நகர், தென்பாதி, சீர்காழி, மயிலாடுதுறை சிரஞ்சீவி, எம்.பி.பி.எஸ் நெ 6/39, ஸ்ரீராம் கிளினிக், ஞானசம்பந்தம் தெரு சீர்காழி. தி.கனிமொழி, எம்.பி.டி. எம்.எஸ்சி. பிஜி நெ 114,இரணியன் நகர், சீர்காழி. துரை.வாசு, பி.எஸ்சி., டி.பார்ம்., நெ 3/172,பொதுத் தெரு, பெருந்தோட்டம், சீர்காழி, மயிலாடுதுறை. ப.லட்சுமணன், பி.பார்ம் நித்திய வனம், பொழிச்சங்காடு சீர்காழி, மயிலாடுதுறை.

### பூம்புகார் தொகுதி

அமைப்பாளர் - **ஆர் அபிஷேக், எம்.பி.பி**.எஸ்., நெ 3/27,நாட்டு தெரு, தில்லையாடி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.வி.அஜய் பிரகாஷ், எம்.பி.பி.எஸ்., எம்.டி(பி.ஏ.இ.டி) நெ 2/68,நல்லாடை மெயின் ரோடு செம்பனார்கோவில், தரங்கம்பாடி, மயிலாடுதுறை. என்.அருள் மாறன், எம்.பி.பி.எஸ்., ஐ.ஓ.பி.மெயின் ரோடு, திருவாலங்காடு கு. மதன்குமார், எம்.பி.பி.எஸ்., நெ 65,கே.கே.தெரு, குரங்கு புத்தூர்,தளச்சங்காடு, தரங்கம்பாடி, மயிலாடுதுறை. ராஜி, பி.பார்ம் மீனவர் தெரு புதுக்குப்பம் காவேரிப்பட்டினம் சீர்காழி, மயிலாடுதுறை. முகமது அசாருதீன், பி.பாரம் நெ 4/1,சின்னசாமி நாயக்கர் தெரு பொறையார், தரங்கம்பாடி, மயிலாடுதுறை. எம். பன்னீர்செல்வம், எம்.எல்.டி சித்த வாரம் முதலியார் தெரு பொன்செய், செப்பனார் கோவில் மயிலாடுதுறை. கவிதா ரமேஷ், பிபீடி நெ 2,17 ஏ,குலத்தாங்கரை தெரு கிளியனூர், எழுமகளூர் ஊராட்சி, குத்தாலம்.

### மயிலாடுதுறை தொகுதி

அமைப்பாளர் - **அருண் பிரசாத், எம்.பி.பி.எஸ்.,** எம்.டி நெ 106,பாரதியார் தெரு, சீனிவாசபுரம், மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - கோகுலகிருஷ்ணன், பி.டி.எஸ் சுபம் பல் மருத்துவமனை பட்டமங்கலம்தெரு, மயிலாடுதுறை. த. ஜேம்ஸ்தேவதாஸ், பி.பார்ம் நெ 40/7,ஏ,தங்கசாமி நகர், காக்கும் பிள்ளையார் கோவில் தெரு கூறைநாடு, மயிலாடுதுறை எம் பாலமுருகன், சி.ஆர்.ஏ ஸ்ரீராகவேந்திரா நகர் மயிலாடுதுறை. மோகன்ராஜ், டி.எம்.சி.டி., எம்.பி.ஏ அஸ்வினி லேப், அரையாபுரம், குற்றாலம் தாலுகா, மயிலாடுதுறை. செந்தில், டி.பாரம் நெ2,வடக்கு மாட விளாகம் மயூரநாதன் வீதி, மயிலாடுதுறை.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 21-08-2023

**டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

## தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

**ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### சென்னை கிழக்கு மாவட்டம்

தலைவர் - க.ஜெயபால் 23/2, ஞானம்பாள் கார்டன், முதல் தெரு, அயனாவரம், சென்னை - 23.

துணைத் தலைவர் - கோ.கருணாகரன் 95, எஸ்.எஸ். புரம், ஏபிளாக், 7வது தெரு, ஓட்டேரி, சென்னை - 12.

அமைப்பாளர் - **எல்.பி.எப்.மோகன்** 146, பெரியார் தெரு, டி,எம்.பி நகர், பாடி, சென்னை - 600050

துணை அமைப்பாளர்கள் - ஜெ.ஆனந்த் 7, 16வது குறுக்கு தெரு, அஞ்சுகம் நகர், கொளத்தூர், சென்னை - 99. ஆர்.தேவராஜ் 21/55, 27வது தெரு, புனித சகாய மாதா தெரு, ஜி.கே.எம் காலனி, சென்னை - 600082. கே.ரமேஷ் 24/ஏ, 557, அம்மன் கோவில் தெரு, ஜி.கே.எம் காலனி, அயனாவரம், சென்னை - 600082. க.லட்சுமணன் 40/20, கே.சி தோட்டம், 6வது தெரு, பெரவள்ளூர், சென்னை. பி.பாஸ்கர் 50, மதுரை தெரு, அயனாவரம், சென்னை - 600023. ஆர்.பாலமுருகன் 2/27, கம்பர் தெரு, டாக்டர் அம்பேத்கர் நகர், பாடி குப்பம் சாலை, சென்னை - 600040. எஸ்.சுகுமார் 39/1, வேணுகோபால் சுவாமி கோவில் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. எஸ்.உதயஆதவன் 18, நாராயண சாரங் தோட்டத் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், துறைமுகம், சென்னை - 600001. ஆ.அந்தோணி லூக்காஸ் 5, சிபிளாக், பி.ஆர்.என். கார்டன், பிராட்வே, சென்னை - 600108. எ.ஜெயசங்கர் 7, சைவமுத்தையா 3வது சந்து, அப்பாராவ் தோட்டம், முத்தையாள் பேட்டை, சென்னை - 600001. பி.வர்ணவேலு (எ) கர்ணா 21, பிரதான தெரு, கல்யாணபுரம், யானை கவுனி, சென்னை - 600001. அ.நாதன் (எ) ஆசை ஆரோக்கியம் 18/25, பாண்டுரெங்கபுரம், பாடி, சென்னை - 600050. டி.மகேஷ்குமார் 53, பஜனை கோவில் தெரு, பாடி, சென்னை - 600050. டி.ஸ்ரீதரன் 6/38, முதல் தெரு, கலெக்டர் நகர், சென்னை - 600101. எஸ்.ஜெயபாலன் 23, பெரியார் தெரு, காமராஜபுரம், அம்பத்தூர், சென்னை - 600053. ஆர்.ஜெயபிரகாஷ் 3, எம்.ஜி.ஆர் தெரு, தந்தை பெரியார் நகர், கொரட்டூர், சென்னை - 600080. என். விஜயகுமார் 209/பி, கிழக்கு எரிக்கரை, பாரதியார் நகர், 2வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600049. ஜி.கே.வெங்கட் (எ) வெங்கடேசன் 38, தாந்தோணி அம்மன் கோவில் தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600049. கே.பி.சரவணன் 19/25, அப்பாதுரை மெயின் தெரு, அயன்புரம், சென்னை - 600023. இரா.தனசேகர் 95, சிவசண்முகபுரம், ஏபிளாக், 7வது தெரு, ஓட்டேரி, சென்னை - 600012. ஏ.சாக்ரடீஸ் 8/27, பிரைட்டன்ஸ் சாலை, கன்னிகாபுரம், சென்னை - 600012. இ.விநாயகம் (எ) ஆர்.இ. ரமேஷ்குமார் 24/1, கிருஷ்ணதாஸ் சாலை, 2வது தெரு, மங்களபுரம், சென்னை - 600012. வி. செந்தில்குமார் 58, பழைய வாழைமா நகர் ஓட்டேரி, சென்னை - 600012. இ.என்.கே. வீரமணி 26, 1வது தெரு, ஏகாங்கிபுரம் அயனாவரம், சென்னை - 600023. புல்லட் என். பாஸ்கர், 231, எஸ்.எஸ். புரம் பிரிக்கிளின் ரோடு, புரசைவாக்கம், சென்னை - 600007. ஆர். குமரவேல், 13/7, சிவராஜபுரம் 2வது தெரு, புளியந்தோப்பு, சென்னை - 600012. புரசை வி. ரவி 38/2, பொன்னன் தெரு, புரசைவாக்கம், சென்னை - 600007. த. பிரிதிவிராஜ், 58, பி - பிளாக், எம்.எஸ். நகர், சேத்துப்பட்டு, சென்னை - 600031,

### சென்னை வடக்கு மாவட்டம்

தலைவர் - எம்.ஆனந்தன் 4, செல்வ பெருமாள் கோவில் தெரு, சின்னான்டிமடம், சென்னை - 600118.

துணைத் தலைவர் - டி.கணேசன் 22/134, தேசிய நகர், 1வது தெரு, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை - 600039.

அமைப்பாளர் - **வெ.இன்பரசன்** 18, செல்வ விநாயகர் கோவில் தெரு, மகிஜின்புரம், வியசார்பாடி, சென்னை - 600039.

துணை அமைப்பாளர்கள் - ஜே.பாபு 84, 1வது குறுக்கு தெரு, சாஸ்திரி நகர், வியசார்பாடி, சென்னை - 600081. ஜி.எஸ்.முருகன் 14, ராமதாஸ் நகர், பழையவண்ணாரப்பேட்டை, சென்னை - 600021. கே.முனுசாமி 37, காத்பாடா, 4வது தரு, பழையவண்ணாரப்பேட்டை, சென்னை - 600021 சி.சிவபிரகாசம் 47, ஓ.எஸ்.எச் சாலை, பழைய ஆடுதொட்டி, இராயபுரம், சென்னை - 600013. சி.சிவகுமார் 1, தண்டையார்நகர், 2வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை - 600081. கே.யுவராஜ் 63/108, பரமேஸ்வரி நகர், தண்டையார்பேட்டை, சென்னை - 600081.

### சென்னை மேற்கு மாவட்டம்

தலைவர் - ஜெ.இருதயநாதன் 64/273, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.

துணைத் தலைவர் - எம்.எ.ஜெஸ்டின் ராஜ் 25, ஆரோக்கியசாமி தெரு, வரதராஜபேட்டை, கோடம்பாக்கம், சென்னை - 600024.

அமைப்பாளர் - **இ.இளம்பாரதி** 107, வி.ஆர் தெரு, முனுசாமி நகர், திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

துணை அமைப்பாளர்கள் - அல்லூரி பா.சீனிவாசன் 26பி, சுதந்திரா நகர், 2வது தெரு, இலாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. பழக்கடை எம்.ஆறுமுகம் 29/49, கிரீம்ஸ் சாலை, அழகிரி நகர், ஆயிரம்விளக்கு, சென்னை - 600006. ஆ.அய்யப்பன் 74, முத்துசோலை தெரு, டெய்லர்ஸ் சாலை, கீழ்பாக்கம், சென்னை - 600010. கி.வாசுதேவன் 11, ஜே.டி துரைராஜ் நகர், 4வது தெரு, அமைந்தகரை, சென்னை - 600029. சி.சாது 168, மோகன்தாஸ் சாலை, பார்டர் தோட்டம், சென்னை - 600002. மு.பாண்டியன் 23, ஐ பிளாக், எஸ்.எஸ். புரம், எம்.கே. ராதா நகர், தேனாம்பேட்டை, சென்னை - 600006. தா.ஜெயகுமார் 21/4, கிரியப்பா சாலை, தி.நகர், சென்னை - 600017. சி.சாய்குமார் 6/2, படவட்டம்மன் கோயில் வடக்கு தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600002. அ.ஜானகிராமன் 508, ரூர்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006.

### சென்னை தெற்கு மாவட்டம்

தலைவர் - எஸ்.பொன்னுவேல் 3/2, பூம்புகார் தெரு, வெட்டுவாங்கேணி, சென்னை - 600115.

துணைத் தலைவர் - எ.கௌதமன் 52, தாமஸ்நகர், சின்னமலை, சைதாபேட்டை, சென்னை - 600015.

அமைப்பாளர் - **சி.சுரேஷ்** 34/70, ராமசாமி தோட்டம், அருணாசலபுரம், அடையாறு, சென்னை - 600020.

துணை அமைப்பாளர்கள் - கே.தாஸ் 120, கருமாரியம்மன் கோயில் தெரு, திடீர் நகர், சைதாப்பேட்டை, சென்னை - 600015. க.வேல்முருகன் 76, நெருப்புமேடு, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015. பொன்.பாஸ்கர் 1, ஈ.வெ.ரா பெரியார் தெரு, குலசேகரபுரம் கோயம்பேடு, சென்னை - 600107. க.உமாபதி 13, 2வது குறுக்கு தெரு, 5வது தெரு, விஜயராகவபுரம், சென்னை - 600093. எம்.எஸ்.பிரபு 143, வேணுகோபால் தெரு, முகப்பேர், சென்னை - 600033. ஆர்.டி.பாஸ்கர் 22/27, திருவீதியம்மன் கோயில் 3வது தெரு, போரூர், சென்னை - 600116. ப.இளங்கோவன் 1/1, 13வது சந்து, இந்திரா நகர், அடையாறு, சென்னை - 600020. ஏ. பாஸ்கர் 12, காமராஜர் தெரு, தரமணி, சென்னை - 600113. டி. அசோக், 2/27, 4வது மயிலை பாலாஜி நகர் மடிப்பாக்கம், சென்னை - 600091. சி. பிரேம்குமார், 2/81, நியூ காலனி, கருமாரியம்மன் கோயில், கொட்டிவாக்கம், சென்னை - 600115. எம்.எஸ். மதியழகன் 32, கண்ணபிரான் கோயில் தெரு, பள்ளிக்கரணை, சென்னை - 600100. ஆர். பிரபாகரன், 1/422, அம்பத்தூர் சாலை, அடையாளம்பட்டு, கணபதிபுரம், சென்னை - 600077. எஸ்.இ. சுகுமாரன் 4/62, ஆர்.எம்.வீ. தெரு, பெரும்பாக்கம், சென்னை - 600100. பி. செல்வம் 79, செட்டித்தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015. மு. காந்தி 1/171ஏ, சுண்ணாம்பு கால்வாய் மயான சாலை, கொட்டிவாக்கம், சென்னை - 600041. க.பத்மராஜன் 7/13, திருவள்ளுவர் தெரு, காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை - 600042.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

தலைவர் - பி.முருகேசன் 3/79 ஏ, வாட்டர் டேங்க் சாலை, பட்டவர்த்தி, நாஞ்சான்குளம், சங்கர் நகர், திருநெல்வேலி.

துணைத் தலைவர் - பி.மதுரைவீரன் 24, பெரியார் நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

அமைப்பாளர் - **பி.நவநீதன்** 3/38, அம்மன் கோவில் தெரு, குன்னத்தூர், மேல்பாளையம், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - எம்.சோழராஜன் 4/75, முப்புடாதியம்மன் கோவில் தெரு, நரசிங்கநல்லூர், பேட்டை, திருநெல்வேலி. எம்.பொன்னுசாமி 2/12, காலனி தெரு, பட்டன் கல்லூர், கிராமங்கலம், திருநெல்வேலி. எம்.காளியப்பன் 1/76, நடுத்தெரு, வல்லவன் கோட்டை. திருநெல்வேலி. ஏ.குழந்தைசாமி 3/271, காலனி தெரு, நாஞ்சான்குளம், திருநெல்வேலி. எஸ்.ராமமூர்த்தி 321, 12வது குறுக்கு தெரு, கோடீஸ்வரன் நகர், பேட்டை, திருநெல்வேலி.

### தூத்துக்குடி மாநகரம்

தலைவர் - ம.முருகேசன் 9/838, காமராஜர் நகர் மேற்கு, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி.

துணைத் தலைவர் - தே.பச்சிராஜ் 546, சி4, ராஜீவ் நகர், 6வது தெரு, தூத்துக்குடி.

அமைப்பாளர் - **மு.பரமசிவன்** 40, பி1ஏ, போல்டன்புரம், 1 வது தெரு, தூத்துக்குடி - 3.

துணை அமைப்பாளர்கள் - ம.ரவி செல்வன் 164/2, சுந்தர்வேல்புரம் மேற்கு, தூத்துக்குடி. ஐ.இராமச்சந்திரன் டைப் 1, 12/8, கேம்ப் II, அனல்மின் நகர், தூத்துக்குடி - 4. ஆ.கருப்பசாமி 237, சுந்தரவேல்புரம் மேற்கு, அம்பேத்கர் நகர், 3வது தெரு, தூத்துக்குடி - 2. ஐ.ரெங்கராஜ் 2/77ஏ, கோவில்பிள்ளை விளை, ஆரோக்கியபுரம் (அ), தூத்துக்குடி. காளிதாஸ் 81, காந்தி நகர், ஜார்ஜ் சாலை, தூத்துக்குடி.

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - ஏ.சுந்தரம் அக்னஸ்மேரி தெரு, திண்டுக்கல்.

துணைத் தலைவர் - கு.காளிமுத்து 21, சவேரியார் பாளையம், 2வது தெரு, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் 2.

அமைப்பாளர் - **அ.ராஜா** அக்னஸ்மேரி தெரு, திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - மா.ரவிக்குமார் 12ஏ, சிதம்பரனார் தெரு, சோலைவிலாஸ் சாலை, திண்டுக்கல். பி.சேசு அமுல்ராஜ் 3/1, ராமசாமி காலனி, நாகல் நகர், திண்டுக்கல். ரா.பெருமாள் 41, பி.விதாஸ் காலனி, திண்டுக்கல். கா.சீத்தா 29பி, சென் சேவியர் தெரு, நாகல் நகர் அஞ்சல், திண்டுக்கல். எஸ்.அழகர்சாமி 15, காந்திஜி புது சாலை, அரண்மனைக்குளம், திண்டுக்கல்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

தலைவர் - த.கண்ணன் சேதுராயனேந்தல், அரசர்குளம் அஞ்சல், அறந்தாங்கி தாலுக்கா, புதுக்கோட்டை.

துணைத் தலைவர் - சி.சிவா மேலநெம்மக்கோட்டை, ஆதிதிராவிடர் குடியிருப்பு, புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை.

அமைப்பாளர் - **மா.நடேசன்** 1, பெரியார் நகர், கீரமங்கலம் வடக்கு அஞ்சல், ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - எம்.சி.மணி 572, படுதினிப்பட்டி, சடையம்பட்டி அஞ்சல், பொன்னமராவதி தாலுக்கா, புதுக்கோட்டை. எஸ்.சோமையா கோட்டூர், திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை. சுப. சின்னையா நாகுடி அஞ்சல், அறந்தாகி தாலுக்கா, புதுக்கோட்டை. எஸ்.அன்பழகன் ஏ டி காலனி பாச்சிக்கோட்டை, ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை. வே.சுரேஷ் கண்ணன் மாஞ்சான் விடுதி ஆதிதிராவிடர் காலனி, மாஞ்சான் விடுதி அஞ்சல், ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை. வீ. பெத்தையா ஆற்றங்கரைப்பட்டு மிரட்டுநிலை அஞ்சல், திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை. சி. செல்வக்குமார் அத்தாணி அஞ்சல், அறந்தாங்கி தாலுக்கா, புதுக்கோட்டை. ஆறு. பாலகிருஷ்ணன் 561/6, பாடல் கோவில் தெரு, கோனாபட்டு, புதுக்கோட்டை. எஸ். மாரிமுத்து மூங்கித்தாம்பட்டி குளத்துப்பட்டி தாலுக்கா, புதுக்கோட்டை.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

தலைவர் - கி.கிருஷ்ணமூர்த்தி 124, மேட்டுத்தெரு, கீழ்சித்தாமூர் கிராமம், தென்கோடிப்பாக்கம் அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - மு.சிங்கம் சேகர் சக்கராபுரம், புதிய காலனி, செஞ்சி, விழுப்புரம் மாவட்டம் 604202.

அமைப்பாளர் - **சி.திருமலை** 105, பள்ளத்தெரு, அன்னம்புத்தூர் கிராமம் & அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - வ.அர்ச்சுணன் மாரியம்மன் கோவில் தெரு, மரக்காணம் அஞ்சல் & வட்டம், விழுப்புரம் மாவட்டம். ர.இராஜேந்திரன் மாரியம்மன் கோவில் தெரு, நெடுந்தோண்டி (கி), திண்டிவனம் வட்டம், வெள்ளிமேடுபேட்டை (அ), விழுப்புரம் க.பழனி 181, புதுத்தெரு, கள்ளப்புலியூர் கிராமம் & அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். க.சிவமாயன் கூனம்பேட்டை தெரு, வீடூர் கிராமம் & அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். ரா.முனியாண்டி 116, மாரியம்மன் கோவில் தெரு, மொடையூர் கிராமம் & அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். ந. சரவணன் 33, நடுத் தெரு, நொளம்பூர் கிராமம் மற்றும் அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். அ. பெருமாள் மாரியம்மன் கோவில் தெரு, நரசிங்கராயன்பேட்டை, செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். ஏ. பிரகாஷ் 3146, மீனவர் சாலை, ஆட்சிக்காடு கிராமம் மண்டவாய் அஞ்சல், மரக்காணம் வட்டம், விழுப்புரம். ஆர். கோபால், 89, டி.வி. நகர், ஜி.எஸ்.பி. ரோடு, திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

### திருச்சி கிழக்கு மாநகரம்

தலைவர் - சீ.தேசிங்கு ராஜன் 35/12, ரயில்வே காலனி, பொன்மலை, திருச்சி - 04.

துணைத் தலைவர் - அ.பாஸ்கர் 95, அன்னை நகர், 6வது தெரு, பாலக்கரை திருச்சி - 01.

அமைப்பாளர் - **ஜெ.அன்பழகன்** 3/211, வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, காட்டூர், திருச்சி - 19.

துணை அமைப்பாளர்கள் - ச.செல்வம் 59, தோப்பு தெரு, தெற்கு தாராநல்லூர், திருச்சி - 08. ம.ஹரி 36 பி, டாக்டர் அம்பேத்கர் நகர், கல்லணை சாலை, திருச்சி 13. ரா.ஜவஹர்லால் 4/410, 3வது தெரு, பாத்திமாபுரம் வடக்கு, காட்டூர், திருச்சி - 620019. டி.பிரகதீஷ் 24/ பி, கீழ தேவதானம், தெப்பக்குளம் அஞ்சல், திருச்சி - 620002. மா. மணிவேல் 43/62, கணேசபுரம், பொன்மலை, திருச்சி - 620004.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

தலைவர் - ஜெ.சங்கர் இந்திரா நகர், திருவள்ளூர்.

துணைத் தலைவர் - கே.ஏழுமலை 95, அன்னை நகர், 6வது தெரு, பாலக்கரை , திருவள்ளூர்.

அமைப்பாளர் - **சிலம்பு பன்னீர் செல்வம்** தேவலாம்பாபுரம், ஆர்.கே. பேட்டை. திருவள்ளூர்.

துணை அமைப்பாளர்கள் - டி.செல்வகுமார் புங்கத்தூர், திருவள்ளூர் - 602001. ஏ.ஞானமூர்த்தி பெரியகளக்காட்டூர், திருவலங்காடு ஒன்றியம், திருவள்ளூர். என்.பாலகிருஷ்ணன் 15, பெரும்பாக்கம், திருவள்ளூர். எஸ்.கமலநாதன் கொளத்தூர் காலனி, பள்ளிபட்டு, திருவள்ளூர். எம்.சேகர் பால்வாடி தெரு, கசவநல்லாத்தூர், கடம்பத்தூர் ஒன்றியம், திருவள்ளூர். குணசேகரன் வீரகநல்லூர், திருத்தணி ஒன்றியம், திருவள்ளூர். ஜி.தட்சிணாமூர்த்தி சின்னம்மாபேட்டை, திருவலாங்காடு ஒன்றியம், திருவள்ளூர். பந்தல் குமரேசன் எம்.ஜி.ஆர் நகர், கடம்பத்தூர் ஒன்றியம், திருவள்ளூர். ம.அம்பேத்கர் அம்மையார்குப்பம், திருவள்ளூர். இரா. தனசேகரன் 112, மேட்டு தெரு, இராமஞ்சேரி அஞ்சல், திருவள்ளூர் - 631204.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - மீ.வி.கோதண்டன் 15, ராமமூர்த்தி தெரு, மீஞ்சூர் திருவள்ளூர் - 601203.

துணைத் தலைவர் - சி.நாகராஜன் 12, போந்தவாக்கம் கிராமம், பல்லவாடா அஞ்சல், கும்மிடிபூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்

அமைப்பாளர் - **கா.சம்பத்** 275, 2 வது தெரு, மேல்மாளிகைப்பட்டு கிராமம், ஏனம்பாக்கம் அஞ்சல், ஊதுக்கோட்டை வட்டம், திருவள்ளூர்.

துணை அமைப்பாளர்கள் - பா.முத்துசாமி 6, பல்லவாடா கிராமம் & அஞ்சல், கும்மிடிபூண்டி வட்டம், திருவள்ளூர் - 601202. ஜி.கோபி 135, பெருமாள் கோவில் தெரு, ஆதிதிராவிடர் காலனி, வயலூர் குப்பம், மீஞ்சூர், திருவள்ளூர் 601203. மா.அருள் 80, தண்டலச்சேரி கிராமம், புது கும்மிடிபூண்டி அஞ்சல் & வட்டம், திருவள்ளூர் 601201. மீ.வி.ராமகிருஷ்ணன் 49, அப்துல்கலாம் ஆசாத் தெரு, அரியன்வாயல், மீஞ்சூர், திருவள்ளூர். எஸ்.முருகானந்தம் 23, பாலம்மாள் தெரு, தாலுக்கா அலுவலக சாலை, பொன்னேரி வட்டம் - திருவள்ளூர் 601204. கோதண்டம் பெருமாள் கோவில் தெரு, முக்கரம்பாக்கம், கும்மிடிபூண்டி வட்டம், திருவள்ளூர். இ.பழனி அம்பேத்கர் தெரு, இடப்பாளையம், கும்மிடிபூண்டி வட்டம், திருவள்ளூர் - 601206. டி.கே.பழனி கோவில் தெரு, தாராட்சி பழைய காலனி, தாராட்சி, ஊத்துக்கோட்டை வட்டம்,திருவள்ளூர். எம்.முனிநாதன் 177, பள்ளக்காலனி, 87. அக்கரம்பாக்கம், ஊதுக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். ஜெ.மனோஜ்குமார் 4/562, நேமளூர் பெரிய காலனி, ரோஷநகரம் கிராமம், கும்மிடிபூண்டி வட்டம். திருவள்ளூர். டி. பிரபாகரன் 69, வாயலூர் கிராமம் மற்றும் அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர். எஸ்.ஏசு 17/30, தோணிரேவு, பழவேற்காடு, மீஞ்சூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம். நி.நெல்சன் மேலூர் கிராமம், மீஞ்சூர் வட்டம், திருவள்ளூர். உ.சந்துரு வழுதிகைமேடு, சோழவரம் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். ஜெ.எஸ்.கன்னிமுத்து பழவேற்காடு, மீஞ்சூர் வடக்கு, திருவள்ளூர் மாவட்டம். கோளூர். கே.கோபால் கோளூர், மீஞ்சூர் வடக்கு, திருவள்ளூர் மாவட்டம்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

தலைவர் - வி.தணிகாசலம் 16, பால்வாடி தெரு, பாரிவாக்கம், பூவிருந்தவல்லி, சென்னை 600056.

துணைத் தலைவர் - பா.ராமானுஜம் 264, பெருமாள் கோவில் தெரு, மேலக்கொண்டையார், திருவள்ளூர் - 601024.

அமைப்பாளர் - **ஏ.விமல் ஆனந்த்** 18, கருணாகரன் நகர், பால்மோகன்தாஸ் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை - 600056.

துணை அமைப்பாளர்கள் - பி.கே.இ.கபிலன் 116, பெருமாள் கோவில் தெரு, புல்லரம்பாக்கம், திருவள்ளூர். கே.கேசவன் 5/208, மாசிலாமணி தெரு, நசரத்பேட்டை, திருவள்ளூர் 600123. ப.அன்பு 3/47, காமராஜர் தெரு, புதிய காலனி, செவ்வாப்பேட்டை, திருவள்ளூர் - 602025. ஜி.ஆசை தம்பி 36/67, தெருவீதி அம்மன் கோவில் தெரு, திருவேற்காடு, நூம்பல், சென்னை - 600077. அ.ஞானசேகர் 12/26, கங்கை அம்மன் கோவில் தெரு, காந்தி நகர், பூவிருந்தவல்லி 600056. ம.ஜெரோத்கிங்ஸ்லி 9, பஜனை கோவில் தெரு, மேல்மாநகர், பூவிருந்தவல்லி, சென்னை - 600056. எல்.வெங்கடேசன் 5/91, பஜனை கோவில் தெரு, சென்னீர்க்குப்பம், சென்னை - 600056. சு. அழகிரி 13/17, கீழ்மாநகர், பூவிருந்தவல்லி, சென்னை - 600056.

### காஞ்சிபுரம் மாநகரம்

தலைவர் - பொன்.கருணாகரன் 56/8, டாக்டர் அம்பேத்கர் நகர் , காஞ்சிபுரம்.

துணைத் தலைவர் - கே.துரை மேட்டுத்தெரு, நத்தப்பேட்டை காலனி, சின்ன காஞ்சிபுரம்.

அமைப்பாளர் - **எஸ்.மோகன்** அம்பேத்கர் நகர், செவிலிமேடு, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.வெங்கடேசன் 1ஏ, தந்தை பெரியார் தெரு, காஞ்சிபுரம் சே.உமேஷ் 52, 3வது தெரு, காந்திநகர், ஓரிக்கை, காஞ்சிபுரம். எஸ்.சரவணன் 47/19, வெங்கடேசபாளையம், ஐதர்பேட்டரை தெரு, காஞ்சிபுரம். ஜெ.ஜெயராஜ் 17டி/2, செட்டிக்குளம், என்.ஜி.ஓ. நகர், காஞ்சிபுரம். ஏ.பி.ஏ. குட்டி (எ) பொன்னுசாமி 516, வந்தவாசி சாலை, காந்தி நகர், செவிலிமேடு, காஞ்சிபுரம்.

### திருப்பூர் வடக்கு மாநகரம்

அமைப்பாளர் - **மு.குமார்** அம்பேத்கர் நகர், கொங்கு பிரதான சாலை, திருப்பூர் 641607.

துணை அமைப்பாளர்கள் - மா.கார்த்திகேயன் எம்.எஸ் நகர், வடக்கு, 107, அம்பேத்கர் காலனி, திருப்பூர் 641607. சு.ரவிகுமார் அரிஜன காலனி, செட்டிபாளையம், அங்கேரிபாளையம், திருப்பூர் 641603. ர.கிட்டுசாமி 2/271, ஏ.டி காலனி, மன்னரை, திருப்பூர் 641607. மு.பிரகாஷ் 23/221, மாரியம்மன் கோவில் வீதி, காமராஜர் காலனி, அனுப்பர்பாளையம், திருப்பூர் 641652. கு.வடிவேலு குமாரசாமி நகர், பிச்சம்பாளையம்புதூர், திருப்பூர் - 641602.

### திருப்பூர் தெற்கு மாநகரம்

அமைப்பாளர் - ப.துரைசாமி 26, துளசிராவ் வீதி, ராமராஜ் நகர், திருப்பூர் 641604.

துணை அமைப்பாளர்கள் - ப.சிவராஜ் 26, துளசிராவ் 1வது வீதி, திருப்பூர் - 641604. நா.தங்கராஜ் 11, முத்தையன் நகர் மேற்கு, காட்டன் மார்கெட், திருப்பூர் - 641604. ரா.சக்தி 26, முத்தையன் நகர் மேற்கு, காட்டன் மார்கெட், திருப்பூர் - 641604. நா.துரைசாமி 290, அண்ணமார் காலனி, பெரிச்சிபாளையம் தெற்கு, திருப்பூர் - 641608. பெ.கணேசன் 52, கே.வீ.ஆர் நகர், 4வது வீதி, திருப்பூர் - 641604.

### மதுரை மாநகரம்

தலைவர் - எஸ்.காந்தி மோகன் இ7, எஸ்.எம்.பி. காலனி, அண்ணா நகர், மதுரை மாவட்டம்.

துணைத் தலைவர் - கே.கிளியன் 61, தெய்வக்கனி தெரு, அனுப்பானடி, மதுரை மாவட்டம் - 9.

அமைப்பாளர் - **இ.எல்.பாலா** 167, கோமாஸ்பாளையம், மேலப்பென்னாகரம், 2வது தெரு, மதுரை மாவட்டம் - 16.

துணை அமைப்பாளர்கள் - கே.என்.ஹரிஸ்குமார் 4, ஹவுசிங் போர்டு காலனி, மேலவாசல், மதுரை மாவட்டம். எம். பாலசுப்பிரமணி காந்தி நகர், அச்சம்பத்து, மதுரை மாவட்டம். பா.வினோத் 62, முத்துராமலிங்கபுரம், 2வது தெரு, கோ.புதூர், மதுரை மாவட்டம் 7. பி.அழகுமணி 12, பிள்ளையார் கோவில் தெரு, விராட்டிபத்து, மதுரை 16. பு.பாலகிருஷ்ணன் 23/36, செல்லூர் விலாசம், 1 வது தெரு, மதுரை 2. வி.பிச்சை 66, மலையம்மன் கோவில் தெரு, கொக்கஎப்பி, வீராட்டிபத்து, மதுரை - 16.

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

தலைவர் - மு.ராஜ்மோகன் குப்பாம்பட்டி, விருதுநகர் மாவட்டம் 626003.

துணைத் தலைவர் - க.கருப்பசாமி 267, அம்மச்சியார்புரம் காலனி, எஸ்.கொடிக்குளம், விருதுநகர் மாவட்டம் 626133.

அமைப்பாளர் - **வே.சோலையப்பன்** 47, வீராச்சாமி தெரு, அருப்புக்கோட்டை, விருதுநகர்- 626101.

துணை அமைப்பாளர்கள் - இரா.பாஸ்கர் 20, காதிபோர்டு காலனி, திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் - 626125. கு.தமிழரசு 41, கல்யாணிபுரம், விருதுநகர் மாவட்டம் - 626126. வை.துர்க்கையாண்டி 61, கருப்பசாமி கோவில் தெரு, சுந்தரபாண்டியம், விருதுநகர்- 626126. அ.ராசையா 2/55, காளியம்மன் கோவில் தெரு, நயினாபுரம், வடகரை, விருதுநகர் மாவட்டம் - 626136. சி.சேகர் 1/54, அம்பேத்கர் தெரு, வடக்கு தேவதானம், விருதுநகர் மாவட்டம் - 626145.

### கோவை மாநகரம்

தலைவர் - எ.ஜார்ஜ் 14/13, பொன்னுசாமி சாலை, வடக்கோவை, ஆர்.எஸ்.புரம், அஞ்சல், கோவை 02.

துணைத் தலைவர் - ம.சுவாமிநாதன் 11/62, எம்.ஜி.ஆர் வீதி, வடவள்ளி, கோவை - 41.

அமைப்பாளர் - **பி.சிவராஜ்** 214, காந்தி நகர், சிவானந்தா காலனி, கோவை - 12.

துணை அமைப்பாளர்கள் - மு.சந்திரசேகரன் 15, நியூ ஸ்கீம் சாலை, ஸ்ரீ ராமபுரம், பி.என் பாளையம், கோவை - 37. சு.கதிரேசன் 16, பட்டாதரசியம்மன் கோவில் வீதி 1, சிங்காநல்லூர், கோவை 05. ஆ.ராஜன் 115/100, காமராஜ் நகர் 2, சுங்கம் சிந்தாமணி பின்புறம், ராமநாதபுரம் கோவை 45. எஸ்.சரவணகுமார் 220/275, எஸ்.எச் சாலை, தெற்கு உக்கடம், கோவை 01. இரா.இரவிச்சந்திரன் 11, பட்சிராஜா ஸ்டுடியோ பின்புறம், கல்லுக்குழி, கோவை 45.

### மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் - கோ.முத்தமிழ்செல்வன் 2/215, அண்ணா நகர், பெருந்தோட்டம் அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை.

துணைதலைவர் - எஸ்.மணிமாறன், கோவில் தெரு, காத்திருப்பு அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை.

அமைப்பாளர் - **பெரு.வீரமணி** வடக்கு தெரு, மணக்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா (ம) மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - வை.அர்சுணன் மேலத்தெரு, பூதங்குடி டி.எம். கோவில் அஞ்சல், மயிலாடுதுறை. வி.பி.சங்கர் வளத்தாள் பட்டினம், பிரதான சாலை, கிடாரங்கொண்டான், மயிலாதுறை. கே.ராஜா மிஷன் தெரு, வெளிப்பாளையம், தரங்கம்பாடி, மயிலாதுறை. எல்.சி.மதிவாணன், அறிவளூர், ஏலந்தாங்குடி அஞ்சல், குத்தாலம் தாலுக்கா, மயிலாதுறை. என்.ஹிட்லர், மேலபரசலூர் அஞ்சல், தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாதுறை. ஆர்,மகேந்திரன், கள்ளிக்கோவில் தெரு, புதுத்துறை அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாதுறை. எழிலரசன், மேலக்கரைமேடு, எடக்குடி வடபாதி, சீர்காழி தாலுக்கா, மயிலாதுறை.

### சென்னை வடகிழக்கு மாவட்டம்

தலைவர் - ஜெ.வேலாயுதம் 3/49, தர்மராஜா கோயில் தெரு, மதுரா மேட்டுப்பாளையம், விளாங்காடுபாக்கம், சென்னை - 600052.

துணைதலைவர் - கு.ஏழுமலை, 2/55, காமராஜர் சாலை, மாத்தூர், சென்னை - 600068.

அமைப்பாளர் - **சி.ஏழுமலை** 271, காமராஜர் தெரு, கிராண்ட்லைன், செங்குன்றம், சென்னை - 600052.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.விஜயகுமார் 182, மேட்டு தெரு, வடகரை, செங்குன்றம், சென்னை - 600052. மு.சீனிவாசன் 1/1850, 4வது தெரு, அண்ணா நகர், நல்லூர் ஊராட்சி, சென்னை - 600052.. க.செல்வதாஸ், 403/45, பாரதி நகர், திருவொற்றியூர், சென்னை - 600019. மா.மணி, 328, பஜனை கோவில் தெரு, கிராண்ட்லைன், செங்குன்றம், சென்னை - 600052. கெ.வேதா, 2/278 ஏ, பாரதியார் தெரு, கும்மானூர், சென்னை - 600052. டி. பத்மநாபன், 4/46, பெருமாள் கோவில் தெரு, பாரதி நகர், அலமாதி, சென்னை - 600052. ரா.லோகு, 12ஜி, 25/12, ஈ.டிபிஎஸ் கேம்ப்2, எண்ணூர், கத்திவாக்கம், சென்னை - 600057. எச்.ஜெகன், 14/1, முதல் தெரு, இராமநாதபுரம், திருவொற்றியூர், சென்னை - 600057. வி. பாரதி 4/37, பெருமாள் கோவில் தெரு, கண்ணம்பாளையம், விளாங்காடுபாக்கம், சென்னை - 600052.

### சென்னை தென் மேற்கு மாவட்டம்

தலைவர் - நாகேந்திரன் 72, மீனம்பாள் புரம், அம்பேத்கர் பாலம், சென்னை - 600004.

துணைதலைவர் - ஐ.மணிமாறன், 50பி, பைக்ராப்ஸ் நகர், செனடாப் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018.

அமைப்பாளர் - **புலியூர்.டி.மோசஸ்** 5/7, ரத்தின சபாபதி தெரு, புலியூர்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600024.

துணை அமைப்பாளர்கள் - ச.இளவரசன் 9/25, புதுதெரு, புலியூர்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600024. கௌதம் சி பிளாக், 21, சத்தியவாணி முத்து நகர், மந்தவெளி, சென்னை - 600024. கே. தமிழ்செல்வன், 12, ஏகாம்பரம் தெரு, டாக்டர் அம்பேத்கர், மயிலாப்பூர், சென்னை - 600004. வே.சபாரத்தினம், 33/10, 82வது தெரு, அசோக்நகர், சென்னை - 600083. கோ.புருஷோத்தமன், 43, 58வது தெரு, அசோக் நகர், சென்னை - 600083.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

தலைவர் - க.பாலமுருகன் 5/15, சிவலூர் காலனி, உடன்குடி, தூத்துக்குடி 628203. துணைதலைவர் - பி.ராஜ் 5/24, பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு காலான்கரை, தூத்துக்குடி 628101.

அமைப்பாளர் - **டி.டி.சி.ராஜேந்திரன்** டி.என்.எச்.பி காலனி, எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி 628002.

துணை அமைப்பாளர்கள் - வே.மாடசாமி 3/88, காலனி தெரு, புதுப்பசேரி, புதியம்புத்தூர், தூத்துக்குடி 628402. ரா.துரைமுருகன் 9/210, காமராஜர் தெரு, முப்புலிவெட்டி, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி 628401. ந.சுரேஷ்குமார் 5எஃப், அம்பேத்கர் தெரு, தோப்பூர், திருசெந்தூர், தூத்துக்குடி 628215. எஸ்.பேச்சிமுத்து, 7/55, தன்னூத்து, அணியாபரநல்லூர், தூத்துக்குடி மாவட்டம் 628851. இ.மோகன், 138, கீழ கருங்கடல், கருங்கடல் அஞ்சல், தூத்துக்குடி - 628613

### அரியலூர் மாவட்டம்

தலைவர் - இர. கிருஷ்ணமூர்த்தி, குண்டவெளி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - செந்தில்குமார், அரசு சிமெண்ட் ஆலை, அரியலூர் வட்டம் - மாவட்டம்.

அமைப்பாளர் - **ஆதி. இளங்கோவன்**, செந்துறை, செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - கோ. கனகராஜ், கோக்குடி, திருமானூர் ஒன்றியம், அரியலூர் வட்டம் - மாவட்டம். பழனிவேல், ஒலையூர் அஞ்சல், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம். தங்கப்பிரகாசம், கோடாலிக்கருப்பூர், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். கருணாநிதி, மலத்தான்குளம், திருமானூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம். சகாதேவன், அண்ணா நகர், க.மேட்டுத் தெரு, அரியலூர் வட்டம் - மாவட்டம்.

### தாம்பரம் மாநகரம்

அமைப்பாளர் - **தி.ச. நடராஜன்,** 14, 2வது தெரு, பார்வதிபுரம், திருநீர்மலை பிரதான சாலை, சென்னை - 600 044.

துணை அமைப்பாளர்கள் - மங்களபுரம் எம்.பாபு, 21, 3வது தெரு, மங்களபுரம், மேற்கு தாம்பரம், சென்னை600045. மெக்கானிக் ரவிகுமார், 6, வ.உ.சி.தெரு, ஆனந்தபுரம், கிழக்கு தாம்பரம், சென்னை 600059. மு. சரணவண், 5, சர்ச் தெரு, பழைய பல்லாவரம், சென்னை600 117. எம். தேவபாலாஜி, 2, எம்.ஜி.ஆர்.தெரு, நுத்தஞ்சேரி, மாடம்பாக்கம், சென்னை600 0126. சி. கார்த்திகேயன், 32/2, மாரியம்மன் கோவில் தெரு, செம்பாக்கம், சென்னை - 600 073.

---

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 21-08-2023

**ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

## சென்னைக்கு 384வது பிறந்த நாள்!

# ‘மெட்ராஸ் தினம்’ என்ற ஆளுநரின் வாழ்த்தால் சர்ச்சை!

## தமிழ் ஆர்வலர்கள் கண்டனம்!

சென்னை, ஆக.24-

சென்னை நகரத்துக்கு நேற்று முன்தினம் 384வது பிறந்த நாள் கொண்டாடப்பட்ட நிலையில், கவர்னர் ஆர்.என்.ரவி, ‘மெட்ராஸ் தினம்’ என குறிப்பிட்டு வாழ்த்து தெரிவித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவரது வாழ்த்துக்கு தமிழ் ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இரவு பகலாக எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருக்கும் நமது சென்னை நகரத்துக்கு நேற்று முன்தினம் 384வது பிறந்த நாளாகும். சென்னை மாநகரம் உருவாகி நேற்றுடன் 384 ஆண்டுகளை கடந்து விட்டது. 1939ம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 22ம் தேதியை நாம் சென்னை தினம் என்று கொண்டாடி வருகிறோம். இதற்காக தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை மாநகராட்சி சார்பிலும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை தினத்தையொட்டி, அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் சென்னை தின வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிலையில், சென்னை தினம் கொண்டாடப்பட்ட நிலையில், தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி தமிழில் ‘மெட்ராஸ் தினம்’ எனக் குறிப்பிட்டு தனது வாழ்த்தை தெரிவித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ள தனது வாழ்த்துப் பதிவில், ‘மெட்ராஸ் தினத்தில் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். வியப்பூட்டும் கலாச்சார பன்முகத்தன்மை, ஆழமாக வேரூன்றிய ஆன்மிகம், அறிவார்ந்த வலிமை ஆகியவற்றின் இந்த தொடர்ச்சியை அதே ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் மேலும் முன்னெடுத்து கொண்டாடுவோம்’ என தெரிவித்துள்ளார்.

மெட்ராஸ் என்ற பெயர் சென்னை என அதிகாரப்பூர்வமாக மாற்றப்பட்ட பிறகு, தமிழில் ‘சென்னை தினம்’ என்றே கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் கவர்னர் ஆர்.என்.ரவி, ‘மெட்ராஸ்’ என பதிவிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளது மக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, தமிழ்நாடு அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து வரும் கவர்னர் ஆர்.என்.ரவி, தற்போது ‘மெட்ராஸ்’ தினம் எனக் குறிப்பிட்டு வாழ்த்து தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவரது இந்த நடவடிக்கைக்கு தமிழ் ஆர்வலர்கள் பலர் தங்கள் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர். மேலும் தமிழ்நாடு அரசியல் தலைவர்களும் தமிழ்நாட்டு கவர்னர் தமிழ் மக்களுக்கு ஆதரவாகத் தான் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

---

## திருப்பூர் மாநகராட்சிப் பகுதியில் ரூ.344.36 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணி -

# ரூ.45.25 கோடி மதிப்பீட்டில் மேம்பாலப் பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு !

திருப்பூர், ஆக. 24-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயதிட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சிப்பகுதியில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.344.36 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.45.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாலப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் 18.08.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் ந. தினேஷ்குமார் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி பாண்டியன் நகரில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.250.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்க தொட்டி, சினேகா நகரில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி, சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.31.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தையும், டவுன்ஹாலில் ரூ.54.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மாநாட்டு அரங்கம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கம், ஊத்துக்குளி சாலை, பாளையக்காடு எஸ்.ஆர்.சி.மில் அருகில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.45.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலப் பணி என மொத்தம் 389.61 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இதில் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்ம நாபன், தம்பி ஆர்.கோவிந்தராஜ், மாநகராட்சி துணை ஆணையர் பாலகிருஷ்ணன், மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பரமணியன், உதவி ஆணையர்கள் கண்ணன், வாசு, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாமன்ற உறுப்பினர்கள் தெற்கு மாநகர துணை செயலாளர் பி.ஆர்.செந்தில்குமார், பொருளாளர் ஜி.செந்தூர் முத்து, கல்விக் குழு தலைவர் பெ.திவாகரன், மாலதி கேபிள் ராஜ், வடக்கு மாநகர பொருளாளர் அ.சரவணக்குமார், பகுதி கழக செயலாளர்கள் வேலம்பாளையம் கொ.இராமதாஸ், கொங்கு நகர் போலார் இரா.சம்பத்குமார், திருப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் என். விஸ்வநாதன், வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார், தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.திருநாவுக்கரசு, வட்டக் கழக செயலாளர்கள் ஜானகிராமன், இளங்கோ, ஸ்டார் மணி உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## சத்தீஸ்கர் மாநில

# முதலமைச்சர் பூபேஷ் பாகேல் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஆக. 24-

சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-


**சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் பூபேஷ் பாகேல் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**வெற்றி, வளர்ச்சி மற்றும் வளம் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; “சென்னை தினத்தை”, “மெட்ராஸ் தினம்” என்று திரித்துக் கூறி யிருக்கும் ஆளுநர் ரவிக்கு, கண்டனக் கணைகள் குவிகின்றனவே?

**போண்டி : ஆமாய்யா; தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அறிஞர் அண்ணா ஆகிய அரிய ஆளுமைகளின் பெயர்களைக் கூறத் தவறியது, தேசிய கீதத்தைத் தவிர்த்தது, தமிழ்நாடு என்பதை மறுத்தது, நீட் தேர்வுக்கு ஆதரவு - என்று தொடர்ந்து சர்ச்சைகளை உருவாக்கி, அதன் மூலம் தன்னை உற்சாகப் படுத்திக் கொண்டு, தமிழர் மீது தனக்குள்ள பகை உணர்வையும், பா.ஜ.க.- ஆர்.எஸ்.எஸ். மீதுள்ள பாசத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டே வருகிறார்.**

**அவற்றின் தொடர்ச்சியாகத்தான் தற்போது, “மெட்ராஸ் தினம்” என்று கூறி சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார்.**

**இந்த ஆளுநர் ரவியை, சர்ச்சை பெருக்கி, முரண்பாடுகளின் மூட்டை - என்று அடைமொழி இட்டுதான் அழைக்க வேண்டும்!**

---

## தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில்

# நாதஸ்வரம் - தவில் பிரிவுகளில் இளங்கலை பட்டப் படிப்பு!

## சுற்றுலா, பண்பாடு, அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஆக. 24 -

சென்னை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் செயல்படும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் பட்டயப்படிப்பு தொடங்கப்பட்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

கலை பண்பாட்டுத்துறையின் கீழ் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயமுத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் இசைக்கல்லூரிகள் செயல்படுகின்றன. இக்கல்லூரிகளில் இசை மற்றும் நாட்டிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள் மற்றும் பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன. குரலிசை, வயலின், வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்புகள் உள்ளன.

இவ்வாண்டு சட்டப் பேரவையில், “சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக்கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் பட்டப் படிப்பு தொடங்கப்படும்” என அறிவிக்கப்பட்டது.

சட்டமன்ற அறிவிப்பினைச் செயல்படுத்தும் வண்ணம் 2023-2024 கல்வியாண்டு முதல் நாதஸ்வரம், தவில் பிரிவுகளில் பட்டப்படிப்பு தொடங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

சென்னை மற்றும் திருவையாறு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் பிரிவுகளில் இளங்கலை பட்டப்படிப்புக்குச் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன.

பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் சேரலாம்.

இப்பிரிவுகளில் சேர விரும்புவோர் கலை பண்பாட்டுத்துறையின் இணையத்தளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

இணையத்தள முகவரி www.artandculture.tn.gov.in . விண்ணப்பங்கள் 31.08.2023 மாலை வரை அளிக்கலாம்.

நேரில் விண்ணப்பம் அளிக்க விரும்புவோர் - முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி , டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, இராஜ அண்ணாமலைபுரம், சென்னை 600028 தொலைபேசி எண் 044 24937217 அல்லது முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு தஞ்சாவூர் மாவட்டம்613204 தொலைபேசி எண் 04362261600 அணுகலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக திருச்சி குண்டூர் OFT வளைவு அருகே அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள், கழக இரு வண்ணக் கொடியேற்றி திராவிட இயக்கத் தலைவர்களின் உருவம் பதிக்கப்பட்ட கல்வெட்டுகளைத் திறந்து வைத்து சிறப்பித்தார். அதே போல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக, திருச்சி குண்டூர் ஆர்.எஸ்.வி. திருமண மண்டபத்தில், மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, ‘கலைஞர்’ ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்து சிறப்பித்தார். திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., ஆகியோர் கலைஞர் அவர்களின் பன்முகத் திறமைகளைப் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தினார்கள். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மு.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், ஒன்றிய செயலாளர் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்துகொண்டார்கள்.




**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழுக்குச் செம்மொழித் தகுதி!**



# 32 இடம் பொருள் கலைஞர்






# தமிழுக்குச் செம்மொழித் தகுதி!

## முத்தமிழ் உளியின் இமாலயச் சாதனை!

உலக மொழிகளுள் மூத்ததும், முன்னோடியுமான மொழிகளில் உயிர்ப்போடு திகழும் மொழி நமது தமிழ். உலகின் மூத்த மொழிகள் சில இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால், எழுத்தளவிலும், பேச்சளவிலும் தொன்மைச் சிறப்புடன் விளங்குகிறது தமிழ். அந்தத் தமிழுக்கு அணிகலனாக **'செம்மொழி'** என்கிற தகுதியைக் கொண்டு வந்து சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்கிற தமிழறிஞரே..!

### பரிதிமாற் கலைஞரின் தொடர்ச்சி...

தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர் 1902 -ஆம் ஆண்டில் தமிழ் செம்மொழி என முழங்கினார். அதற்கு முன்பே வெளிநாட்டு அறிஞர் ராபர்ட் கால்டுவெல் 1856-ஆம் ஆண்டில் 'தமிழ் உயர் தனிச் செம்மொழி' என்கிற ஆய்வு நூலில் அதனை வெளிப்படுத்தினார்.

1918-ஆம் ஆண்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ப் புலவர்களின் மாநாட்டிலும், அதே ஆண்டில் நீதிக்கட்சியின் தஞ்சை, திருச்சி பார்ப்பனர் அல்லாதோர் மாநாட்டிலும் செம்மொழிக்குக் குரல் கொடுக்கப் பட்டுள்ளது.

தவிர, கரந்தை தமிழ்ச் சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை உள்ளிட்ட அமைப்புகளும் அந்தக் குரலுக்கு வலுசேர்த்தன. அந்தக் கோரிக்கை சுமார் 150 ஆண்டுகளைத் தொட்ட நிலையில், கலைஞரின் கைகளுக்கு வந்து, தமிழுக்குச் சூட்டப்பட்ட மாலையாக மாறியது 2004-ஆம் ஆண்டில்..!

### சுதந்திரத்துக்குப் பின்னர் கோரிக்கை

இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த மவுலானா அபுல்கலாம் ஆசாத் 1951-ஆம் ஆண்டில், சாகித்ய அகாடமியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்திய அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 மொழிகளில், தமிழ் செம்மொழியென அங்கீகாரம் செய்வதற்குரிய தகுதிகள் அனைத்தும் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் 1955-ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கீழ்த்திசை மாநாட்டில் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இந்த அங்கீகாரத்தை வழங்கி, அரசுக்கு வேண்டு கோள் வைத்தார்.

செம்மொழிப் போராட்டத்தின் அடுத்தக் கட்டத்தை, 1966-ஆம் ஆண்டில் **'மொழி ஞாயிறு'** தேவநேயப் பாவாணர் தொடங்கினார். **'உலகின் முதன்மை உயர் தனிச் செம்மொழி'** என அவர் ஆங்கிலத்தில் வெளியிட்ட நூல் செம்மொழித் தகுதிக்கான அசைக்க முடியாத ஆதாரமாக இருந்தது. பாவாணர் எடுத்து வைத்த ஆதாரங்கள் அனைத்தும், பிறமொழி அறிஞர்கள், மத்தியில் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருந்தன.

பாவாணரைப் பாராட்டிப் போற்றும் வகையில், "செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஒன்றை உருவாக்கி, அதன் முதல் இயக்குநராக நியமித்தார் கலைஞர். நூற்றாண்டுகளைக் கடந்த செம்மொழிக் கோரிக்கை இப்போது கலைஞர் நிறைவேற்றித் தர வேண்டிய கடமையாக அவரிடம் வந்து சேர்ந்தது.


### கோப்பு முடித்து வைக்கப்பட்டது!

1981-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, தமிழறிஞர் மணவை முஸ்தபா செம்மொழிக் கோரிக்கையை வைத்தார். அப்போது அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர், 'அரசுக்குக் கோரிக்கையாக அனுப்பவும்' எனக் கேட்டுக் கொண்டார். அந்தக் கோரிக்கை அனுப்பி நான்காண்டுகள் கடந்து, அது குறித்து நினைவூட்டிய மணவை முஸ்தபாவுக்கு, அரசுச் செயலாளர் அனுப்பிய பதிலில் "தமிழைச் செம்மொழியாக்கினால், செத்த மொழிகளின் பட்டியலில் சேர்த்து விடுவதாகிவிடும் என்பதால், இந்தக் கோப்பு இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது" என்று இருந்தது.

"செம்மொழிக் கோரிக்கைக்கு இந்தக் கதி ஏற்பட்ட பிறகு, மாநாடுகளிலோ, கருத்தரங்குகளிலோ இது குறித்து யாரும் மீண்டும் குரல் எழுப்பியதாகத் தெரியவில்லை" எனப் பதிவு செய்கிறார் கலைஞர். தமிழ் நிலத்தின் கடவுள் வாழ்த்தாகத் தமிழ்த்தாய் வாழ்த்தை ஒலிக்க வைத்த கலைஞர், தமிழ் அடைய வேண்டிய உயரத்துக்கு முனைப்பு காட்டத் தொடங்கினார்.

### நிலமும் - கொண்டாட்டமும்

2008-ஆம் ஆண்டு, சென்னை, திருவல்லிகேணியில் செம்மொழித் தமிழ் ஆய்வு மைய நிறுவனத்தைத் திறந்து வைத்தார் கலைஞர். மைசூரில், செயல்பட்டு வந்த மத்திய செம்மொழி ஆய்வு மையத்தைச் சென்னையில் நிறுவியதுடன் அதற்கென, சென்னை பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலம் ஒதுக்கினார். தமிழ், செம்மொழியாக அறிவிக்கப்பட்டதைப் பெருமைபடுத்தும் வகையில், கோவையில் 2010-ஆம் ஆண்டு ஜூன் 23- 27 ஆம் தேதி வரை என 5 நாட்கள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கொண்டாடப் பட்டது.



### வலுவான போராட்ட முறை

தமிழின் பெருமைகளைக் கோரிக்கைகளாக ஒன்றிய அரசுக்கு வலியுறுத்திக் கொண்டிருப்பது ஒரு பணி என்றால், மாநில அரசு அதற்கான வலுவான பணிகளைச் செய்வது எனத் தனி அமைச்சகத்தை உருவாக்கத் திட்டமிட்டார்.

நான்காவது முறையாக 1996-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கலைஞர், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை எனப் புதிதாகத் தனி அமைச்சகத்தை உருவாக்கி, அந்தத் துறையின் தலையாயப் பணி தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தருவது என வழிகாட்டுதல்களை வழங்கினார்.

அமைச்சகம் தொடங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாகவே, பல்கலைக்கழகங்களின் அந்நாள், முன்னாள் துணைவேந்தர்கள், தமிழறிஞர்கள், ஆசியவியல் ஆய்வு நிறுவன முன்னாள் இயக்குநர் ஆகியோரின் ஆலோசனைகளுடன் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

மறுக்க முடியாத சான்றுகளுடன், வரலாற்றுப் பின்னணியுடன் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் கருத்துரைக்காகச் சென்றது. இதற்கிடையே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாநில அரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இப்படியாகத் தமிழ், செம்மொழி என அறிவிக்கப்படுவதற்கு, அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும், அரசளவிலும் கழக அரசால் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி என இதனைக் கலைஞர் பதிவு செய்கிறார்.

### செம்மொழித் தகுதி

கழக அரசு அனுப்பிய அறிக்கையினை அனைத்துக் கோணங்களிலும் அணுகிய, இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிகளும் தமிழுக்கு உள்ளதாக ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆனாலும், எதிர்பார்த்த அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பதால், தொடர்ந்து அழுத்தம் கொடுக்கிறார்.

2000-ஆம் ஆண்டில் டெல்லியிலேயே கோரிக்கை மாநாடு, 2001-ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதி, 2002-ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ச் செவ்வியல் மொழி, திருக்குறள் தேசிய நூல் என முப்பெரும் முழக்கத்துடன் மாநாடு, 2003-ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டக் கழக மாநாட்டில் தீர்மானம், 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை என தொடர்ச்சியாக செம்மொழித் தகுதி பற்றிப் பேசியது கழகம். இந்த நிலையில், அரசியல் பங்கு காரணமாக 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றக் கூட்டுக்கூட்டத்தில் தமிழ் செம்மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.


### ஈடான மகிழ்ச்சி

"தந்தை பெரியார் தட்டிக் கொடுத்துப் பாராட்டிய போதெல்லாம், அறிஞர் அண்ணா அரவணைத்து உச்சி முகர்ந்து அன்புமழை பொழிந்த போதெல்லாம் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி என்னுள் குடிகொண்டது" என அன்றைய நாள் குறித்துக் குறிப்பிட்டார் கலைஞர்.

**"நான் உளி. சிற்பிகள் பலர்"** எனத் தனது இமாலயச் செயலை அப்போது அடக்கத்துடன் குறிப்பிட்டவர் கலைஞர். அந்த உளியின் ஓசை தான், செம்மொழியான தமிழ்மொழியாம் என 2010-ஆம் ஆண்டில் செம்மொழி மாநாடாக ஒலித்தது. தமிழுக்குக் கிடைத்த உயரத்துக்குத் தமிழ் நிலத்தின் தலையாய மகனாகக் கொண்டாடப்படுவார் முத்தமிழறிஞர்.

...வலம் வருவோம்

## டாக்டர்ஸ் தமிழ்நாடு!




**த**மிழ்நாட்டின் தொழிற் துறை வளர்ச்சி குறித்துப் பேசியும் எழுதியும் வருபவர் சுரேஷ் சம்பந்தம். தொழில் முனைவோரான இவர், சர்வதேச அளவிலான அனுபவங்களுடன் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எனப் பல திட்டங்களை முன்வைத்து செயல்பட்டு வருபவர். **'ட்ரீம் தமிழ்நாடு'** என இவரது தொழில் திட்டம் அனைவராலும் கவனிக்கப்படுவது. தமிழ்நாட்டு கட்டமைப்புகளைப் போல இந்திய அளவில் எங்கும் இல்லை எனக் கூறும் இவர், நீட் என்கிற அநீதியான தேர்வு முறை தமிழ்நாட்டு மருத்துவக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் எனக் கடுமையாகச் சாடியுள்ளார். இவரது 'ட்ரீம் தமிழ்நாடு' வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் ஒன்றில், தமிழ்நாட்டு மக்கள் தொகையில் ஆயிரம் பேருக்கு 4 மருத்துவர்கள் உள்ளனர் என்றும், இந்திய அளவிலான விகிதம் ஒரு மருத்துவருக்கும் கீழே உள்ளது என்றும் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டுடன் ஒப்பிட்டால் ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளின் மருத்துவர் விகிதாச்சாரம் குறைவு என்றும் கூறுகிறார்.

நீட் தேர்வு என்கிற அநீதியான தேர்வு முறைமை தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவுடன் மட்டுமல்ல, அடுத்த 10 ஆண்டுகளின் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பையும் கேள்விக்குள்ளாக்கும். அதற்குள் நாம் அதை முறியடிப்போம்.

## ஃப்ளாஷ்பேக்



### பாராட்டு சால்வை!



புகழேந்தி

1993-ஆம் ஆண்டு கழகம் பிளவைச் சந்தித்திருந்த நேரம், தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து கழக மாணவர் அணி சார்பாக கருத்தரங்கம், கவியரங்கம் நடத்த முடிவு செய்திருந்தோம். அப்போது, நான் தென்சென்னை மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராகப் பொறுப்பு வகித்தேன். நானும் இன்றைய அரசுக் கொறடா நண்பர் கோவி.செழியனும் இணைந்து சென்னை எழும்பூர் இம்பீரியல் ஹாலில் நிகழ்ச்சியை நடத்தினோம். தலைவர் கலைஞர் வருகை தந்தார். நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தியதற்காக தலைவர் அவர்கள் எங்கள் இருவரையும் பாராட்டி, சால்வை அணிவித்த போது எடுத்த இந்தப் படத்தை எனது வாழ்நாளின் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன்.

**-நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், பண்ருட்டி, கடலூர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### 30 ரூபாய் பொய் வழக்கு!

**1976-ஆம் ஆண்டு, ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டதும், கழக முன்னோடிகள் பலரும் கைது செய்யப் பட்டனர். அப்போது, முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டு அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன. அந்தச் சங்கங்களின் தலைவர்களாக இருந்த கழக முன்னோடிகள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு கைது செய்யப்பட்டனர். தொலைபேசியில் நிலுவை 30 ரூபாய், பயணச் செலவு அதிகப் பற்று 43 ரூபாய் என்றெல்லாம் பொய் வழக்குகள் போடப்பட்டன. ஆனால், அந்த வழக்குகள் எதுவும் நிற்கவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 219




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.